# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 250 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 18, செவ்வாய்க்கிழமை 02.08.2016


## மக்கள் கருத்து

- தென்பகுதி மக்கள் அனுபவிக்கும் உரிமைகள் வடபகுதி மக்களுக்கும் வேண்டும்.
- நல்லாட்சியிலும் இன வேறுபாடு காட்டப்படுகிறது.
- மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அனுமதி வேண்டும்.
- காணாமற்போனோர் பணியகத்தில் மாற்றம் வேண்டும்.
- பன்னாடுகள் அங்கீகரித்த குழுவே விசாரிக்க வேண்டும்.

**பரீட்சையை சிறப்பாக எதிர்கொள்ளுங்கள் மாணவ மணிகளே!**

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவ மணிகள் மிகத் திறமையுடன் பரீட்சையை எதிர்கொண்டு சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு 'உதயன்' தனது மனமார்ந்த வாழ்த்தைத் தெரிவிக்கிறான்.

முச்சந்தி முரளி






### சிறிசேனவின் அப்பக்கடை

கொழும்பு, ஓக. 2
"இது சிறிசேனவின் அப்பக் கடை" என்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக கூட்டு எதிர்க்கட்சியினர் நேற்றுக் கூச்சலிட்டனர். பக். 23

# சிறையிலே அடைத்தாலும் ஆட்சியைக் கவிழ்ப்போம்

### மகிந்த ராஜபக்ச நேற்றுக் கொழும்பில் சூளுரை போர்க்குற்ற விசாரணைக்கும் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 2
இராணுவத்தினரைப் பலிக்கடாவாக்கும் போர்க்குற்ற விசாரணைக்கு மக்கள் ஒருபோதும் அனுமதியளிக்கக் கூடாது. இதற்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டும். எங்களைச் சிறையில் அடைத்தாலும் இந்த ஆட்சியைக் கவிழ்க்கும் எமது பயணம் தொடரும். ஆட்சியை நிச்சயம் கவிழ்ப்போம். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சூளுரைத்தார்.
அரசுக்கு எதிராக மகிந்த ஆதரவுப் பொது எதிரணி பேராதனையில் கடந்த 28ஆம் திகதி ஆரம்பித்த பாதயாத்திரை கொழும்பை நேற்று வந்தடைந்தது. பாதயாத்திரையின் நிறைவில் இறுதிக் கூட்டத்தை நடத்துவதற்கு இடம் கிடைக்கவில்லை. இறுதியில் லிப்டன் சுற்றுவட்டத்தில் பாதயாத்திரையை முடித்துக்கொண்டு, அங்கேயே பொதுக் கூட்டத்தையும் பொது எதிரணி நடத்தியது.
பாதயாத்திரையில் பங்கேற்ற பலலட்சம் மக்களால் வீதிகள் சனத்திரளில் நிறைந்தி பக். 23



### தந்தையர் நினைவாக இன்று மரம் நடுங்கள்

*ஆடி அமாவாசை தினத்தில் யாழ். அரச அதிபர் வேண்டுகை*

யாழ்ப்பாணம், ஓக. 2
இன்றைய தினத்தில் பிதிர்க்கடன் செலுத்தும் ஒவ்வொருவரும் தமது தந்தையர் நினைவாக மரம் நடுகையில் ஈடுபடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார் யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன். யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.
யாழ். மாவட்டத்தில் அதிகளவில் மரங்கள் பக். 23

## இன, மத ரீதியான கட்சிகளுக்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு

கொழும்பு, ஓக. 2
இன மற்றும் மத ரீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளைத் தடைசெய்யும் உத்தரவை பிறப்பிக்க முடியாதென்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
வழக்கறிஞர் பிரசன்னா லால் டி அல்விஸ் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்த பின்னர், நீதிபதிகள் இந்த உத்தரவைப் பிறப்பித்தனர்.
மனுவில் பிரதிவாதிகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பொதுபல சேனா அமைப்பு உட்பட இன மற்றும் மத ரீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள 27 அமைப்புக்கள் பட்டியலிடப்பட்டிருந்தன.
இன மற்றும் மத ரீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சி காரணமாகச் சமூகத்தில் நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக இந்த மனு மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.
அவ்வாறான கட்சி பக். 23

### தீப்பெட்டியின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 2
தீப்பெட்டி விலை ஒரு ரூபாவால் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டது என்று இலங்கை பாதுகாப்பான தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கம் அறிவித்தது. தீப்பெட்டி பக். 23

## மன்னார் மர்மக் கிணற்றை தோண்டும் பணி ஆரம்பம்

### இரு எலும்புக்கூடுகள் நேற்று மீட்பு



மன்னார், ஓக. 2
மன்னார் - திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு அருகே கண்டுபிடிக்கப் பட்ட மனிதபுதைகுழிக்கு அண்மித்த பகுதியில் உள்ள சந்தேகத்துக்கு இடமான கிணறு மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் தோண்டப்பட்டது. அதற்குள்ளிருந்து இரண்டு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட எலும்புகள் மனிதர்களுடையவை தானா என்பது தொடர்பான பகுப்பாய்வுக்காக அவை கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இன்றும் அகழ்வு தொடரவுள்ளது.
வீதி அகலிப்புப் பணியின் போது வீதியோரம் இருந்த பக். 23

# 320 மீனவக் கிராமங்கள் வடக்கில் அபிவிருத்தியாகும்

### ஆசிய வங்கியின் 65 மில்லியன் டொலர் நிதி வளத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 2
வடக்கு மாகாணத்தில் 320 மீன்பிடிக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்கான நிதி வளத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகின்றது.
"வடக்கு மாகாணத்தில் நிலையான கடற்றொழில் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பக். 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்குக்குள்ள உரிமைகளை வடக்குக்கும் வழங்கவேண்டும்

## நல்லிணக்கத்தை எட்டும் வழி அதுவே எனக் கருத்தறியும் செயலணியிடம் தெரிவிப்பு



தென்னிலங்கை மக்களுக்கு என்னென்ன உரிமைகள் எல்லாம் இருக்கின்றதோ அந்த உரிமைகள் அனைத்தும் வடக்கு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி மக்கள் நல்லிணக்க செயலணியினரிடம் தெரிவித்தனர்.

போர்க் குற்ற விசாரணைகளை எவ்வாறு முன்னெடுப்பது, காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் அமைப்பது என்பவை தொடர்பாக மக்களுடைய கருத்துக்களைக் கேட்டறியும் நல்லிணக்க செயலணியின் கிளிநொச்சி வலய அமர்வு நேற்று பளை பிரதேச செயலகத்தில் நடந்தது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே மக்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

இராணுவத்தால், அரச திணைக்களங்களால் வலுக்கட்டாயமாக அபகரிக்கப்பட்ட எமது காணிகளுக்கு நாங்கள் செல்வது முதல் இறந்தவர்களை நினைவு கூருவது வரை வடக்கு மக்களுக்கு அரசு பல தடைகளை விதித்துள்ளது. பேச்சுச் சுதந் திரம், உண்மைகளைக் கூறுவதற்கான சுதந்திரம், போராட்டம் நடத்துவதற்கான சுதந்திரம் என்பனவும் வடக்கு மக்களுக்கு பல சந்தர்ப்பங்களில் மறுக்கப்பட்டன. தென்னிலங்கையில் அவ்வாறு இல்லை. இது நல்லாட்சியிலும் இன வேறுபாட்டைக் காட்டுவதாக உள்ளது.

நல்லிணக்கம் உருவாக வேண்டும் என்றால் தென்பகுதியில் உள்ளவர்களுக்கு உள்ள உரிமைகள் வடக்கில் உள்ளவர்களுக்கும் கிடைக்கவேண்டும். கல்விமான்களை உருவாக்குகின்ற பல்கலைக் கழகத்தில் அண்மையில் ஏற்பட்ட பிரச்சினை கூட நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதாக அமைந்தது.

இங்குள்ளவர்கள் தென்பகுதிக்கு வேலை வாய்ப்புத் தேடிச் செல்கின்றனர். இங்கும் அங்குள்ளவை போன்ற நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு வேலை வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும்.

மாவீரர் துயிலும் இல்லங்களை அமைத்து வணங்க இடம் கொடுப்பதால் அரசுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. இவ்வாறான செயற்பாடுகள் மூலமே நல்லிணக்கத்தை முன்னெடுக்க முடியும். மாவீரர் துயிலும் இல்லங்களை வைத்து அரசியல் செய்ய நினைத்தால் அது நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இலங்கைக்குள்ளேயே காணாமல் ஆக்கப்பட்டார்கள். அரசு நினைத்தால் நாளைக்கே அவர்கள் தொடர்பான தேடுதலை மேற் கொள்ளலாம். காணாமற்போனோர் பணியகம் என்பது எம்மை புண்படுத்துவதாக அமைந்துள்ளது. அதில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும். அரசியல் அதிகாரங்களை எமக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். அப்போதே நல்லிணக்கத்தை எட்டலாம் – என்றனர். (ற-21,ரி3)

## பன்னாடுகள் அங்கீகரித்த குழுவே விசாரணைகளை நடத்தவேண்டும்

### மக்கள் கருத்தறியும் செயலணியிடம் கிளிநொச்சி மாவட்ட மக்கள் வலியுறுத்து

கிளிநொச்சி, ஓக.2

பன்னாடுகளால் அங்கீகரிக்கப் பட்ட விசாரணக் குழுவே விசாரணைகளை நடத்தவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக இராணுவத்தினர் யாராவது தகவல் வழங்க முன் வந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு நல்லிணக்கம் தொடர்பில் கருத்தறியும் செயலணியிடம் கிளிநொச்சி மாவட்ட மக்கள் தெரிவித்தனர்.

போர்க்குற்ற விசாரணைகளை எவ்வாறு முன்னெடுப்பது மற்றும் காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் அமைப்பது தொடர்பாக மக்களுடைய கருத்துக்களைக் கேட்டறியும் நல்லிணக்கச் செயலணியின் கிளிநொச்சி வலய அமர்வு நேற்று பளைப் பிரதேச செயலகத்தில் நடைபெற் றது.

அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை இழுத்தடிக்கப்படுகின்றது. அரசு மீது மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கண்டுபிடித்துத் தருவோம் என்று கூறிக்கொண்டிருப்பதை ஏமாற்றும் செயலாகவே நாம் கருதுகின்றோம்.

இந்த விடயங்கள் தொடர்பில் பன்னாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட குழு விசாரணை நடத்தவேண்டும். இது தொடர்பில் இராணுவத்தினர் யாராவது தகவல் தெரிவிக்க முன்வந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும். தகவல்களை மறைப்பவர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் இதுவரை விடுவிக்கப்படாது இராணுவம் கையகப்படுத்தியுள்ள பொதுமக்களின் காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளே வடக்கு மக்களின் மத்தியில் நிலையான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்.

இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டவர்கள், இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் பற்றிய எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை. இந்த நிலமையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று அரசு கூறுகின்றது. அதை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசு இவ்வாறு கூறுவதே பெரும் குற்றம். இதை எப்படி நல்லாட்சி என்பது?

கடந்த காலத்தில் பலர் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். இராணுவம் சுட்டுக் கொன்றது உண்மை. விரும்பியோ, விரும் பாமலோ இந்த அரசு குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்காது. அதனால் பன்னாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட விசார ணைக் குழு விசாரணை நடத்த வேண்டும்– என்றனர். (ற-21,ரி3)



ஆயிரக்கணக்காண பக்தர்கள் புடைசூழ மாவிட்டபுரம், மாவை கந்தனின் இரதோற்சவம் நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (101)

### கோப்பாய் பிரதேச செயலர் நேற்று மாற்றம்

கோப்பாய் பிரதேச செயலராக திருமதி சுபாஜினி மதியழகன் நேற்றுப் பதவி ஏற்றார்.

இதுவரையில் கடமையாற்றிய ம.பிரதீபன் நேற்று முதல், முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலராகப் பதவியேற்றார். அவரை அங்கு இடமாற்ற வேண்டாம் என்று ஒரு பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோதும் திட்டமிட்டபடி இடமாற்றம் நிறை வேறியது. (உ-5-101)

## வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்கள் மாகாண சபைச் சட்டத்தின் கீழ் விரைவில்

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச வைத்திய சாலைகளில் அபிவிருத்திச் சபை உறுப்பினர்களும், மாவட்ட ஆலோசனைச் சபை உறுப்பினர்களும்நியமிக்கப்படவுள்ளனர். மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட நியதிச் சட்டத்தின் அடிப்படையில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைகள் உருவாக்கப்படவுள்ளன.

மாவட்ட ஆலோசனைக் குழுவின் தலைவராக மாகாண சுகாதாரப் பணிப்பாளரும், அவரின் தலைமையில் பதவி வழியாகத் தெரிவுசெய்யப்படும் மேலும் பத்துப் பேரும் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாகச் செயற்படுவர்.

ஒவ்வொரு வைத்தியசாலை மற்றும் நிறுவனத்தினதும் அபிவிருத்திக்காக ஓர் அபிவிருத்திக் குழுவை அமைச்சரின் அனுமதியுடன் செயலாளர் நியமிக்கலாம்.

அபிவிருத்திக் குழுவில் பதவி வழி உறுப்பினர்களாக வைத்தியசாலை அல்லது நிறுவனப் பொறுப்பு வைத்திய அதிகாரி, பிரதேச செயலாளர், கட்டடத் திணைக்களத் தொழில்நுட்ப அலுவலர் தரத்துக்குக் குறையாத பிரதிநிதி, உள்ளூராட்சி மன்றச் செயலாளர் அல்லது ஆணையாளர்போன்றோருடன் அந்த நிறுவனத்தின் அலுவலர்களிலிருந்து நான்கு பிரதிநிதிகள், நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்தில் சுகாதார சமூக சேவைகள் செயற்பாடுகளில் ஈடு பாடுள்ள ஆறு பேருக்கு மேற்படாத நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் செயற்படுவர். மாவட்ட ஆலோசனைக் குழு மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் இரண்டு வருடங்களாகும்.

இந்த நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் முன்னர் வைத்தியசாலைகளில் உள்ள அபிவிருத்திக் குழுக்களை அனைத்து தேவைகளுக்காகவும் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குழுவாகக் கருதமுடியும். இந்த நியதிச் சட்டத்தின் உப பிரிவு 1 இல் குறிப் பிட்டவாறு இந்த நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய புதிய குழுவொன்று அமைக்கப்படும் வரை அத்தகைய குழுவின் அங்கத்தவர்கள் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவர்களாகப் பதவியைத் தொடர முடியும்– என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

### தொண்டர் ஆசிரியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக.2

வடக்கின் 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நேற்றுப் போராட்டம் நடத்தினர். வடக்கு ஆளுநர் அலுவலகத்தை அவர்கள் முற்றுகையிட்டனர்.

தமக்கு நியமனம் வழங்கப்படுவது கடந்த 6 மாதமாக இழுத்தடிக்கப்படுகின்றது என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர். தமக்குரிய நியமனத்தை எழுத்துமூலம் வழங்கவேண்டும் என்று வற்புறுத்தினர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் பேச்சு நடத்தினார். ஆனால் அது தோல்வியடைந்தது.

(விரிவு: பக்கம் 07)

### மூதூர் படுகொலை நீதி கிடைக்கவில்லை

தன்னார்வத் தொண்டு நிறுவனமான பட்டினிக்கு எதிரான அமைப்பின் (அக்ஸன் பாம்) ஊழியர்கள் 17 பேர் மூதூரில் படுகொலை செய்யப்பட்டு 10 ஆண்டுகள் கடந்து விட்டபோதும் நீதி நிலை நாட்டப்படவில்லை என்று மனித உரிமைகள் கண் காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது. இராணுவத்தினரே இந்தக் கொலைகளைச் செய்தனர் என்றும் நீண்ட காலமாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

(விரிவு: பக்கம் 05)

### ஆட்சியைத் தம்மிடம் தர ஜேவிபி மன்றாட்டு

ரணில் – மைத்திரி கூட்டணி 5 வருடங்கள் ஆட்சியிலிருந்தாலும் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது. மகிந்தவாலும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. இந்த இருதரப்புகளுமே நாட்டைச் சீரழித்து அரசியலை அசிங்கப்படுத்திவிட்டன. [illegible] ஆட்சியை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். என்கிறார் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்க.

(விரிவு : பக்கம் 04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி சுவீகரிப்பு நடவடிக்கையை மீண்டும் ஆரம்பித்தது படைத்தரப்பு

முல்லைத்தீவு, ஓக. 2

பாதுகாப்புத் தரப்பினர் தம் வசப்படுத்தி வைத்துள்ள காணிகளைச் சட்டரீதியாகப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் பாதுகாப்புத் தரப்பினரால் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முள்ளி வாய்க்கால் கிழக்கு வட்டுவாகல் கிராமத்தில் கடற்படையினர் நிலை கொண்டுள்ள 617 ஏக்கர் காணி நாளை புதன்கிழமை நில அளவை செய்யப்படவுள்ளது.

''கடற்படையினரின் தேவைக்குக் காணியை வழங்க முடியாது என்று ஆரம்பத்திலிருந்தே தெரிவித்து வருகின்றோம். நில அளவையை எதிர்த்துப் போராட்டம் நடத்துவோம். சகலரையும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கக் கோருகின்றோம்" என்று காணிகளின் உரிமையாளர்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

பாதுகாப்புத் தரப்பினர் தாம் கையகப்படுத்திய தனியார் காணிகளை சட்டரீதியாகப் பெற் றுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். மகிந்த அரசின் காலத்தில் இந்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு தனியான அலுவலகமும் அமைக்கப்பட்டிருந்தது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் காணி சுவீகரிப்பு நடவடிக்கை தணிந்திருந்தது. இருப்பினும் ஒரு சில இடங்களில் சுவீகரிப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பொது மக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. முள்ளி வாய்க்கால் கிழக்கில் வட்டுவாகலில் 617 ஏக்கர் காணியை கடற்படையினர் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர்.

இந்தக் காணியை சுவீகரிப்பதற்கு முன்னோடியாக நில அளவை மேற்கொள்வதற்கு 5 தடவைகளுக்கு மேல் முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு தடவையும் காணி உரிமையாளர்களின் எதிர்ப்பினால் இந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. காணி உரிமையாளர்கள் இந்தக் கலந்துரையாடலில், தமது காணியை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடற்படையினருக்கு வழங்க மாட்டோம் என்று உறுதியாகத் தெரிவித்திருந்தனர்.

அப்படி இருந்தபோதும், மேற்படி காணியை சுவீகரிப்பதற்கு முன்னோடியாக நிலஅளவை நடவடிக்கை மீளவும் இடம்பெறுவதற்கான அறிவித்தல் ஒட்டப்பட்டது.

நாளை புதன்கிழமை ஆரம்பமாகும் நிலஅளவை நடவடிக்கை வெள்ளிக்கிழமை வரையில் நீடிக்கும் என்றும், காணி உரிமையாளர்களை ஆவணங்களுடன் வருமாறும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (உ-5)

# வெலிக்கடை சிறை முன் 8ஆம் திகதி போராட்டம்

## அரசியல் கைதிகள் விடுதலை வலியுறுத்தி

கொழும்பு, ஓக. 2

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையின் முன்பாக எதிர்வரும் 8ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுவிக்குமாறு கோரியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடக்க உள்ளது. அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கம் இந்தப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளது.

2012ஆம் ஆண்டு சிறைச்சாலையில் மிகமோசமாகத் தாக்கப்பட்டதன் காரணமாக தமிழ் அரசியல் கைதி டில்ருக்சன் உயிரிழந்த தினத்தில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் அருட் தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னைய அரசைப்போன்று இந்த அரசும் அரசியல் கைதிகள் விடயத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைப்பாட்டையேபின்பற்றுகின்றது. இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை, பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களே உள்ளனர் என்று நல்லாட்சி அரசிலுள்ள அனைவரும் தெரிவித்து வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் இதையே தெரிவித்து வந்தார். தற்போதும் தெரிவித்து வருகின்றார். தமிழ் அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தைக் காத்திரமான விதத்தில் கையாளவில்லை. தமிழ் சிவில் சமூக அமைப்புகளும் இதே நிலையிலேயே உள்ளன. வடக்கு, கிழக்கிலுள்ள சிவில் சமூக அமைப்புகள் அன்றாட நெருக் கடிகள் குறித்துக் கவனம்செலுத்த வேண்டிய நிலையிலுள்ளன. கண்ணுக்கு முன்னால் உள்ள நெருக்கடிகளைக் கையாள வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர்.

1983ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை இலங்கைச் சிறைகளில் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 100 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். 2012 ஜூலை மாதம் நான்காம் திகதி கணேசன் நிமலரூபன் கொல்லப்பட்டார்.

2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வவுனியா சிறையிலிருந்து அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை கொழும்பிலிருந்து சென்ற இராணுவத்தினர் தாக்கினர். அதி லேயே நிமலரூபன் கொல்லப்பட்டார். அவர் மிகமோசமாகத் தாக்கப்பட்டதை, கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் அவர் தாக்கப்பட்டதை அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் காண்பித்தன. அவருடன் சேர்ந்து தாக்குதலுக் குள்ளான டில்ருக்சன் ஒரு மாத காலம் கோமா நிலையில் இருந்த பின்னர் ராகம மருத்துவமனையில் உயிரிழந்தார்.

டில்ருக்சன் உயிரிழந்த அந்த நாளை நினைவுகூர்ந்தே எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையின் முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரியும், பயங்கர வாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும் - என்றார். (உ-5)

# குருபூசை நிகழ்வு

யாழ். கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தின் ஏழாவது குரு பீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் 10ஆவது குருபூசைதினம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு வேதாந்த மடத்தில் இடம்பெறவுள்ள து. ஆன்மிக வாழ்வியல் எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக மூத்த உதவிப் பதிவாளர் சைவப்புலவர் எஸ்.கே. என்.தவராசா சொற்பொழிவாற்றுவார். (ற-ரி)

# அரசியல் கைதிகளின் உறவினருக்கு அழைப்பு

கொழும்பு, ஒக் 2

நாடெங்கிலும் உள்ள சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் போர்குற்ற விசாரணைப் பொறிமுறை பற்றிக் கருத்தறியும் நல்லிணக்கச் செயலணி அமர்வுகளில் பங்கு பற்றி விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும், இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது,

தமிழ் கைதிகளின் விடுதலை என்பது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு அவசியமான ஒன்று என்றும் சமூகம் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் விடுத்த அறிக்கையில் தெரிவித்ததாவது:

நல்லிணக்கப் பொறிமுறை உருவாக்கம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்களிடம் கருத்தறியும் வலய மட்ட செயலணியின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக் குழுவின் செயற்பாடானது போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அதிலிருந்து எவ்வாறு மீள முடியும் என்று அவர்களிடமே கருத்துக்களைக் கேட்டறிந்து அறிக்கை யிடுவது ஆகும். எனவே நாடெங்கிலும் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் இச் செயலணி அமர்வுகளில் பங்குபற்றி விவரங்களைப் பதிவுசெய்து தமது நேசத்துக்குரியவர்களின் விடுதலையின் அவசியத்தை தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

மக்கள் கருத்தறியும் குழுவினர் வடக்கு கிழக்கின் சகல மாவட்டங்களிலும் நாடு முழுவதும் பதினைந்து கிளைக் காரியாலயங்களை நிறுவித் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். மேல் மாகாணத்திற்கான தலைமை அலுவலகம் இலக்கம் 24/13, விஜயபா மாவத்தை, நாவல வீதி, நுகேகொட எனும் முகவரியில் அமைந்துளது.

அமர்வுகள் தொடங்கப்பட்டுள்ளமையால், பதிவுசெய்யத் தவறியவர்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள இணைப்பாளர்களுடன் பிரதேச செயலகங்கள் ஊடாகத் தொடர்புகொண்டு தமது கருத்துக்களை எழுத்துமூலம் பதிவுசெய்ய முடியும். ஒகஸ்ட் மாத இறுதிக்குள் இப்பணி முழுமைப்படுத்த இருப்பதனால் கருத்துக்களை உடன் பதிவு செய்வது அவசியமாகும். என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-21)

விற்பனைக்குண்டு
பழைய பாவித்த பொருள்கள் விற்பனைக்குள்ளன.
1.L.G.Model Double Door Fridge.
2. Washing Meachine L.G.Automatic
3.Dining Table கண்ணாடி மேசை, 10 கதிரைகளுடன்
4. Generator புதியது.
5. கண்ணாடி அலுமாரி Steel
077 174 7518, 076 907 4782

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 21
சீட்டிழுப்பு திகதி 2016.08.01
வெற்றி இலக்கங்கள்
02 14 25
50
9,420,720/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1284
சீட்டிழுப்பு திகதி 2016.08.01
வெற்றி இலக்கங்கள்
10 53 56 57 I
ரூ. 20,884,860/=

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 531
சீட்டிழுப்பு திகதி 2016.08.01
01 26 49 53 U
ரூ. 43,631,820/=

வேலை வாய்ப்பு
புதியதோர் எதிர்காலத்தை நோக்கி....
வவுனியா,மன்னார்,கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள்உள்ளன. 15 பேருக்கு மட்டும்.
குறிப்பு:- தங்குமிடம்,உணவுவசதிகள் உண்டு,
வயதெல்லை 18-40
இன்றே உடன் அழைக்க,
0772302795,0771363797

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் – மைத்திரி ஆட்சியில் நாட்டின் பிரச்சினைகள் தீராது

## ஜே.வி.பியின் தலைவர் கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 2
ரணில் – மைத்திரி கூட்டணி 5 ஆண்டுகளுக்குத்தொடர்ந்தாலும் நாட்டின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாது. நடைபவனி சென்று மகிந்தவால் ஆட்சியை மீண்டும் கைப்பற்ற முடியாது. இரண்டு தரப்பினருக்குப் பதிலாகவும் மக்கள் எமக்குச் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.
மகிந்தவின் நடைபவனி தொடர்பில் கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகள், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் என்று பல்வேறு பிரச்சினைகள் இருக்கும் நிலையில் அரசுக்கும், மகிந்த அணியினருக்கும் நடைபவனியே முக்கியமாகத் தெரிகின்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளார். தமக்கான சுகபோக வாழ்க்கையை மீண்டும் பெற்றுக் கொண்டு குடும்ப ஆட்சியைத் தொடர எதிர்பார்க்கின்றார். நடைபவனி அதற்காகவே முன்னெடுக்கப்படுகின்றது. நடைபவனி மூலமாக ஆட்சியை மீண்டும் கைப்பற்ற முடியும் என்று கனவு காண்கின்றனர். மக்கள் இந்தக் குடும்பக் கூட்டணிக்கு அதிகாரத்தை வழங்கப்போவதில்லை. மகிந்த ராஜபக்சவைப் போலவே இன்னும் சிலர் இன்று அரசியல் அநாதைகளாக உள்ளனர். அவர்களும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது அரசியல் இருப்பைத் தக்கவைக்கப் பார்க்கின்றனர்.
ஆட்சியில் இருந்தவர்களின் மோசடிகள், ஊழல்கள் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் வந்த நிலையில் அவர்களை விரட்டியடித்து அதை மாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள் முன்னைய ஊழல் மோசடிக்காரர்களை இணைத்துக் கொண்டு நாட்டை மீண்டும் மாசுபடுத்தி விட்டனர். இந்த அரசியல் கலாசாரம் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும்.
அரசியல் நாடகத்தை இன்று மக்கள் நன்றாக உணர முடிகின்றது. நம்பி ஏமாந்த மக்களை இனிமேலும் ஏமாற அனுமதிக்க முடியாது. ரணிலால் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது.
நாட்டில் இருக்கும் பிரதான இரண்டு கட்சிகளும் நாட்டை வீணடித்து சீரழித்து அரசியலை அசிங்கப்படுத்தியுள்ளன. இந்த இரண்டு கட்சிகளுக்கும் ஆட்சி நடத்த மட்டுமல்ல, அரசியல் செய்யவே தகுதியில்லை.

> ஆட்சியில் இருந்தவர்களின் மோசடிகள், ஊழல்கள் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் வந்த நிலையில் அவர்களை விரட்டியடித்து அதை மாற்றி ஆட்சிக்கு வந்த வர்கள் முன்னைய ஊழல் மோசடிக்காரர்களை இணைத்துக் கொண்டு நாட்டை மீண்டும் மாசுபடுத்தி விட்டனர். இந்த அரசியல் கலாசாரம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

இவர்கள் ஆட்சிக்கு வந்தும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாதநிலைமையே உள்ளது. ஆட்சிக்கு வந்தவுடன் இவர்கள் என்ன கூறினார்கள். என்ன வாக்குறுதி கொடுத்தனர். அந்த வாக்குறுதிகள் இன்று என்னவானது ?
வாராவாரம் வரி அதிகரிக்கின்றது. விலை அதிகரிக்கின்றது. நல்லாட்சியில் மக்களுக்கு சிக்கல் இல்லை என்று கூறுகின்றனர். பன்னாட்டுக் கடனில் மட்டுமே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றனர். இலங்கையின் காணிகள் வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றன.
5 ஆண்டுகளுக்கு கூட்டணி அமைத்து நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. இரண்டு கட்சிகளும் கொள்கையில் முரண்பட்டே செயற்படுகின்றன. இவர்களால் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.
இன்று கூட்டணி அமைத்திருக்கும் பிரதமர் ரணில் – ஜனாதிபதி மைத்திரி இருவரையும் விரட்டியடித்து புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும். அதற்கு நாம் முன்வந்துள்ளோம். மக்கள் எமக்கு வாய்ப்புக்களை வழங்க வேண்டும் – என்றார். (ந-5)

## பிதிர்க்கடன் தர்ப்பணம்

யாழ்ப்பாணம், ஓக. 2
புங்குடுதீவுஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசையை முன்னிட்டு பிதிர்க் கடன் தர்ப்பணம் நடைபெறவுள்ளது.
ஆலயத்தில் விசேட ஸ்நபன அபிசேகம், விசேட பூசைகள் என்பன நடைபெற்று விரதத்தை மேற்கொள்ளும் பிதிர்க் கடன் தர்ப்பணம் நடைபெறும் என தேவஸ்தானத்தினர் தெரிவித்தனர். (ர-ரி)

## ஓட்டோ கட்டணம் அதிகரிப்பு

ஓட்டோக் கட்டணங்கள் நேற்று முதல் கிலோ மீற்றருக்கு 5 ரூபா வீதம் அதிகரிக்கப்பட்டது என்று இலங்கை சுய தொழில் ஊழியர்கள் சம்மேளனத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன தெரிவித்தார்.
இரண்டாவது கிலோ மீற்றரில் இருந்து இவ்வாறு கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது என்றும், முதலாவது கிலோ மீற்றருக்கு அறவிடப்படும் கட்டணத்தில்எந்தவித மாற்றமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.
வற்வரி அதிகரிப்பால் ஓட்டோக்கள் மற்றும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இதனால் ஓட்டோக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று அகில இலங்கை ஓட்டோச் சாரதிகள் மற்றும் உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்தது. (ந-5)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## அச்சுவேலி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள 03,08,11 ஆம் இலக்க கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் அச்சுவேலி உபஅலுவலக எல்லைக்குட்பட்ட சந்தை வளாகத்தில் அமைந்துள்ள 03,08,11ம் இலக்க கடைகளை 01.09.2016 ம் திகதி முதல் நீண்ட கால குத்தகைக்கு வழங்கு வதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன. குறித்த கடைகளினை பல்பொருள் விற்பனை, சிற்றுண்டிச்சாலை, சுனிரகம், காகிதாதிகள் விற்பனை நிலையம், புத்தக சாலை, புதினப்பத்திரிகை விற்பனை, கைத்தொலைபேசி திருத்தகம், கைத்தொலைபேசி விற்பனை நிலையம், போட்டோ பிரதி செய்யும் கடை, அழகு சாதனப்பொருட்கள் விற்பனை, புடைவை விற்பனை, பாதணி விற்பனைபோன்ற நோக்கத்திற்காக பயன்படுத்தலாம்.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 03.08.2016 – 19.08.2016 நண்பகல் 12.00 வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித்திகதி :- 19.08.2016 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 19.08.2016 பிற்பகல் 2.30 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- மாநாட்டு மண்டபம், தலைமை அலுவலகம், வலிகிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
கேள்விகள் திறந்து ஆராயப்படும்போது விண்ணப்பகாரர் சமுகமளிக்கலாம்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரம் | இடம் | ஒரே தடவையில் செலுத்தும் ஆகக் குறைந்த கேள்வித் தொகை (Vat.NBTதவிர) | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக்கட்டணம் (Vat,NBT) தவிர |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இலக்கம் 03 | அச்சுவேலி சந்தை வளாகம் | 480000.00 | 10000.00 | 2000.00 |
| 02 | கடை இலக்கம் 08 | அச்சுவேலி சந்தை வளாகம் | 312000.00 | 10000.00 | 2000.00 |
| 03 | கடை இலக்கம் 11 | அச்சுவேலி சந்தை வளாகம் | 312000.00 | 10000.00 | 2000.00 |


நிபந்தனைகள்

01. விண்ணப்பிக்க விரும்புவோர் குறித்த காலப்பகுதிக்குள் படிவத்தினை வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீளவும் ஒப்படைக்க வேண்டும்.
02. விண்ணப்பிக்க விரும்புவோர் கோரிக்கைக்கடிதமும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினையும் சமர்ப்பிக்க வேண்டும்.
03. பூரணப்படுத்திய கேள்விப்படிவத்தினை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில்குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை **"செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்"** என்ற விலாசத், திற்கும் மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூல மாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை முதல் மாத வாடகைப்பணத்தினை அடுத்து வரும் (ஒவ்வொரு மாதமும்) 10 ம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தண்டப்பணமாக 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.
05. கேள்விச் சித்திகரமாகத் தெரிவு செய்யப்பட்டவர் குறிப்பிடப்படும் திகதியில் கேள்வித்தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினையும் மேற்கொள்ளவேண்டும்.
06. சித்திகர குத்தகைக்காரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக மூன்று மாத கடை வாடகைத்தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
07. சபையினால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமைச்சான்றிதழையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.
08. சித்திகர குத்தகைக்காரர் வலிகிழக்கு பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதி முறைகளுக்கு இணங்க நடந்துகொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் குத்தகை [illegible]
09. மேலதிக விபரங்களை வலிகிழக்கு பிரதேச சபையின் தலைமை [illegible]

யுகராஜா ஜெலீபன், செயலாளர் - வலிகிழக்கு பிரதேசசபை புத்தூர்.
(C/84000) (1L17)


## அதிகாரிகளுக்கு கூட்டம்

### விமல் வீரவன்ச விசனம்



கொழும்பு, ஓக. 2
கூட்டு எதிர்க்கட்சியின் நடைபவனியின் இறுதி நாளான நேற்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் திடீரென கொழும்புக்கு சிறப்புக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.
கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட பாதுகாப்புக் குள்ள அதிகாரிகள் சிறப்புக் கூட்டத்துக்குக் கொழும்புக்கு அழைக்கப்பட்டனர். கூட்டு எதிர்க்கட்சியின் நடை பவனியில் கலந்து கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாது காப்பில்லாத நிலமை ஏற்படுத்தப்பட்டது. பாதுகாப்பு உத்தியோகத் தர்கள் ஏன் அழைக்கப்பட்டனர் என்பது தொடர்பில் தெரியாது – என்று அவர் கூறினார். (ந-5)

## மகா சங்கத்தையே பிரித்தாள முயன்றார் மகிந்த ராஜபக்ச

### பிரதமர் ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 2
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மகா சங்கத்தினரையும் பிளவுபடுத்த முயற்சித்தார்.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
மல்வத்த பீடத்தை இரண்டாகப் பிளவடையச் செய்ய முயற்சிக்கவில்லை என்று மகிந்த ராஜபக்ச கூறினால் ஜனாதிபதி ஆணைக்குழுவை நிறுவி அது குறித்து விசாரணை நடத்தத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார்.
மகிந்த, மல்வத்த பீடத்தை இரண்டாகப் பிளவடையச் செய்தார் என்பது அம்பலமானால் அவர் குடியுரிமையை இழக்க நேரிடும் என்றும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.
மகா சங்கத்தினரை பிளவடையச்செய்வதனைத் தடுக்கும் சரத்துக்கள் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் படுகொலை நடந்து 10 ஆண்டுகளாசியும் நீதி இல்லை

## குற்றஞ்சாட்டுகின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, ஓக. 2

மூதூரில் தன்னார்வத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டுப் பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நியாயம் கிடைக்கவில்லை. இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் அக்ஸ்சன் பார்ம் நிறுவனத்தின் பணியாளர்கள் 17 பேர் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டனர்.

தன்னார்வ தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், குற்றச் செயல்கள் தொடர்பில் சிறப்பு நீதிமன்றத்தை அமைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியாயம் வழங்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சட்ட மற்றும் கொள்கைப் பணிப்பாளர் ஜேம்ஸ் ரோஸ் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுப் பங்களிப்புடன் நீதியான முறையில் விசாரணை நடத்தி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும். குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைத் தகுதி தராதரம் பாராது தண்டிக்கப்பட வேண்டியது அவசியமானது.

ஏ.சீ.எப். பணியாளர்கள் கொலை குறித்த விசாரணைகளில் நீதி கிடைக்காவிட்டால் போர்க் கால குற்றச்செயல்களுக்குப் பொறுப்புக் கூறுதலில் குறைபாடு காணப்படுவதாகவே தென்படும்.

ஏ.சீ.எப். பணியாளர்கள் கொலை குறித்த விசாரணைகள் உரிய முறையில் நடைபெறாமையின் காரணமாகவே போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் பன்னாட்டுப் பங்களிப்புடனான விசாரணைகளை வலியுறுத்தி நிற்கின்றோம் – என்றார். (ற-5)

# பெண் குளிப்பதை வீடியோ எடுத்த சிறுவன் சிக்கினான்

## நீர்கொழும்பில் சம்பவம்

இளம் பெண்ணொருவர் குளிக்கும்போது மறைந்திருந்து வீடியோ எடுத்த 15 வயதுச் சிறுவன் பெண்ணின் தாயிடம் வசமாக மாட்டினான்.

இந்தச் சம்பவம் நீர்கொழும்பில் இடம்பெற்றது.

தனது மகள் தினமும் குளிக்கும் போது சிறுவன் வீடியோ பதிவு செய்வதை அறிந்த பெண்ணின் தாயார், மகளை குளிக்குமாறு கூறிவிட்டு மறைந்திருந்து அவதானித்தார்.

சிறிது நேரத்திற்கு பின்னர் சிறுவன், நீர் தாங்கிக்குச் செல்லும் நீர்க் குழாயின் வழியாக மேலே ஏறி குளியலறை ஜன்னலின் ஊடாகப் பெண் குளிப்பதை காணொலிப் பதிவு செய்தான்.

உடனே அங்கு பெண்ணின் தாயார் சென்றார். காணொலிப் பதிவை மேற்கொண்ட சிறுவன் கையும் மெய்யுமாக தாயிடம் மாட்டினார்.

சிறுவனை தாயார் நீர்கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைத்தார். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நீதிமன்றத்தில் சிறுவனை முற்படுத்தினர். சிறுவனின் உளவியல் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீர்கொழும்பு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற-5)

# பொலிஸாருடன் மோத வந்தால் தாக்குதல் நடத்தத் தயங்கோம்

## பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 2

சட்டத்தை பொலிஸார் நடைமுறைப்படுத்தும்போது பொலிஸாருடன் மோதலுக்கு வந்தால் தாக்குதல் நடத்தவும் நாம் தயங்கப் போவதில்லை. பொலிஸார் அவ்வாறு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பங்களில் நான் பொலிஸாரின் பக்கமே இருப்பேன்.

இவ்வாறு தெரிவித்தார் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர.

காலி, கொஸ்கொட பகுதியில் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தெரிவித்ததாவது:

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஒவ்வொருவரும் நினைத் தவாறு செயற்பட அனுமதிக்க முடியாது. கேகாலை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் இப்போது என்னுடன் பேசினார். நான் அவருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளேன். பயப்படாது செயற்படுமாறும் அவர்களுக்குப் பக்க பலமாக நான் இருப்பதாகவும் அவரிடம் கூறினேன்.

அரசின் வாகனங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தரவிட்டேன். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பொலிஸாருடன் முறுகல் நிலையை ஏற்படுத்தி மோதலுக்கு வந்தால் நாமும் தாக்குதல் நடத்துவோம். தாக்க வந்தால் பயப்படமாட்டோம். கண்டிப்பாகத் திருப்பித் தாக்கு வோம். அதன் பின்னணியில் நான் இருப்பேன். எனினும் கொலை செய்ய முடியாது. படுகாயங்களை ஏற்படுத்த முடியாது. குறைந்த பட்ச பலப்பிரயோகம் செய்யலாம் – என்றார். (ற-5)

# குளிர்பானத்தில் சீனி அளவை காட்டும் வண்ணக் குறியீடுகள்

## நேற்று முதல் அறிமுகம்

கொழும்பு, ஓக. 2

குளிர்பானங்களில் அடங்கியுள்ள சீனியின் அளவை குறிப்பிடுவதற்கான வண்ணக் குறியீடுகளை பயன்படுத்தும் முறை நேற்றிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் கையொப்பம் இட்டார்.

1980 ஆம் ஆண்டு 36ஆம் இலக்க சட்டத்தின் 32ஆவது சரத்தின் பிரகாரம் ஒரு குளிர்பானப் போத்தலில் 11கிராமுக்கும் அதிகமான சீனி அடங்கியிருக்குமாயின் அந்தப் போத்தல் சிவப்பு நிறக் குறியீட்டைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு குளிர்பான போத்தலுக்குள் 2-11 கிராம் சீனி மாத்திரம் அடங்கியிருந்தால் மஞ்சள் நிறக் குறியீடு கொண்டிருத்தல் வேண்டும்.

2 கிராமுக்கு குறைவான சீனி குளிர்பானப் போத்தல்களில் உள்ளடங்கியிருக்கும் போது அதில் பச்சை நிறக் குறியீடு குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

குளிர்பானங்களில் உள்ளடங்கியிருக்க வேண்டிய சீனியின் அளவு குறித்தான கலந்துரையாடல்கள் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் பல குளிர்பான உற்பத்தி நிறுவனங்களுடன் நடத்தப்பட்டது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ற-5)

# மகிந்தவின் நடைபவனி ஒரு விநோதமான நிகழ்வு

## ஹெல உறுமயவின் பேச்சாளர் கூறுகின்றார்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் இடம்பெற்ற நடைபவனி ஒரு விநோத நிகழ்வு. வினோத நிகழ்வுகளால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த வர்ண சிங்க தெரிவித்தார்.

> “எதிர்வரும் 2020 ஆம் ஆண்டிலேயே அடுத்த தேர்தல் நடைபெறும். அதனால் இப்போது முன் னெடுக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தால் எந்தப் பயனும் இல்லை.”

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் இடம்பெற்ற நடைபவனி யில் விநோத அம்சங்களே இடம்பெறுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச அதிக ஆர்வம் செலுதுகின்றார். அவர் தனது தந்தைக்கு அரசை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற முனைப்பில் செயற்படுகின்றார். விநோத அம்சம் அடங்கிய செயற்பாடுகள் நிறைந்த நடைபவனியால் ஆட்சி மாற்றம் வந்துவிடும் என்று கருதினால் அது கனவாகவே இருக்கும். வரலாற்றில் இதுபோன்ற நடைபவனிகள் இடம்பெற்றன. அவை ஆட்சி மாற்றத்திற்கு வித்திட்டது என்பதும் உண்மைதான்.

ஆனால் அந்த ஆர்ப்பாட்டங்கள் வலிமை நிறைந்தவையாக இருந்தன. அந்த வலிமை இந்த ஆர்ப்பாட்டத்தில் இல்லை. மாறாக ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களின் வலிமையே இங்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டிலேயே அடுத்த தேர்தல் நடைபெறும். அதனால் இப்போது முன்னெடுக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தால் எந்தப் பயனும் இல்லை. வடக்கில் முப்பது வருடங்கள் போராட்டம் நடத்தியும் ஆயுதக் குழுக்களால் எமது நாட்டைப் பிரிக்க முடியவில்லை. ஆனால் இவர்கள் விநோத ஆர்ப்பாட்டத்தால் ஆட்சியை மாற்றிவிட முற்படுவது வேடிக்கையானது. இந்த நடைபவனியில் திருடர்கள்கூட்டமே நிறைந்துள்ளது. இவர்களை மக்கள் ஏற்கப்போவதும் இல்லை – என்றார். (ற-5)

# பொய்யுரைத்தே வாசுதேவ மைதானம் பெற முயன்றார்

## அமைச்சர் தயாசிறி கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 2

நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார பொய்யுரைத்து மைதானத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தார்.

இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

தனிப்பட்ட தேவைக்காக கொழும்பு ஹைட்பார்க் மைதானம் தேவைப்படுகின்றது என்று வாசுதேவ நாணயக்கார கொழும்பு மாநகரசபை ஆணையாளரிடம் கடிதம் மூலம் கோரியிருந்தார். நடைபவனியின் இறுதிக் கூட்டத்துக்காக மைதானம் தேவை என்று வாசுதேவ கூறவில்லை. அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தால் சில நேரங்களில் நிலைமை மாறியிருக்கக்கூடும்.

கூட்டு எதிர்க்கட்சிக்கு மைதானம் வழங்கப்படாமைக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் கிடைப்பது. மைதானத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கடிதம் அனுப்பிய போதிலும், அதன் ஏற்பாட்டாளர்கள் பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை. வெயில் காலம் என்பதனால் மைதானத்தைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டன.

31ஆம் திகதி மாணவர் அமைப்பு ஒன்றும், 30 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியும் மைதானத்தைக் கோரியிருந்தன. இந்த மைதானம் புனரமைக்கப்பட வேண்டியிருப்பதனால் குறித்த தரப்புக்களுக்கும் மைதானம் வழங்கப்படவில்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மைதான ஒதுக்கீடு பற்றிய தீர்மானங்கள் மாறலாம் என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையில் மைதானம் வழங்கப்பட்டு வருகின்றது. யார் ஏற்பாடு செய்கின்றார்கள், எதற்காக என்ற காரணங்களை மறைக்காமல் கூறியிருந்தால் சில வேளைகளில் மைதானம் வழங்கப்பட்டிருக்கலாம் – என்றார். (ற-5)

# குருமாற்ற விசேட யாகம்

குருமாற்றத்தை முன்னிட்டு நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை புதன்கிழமை விசேட யாகம் இடம்பெறும்.

மு.ப.10 மணிக்கு விநாயகப் பெருமான், தட்சணாமூர்த்தி மற்றும் நவக்கிரகங்களுக்கு விசேட அபிஷேகங்கள், பூசைகள் இடம்பெறும்.

தொடர்ந்து கிரகதோஷ நிவர்த்திக்காக விசேட யாகம் நடைபெறும் என்று பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ற-17)

**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி சத்திரச் சந்தியில் இருந்து கொட்டடிப் பாதையில் அகலம் 11 ½ நீளம் 70 அடி கீழ் தளம், மேற்தளம் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

071 560 4213

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் பழனியாண்டவர் கோயிலுக்கு அண்மையில் பிரதான வீதியில் 2.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 703 7058

**வேலை வாய்ப்பு**

யாழ் நகரில் உள்ள தொழிலகம் ஒன்றிற்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் டைப்பிங் செய்யக் கூடிய ஆண்கள் தேவை.

(Corel Drow,Photo Shop,Email,Internet தெரிந்த)

யாழ் நகரிற்குஅண்மையில் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு 0768851379

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

## பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 2
கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகும் நிலையில் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.இந்த முறை உயர்தரப் பரீட்சை 2 ஆயிரத்து 204 மத்திய நிலையங்களில் இன்று முதல் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.
கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 605 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். அவர்களில் 2 இலட்சத்து 40 ஆயிரத்து 991 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் எனவும், 74 ஆயிரத்து 614 பேர் தனியார் பரீட்சார்த்திகள் எனவும் தெரிவிக்கப்பட்டது.
(ற-5)

# மூன்று அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள்

கொழும்பு, ஓக. 2
அமைச்சரவை மதிப்புள்ள மூன்று அமைச்சுக்களுக்குப் புதிதாகச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர்.
ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோனிடமிருந்து தமது நியமனக் கடிதங்களை அவர்கள் பெற்றுக் கொண்டனர்.
அயலுறவுத்துறை அமைச்சு, பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, தபால் சேவைகள் அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுக்களுக்கே புதிதாகச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர்.
அயலுறவுத்துறை அமைச்சின் புதிய செயலாளராக எசல வீரக்கோன் நியமிக்கப்பட்டார். இவர் 1988 ஆம் ஆண்டு அயலுறவுத்துறைச் சேவையில் இணைந்து கொண்டதுடன் பல நாடுகளில் பணியாற்றியுள்ளார்.
பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் புதிய செயலாளராக ஜே.ஜே.ரத்னசிறியும், தபால் சேவைகள் அமைச்சின் புதிய செயலாளராக டீ.ஜீ.எம்.வீ. ஹப்பு ஆராச்சியும் நியமிக்கப்பட்டனர். (ற-5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**புவனேஸ்வரி சீவகாருணியம்**
திதி: அமாவாசை
பிறப்பு 13.11.1932
இறப்பு 14.08.2015




அறுபத்தியொரு வருட இல்லறம் தன்னில்
ஆலமரமாகி நிழல் தந்தாய்
அன்னை உன் மடியில் துயர் மறந்தேன்
- இன்று
அரவணைக்க தாயின்றித் தவிக்கின்றேன்
ஆசையில் கதை கூறும் ஆதரவே
அம்மம்மா உன் நிழல் பார்த்து
ஏங்குகிறோம் தினமும்

கணவர், மகள், பேரப்பிள்ளைகள்.
126, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# மன்னார் வைத்தியசாலையின் விருத்திக்கு ரூ.100 மில்லியன்

மன்னார், ஓக.2
மன்னார் வைத்தியசாலையின் அவசர திருத்தம் மற்றும் அவசர மருத்துவ உபகரணங்கள் கொள்வனவுக்காக 100 மில்லியன் ரூபாவை வழங்க சுகாதார வைத்திய சேவைகள் பணிப் பாளர் மருத்துவர் மகிபால உறுதியளித்துள்ளார்.
இவ்வாறு மன்னார் வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி.யூட் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மன்னார் வைத்தியசாலையின் தற்போதைய நிலை தொடர்பில் நேரில் ஆய்வு செய்ய நேற்று முன்தினம் சுகாதார வைத்திய சேவைகள் பணிப்பாளர் மகிபால வந்தார். நிர்வாகத்தினரிடம் வைத்தியசாலையின் தேவைகள், குறைகள் தொடர்பிலும் ஆளணி வளங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்தார். வைத்தியர்கள், தாதியர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.
வைத்தியசாலையின் விடுதிகள் மற்றும் சிகிச்சைக்கூடங்கள் என்பனவற்றையும் பார்வையிட்டார். எம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை உடனடியாக ஆராய்ந்தார்.
வைத்தியசாலை யின் திருத்தப் பணிக்காக 50 மில்லியன் ரூபாவும் அவசர வைத்திய உபகரணக் கொள் வனவுக்காக 50 மில்லியன் ரூபாவும் உடன் வழங்குவதாக உறுதியளித்தார் - என்றார்.
(ற-101)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா இரகுபதி**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி: ஆடி அமாவாசை
(02.08.2016)
தோற்றம் 03.06.1948
மறைவு 14.08.2015

உயிருக்கு உயிராக இருந்து
எம்மைக் காத்த எமது அப்பாவே!
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா....
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்...
குடும்பத்தினர்.
29, சுப்பிரமணியம் வீதி, அரியாலை, நாயன்மார்கட்டு.

# கூட்டு எதிரணியின் நடைபவனி சிறுபான்மையினருக்கு எதிரானது

## ரெலோவின் கொள்கை பரப்புச் செயலாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 2
கூட்டு எதிர்க் கட்சியினர் அரசுக்கு எதிராக ஆறு விடயங்களை முன்நிறுத்தி நடைபவனி மேற்கொண்டனர் என்று கூறுகின்றனர். உண்மையில் சிறுபான்மையின மக்களுக்கு எதிரானதாகவும் இனவாத ரீதியிலான நடைபவனியாகவுமே இது அமைந்தது.
இவ்வாறு ரொலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.
மகிந்த ஆதரவு அணியினரின் நடைபவனி தொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
கூட்டு எதிரணியில் அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் கடந்த காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் சுயநிர்ணய உரிமைகளுக்கோ தமிழர்களின் அபிலாசைகளுக்கோ அரசியல் தீர்வுக்கோ இரக்கம் காட்டாதவர்கள். அரசமைப்பு மாற்றத்தின் ஊடாகத் தமிழ் சமூகத்துக்குத் தீர்வு வழங்கக் கூடாது என்பதற்காக விடாப்பிடியுடன் காய்களை நகர்த்தி வருகின்றவர்களே இந்தநடைபவனியை மேற்கொள்பவர்கள்.
கடந்த ஆட்சியாளர்களின் ஊழல் மோசடிகள் ஒருபுறம் இருந்தாலும் அவர்களால் சில தீய சக்திகளின் ஊடாக சிறுபான்மையின சமூகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டங்கள், சூழ்ச்சிகளை தற்காலத்தில் சுயாதீனமாக மேற்கொள்ள முடியவில்லை.
அவற்றை மீளவும் இயங்கச் செய்யவும் அதேபோல போர்க் குற்றப் பொறிமுறையை இயங்காமல் செய்வதுமே இந்தநடைபவனியின் உண்மையான நோக்கம்.
இந்த நடைபவனிக்குப் பின்னால் குறிப்பாக வடக்கு - கிழக்கு தமிழ் வாழ் மக்கள் கடந்த 60 ஆண்டு காலமாக தமக்குரிய உரிமையை பெற்றுக் கொள்ள எடுக்கின்ற முயற்சிகளுக்குத் தடையாகக் கருதப்படும் மற்றுமொரு மிகப் பெரும் சாபக்கேடான மேலுயர்ந்த செய்திப் பார்வை புலப்படுகிறது - என்றார்.
(ற-5)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**ஐயாத்துரை லோகேஸ்வரன்**
(லண்டன்)
பிறப்பு 26.12.1949
திதி: ஆடிஅமாவாசை
(02.08.2016)
இறப்பு 19.07.2012





என்றும் தம் ஆன்மா
அமைதியில் இளைப்பாற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்.
பிரதான வீதி, சங்கானை.

# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியுற பெற்றோரது பங்களிப்பு அவசியம்

## சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.2
பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படாதிருப்பதற்காக எமது பொழுதுபோக்குகளை அர்ப்பணம் செய்ய வேண்டும். எனது வீட்டில்படிக்கின்றபிள்ளைகள் இருக்கின்றனர். நான் எனது வீட்டில் உள்ள தொலைக்காட்சியைக் கட்டி ஒரு மூலையில் வைத்துள் ளேன்.
இவ்வாறு தெரிவித்தார் சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரி றொபேர்ட் உதயகுமார்.
சங்கானைவர்த்தகவங்கியில்கணக்கு [illegible]
[illegible] மாணவர்களுக்கான கௌரவிப்பு வங்கியில் அண்மையில் இடம்பெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அந்த நிகழ்வில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட வட பிராந்திய வர்த்தக வங்கி முகாமையாளர் றோ. நீக்கிலாஸ் தெரிவித்ததாவது:
மாணவர்கள் கல்வியில் சிறந்தவர்களாக விளங்குவதற்குக் கல்வியைக் கசடறக் கற்க வேண்டும். ஓர் இலக்கை வைத்துக் கற்று, அந்த இலக்கை அடைய முற்பட வேண்டும். இன்றைய மாணவர்களின் நிலை மாற்றமடைந்து வருகிறது. பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் ஆர்வமின்மை, தொலைக் காட்சிப் பாவனை, மது, போதைக்கு அடிமையாதல், கல்வி பற்றிய எதிர்காலம் எவை என்பதை தீர்மானிக்காமலிருத்தல், பெற்றோர் பிள்ளைகள் மீது அன்பு, பாசம் ஊட்டி வளர்க்காமை, பிள்ளைகளின் மனதில் வெறுப்பு ஊட்டும் நடவடிக்கைகளைப்பெற்றோர்மேற்கொள்ளுதல், அளவுக்கதிகமாகப்பிள்ளைகள் கேட்கும்எதையும் வாங்கிக் கொடுத்தல் போன்றவற்றைத் தவிர்த்துக் கொண்டால்கல்வியில்முன்னேறத் தடையேதும் இராது. மாணவர்களின் செயல் திறனை வளர்க்க ஆசிரியர், பெற்றோர் உதவ வேண்டியது அவர்களின் தலையாய கடமையாகும்- என்றார். (ற-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்

## நேற்று ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்




யாழ்ப்பாணம், ஓக. 2
வடக்கின் 12 கல்வி வலயங்களையும் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் தங்களுக்கான நிரந்தர நியமனத்தை இழுத்தடிப்பின்றி வழங்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். அவர்களில் சிலர் கைக் குழந்தைகளுடன் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஆயிரத்து 300 தொண்டர் ஆசிரியர்களும் நேற்று மு.ப. 9.30 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தைமுற்றுகையிட்டனர்.

"கடந்த காலங்களில் எந்தவித கொடுப்பனவுகளும் இன்றி பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். நிரந்தர நியமனம் வழங்குமாறு பல்வேறு போராட்டங்களையும் மேற்கொண்டோம். எமது தொடர்ச்சியான போராட்டங்கள் – நெருக்குதல் காரணமாக நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு நடைபெற்றது. நேர்முகத் தேர்வு முடிவுகள் வலய ரீதியாகக்காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. நியமனம் நாளை வழங்கப்படும் என்று கடந்த 6 மாத காலமாகத் தெரிவிக்கின்றனர். இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை. எமக்கு எப்போது நியமனம் வழங்கப்படும் என்ற உறுதியான முடிவு தெரியவேண்டும். அதற்குரிய பதிலை எழுத்து மூலம் வழங்கவேண்டும்"– என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொண்டராசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டவர்கள், ஆளுநர் செயலகத்துக்கான பாதையை மூடிப் போராட்டத்தில் ஈடுபட முனைந்தனர். ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தொண்டர் ஆசிரியர்களுடன் கலந்துரை யாடினார்.

"நீங்கள் ஜனநாயக ரீதியில் போராடுங்கள். ஆனால் ஏனையோருக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட வேண்டாம். மாணவர்களுக்கான வழிகாட்டிகளாகச் செயற்படும் ஆசிரியர்கள் நீங்கள். முன்மாதிரியாக நடப்பீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம். உங்களுக்கு நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகள் நடுவண் அரசின் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்கள் அமைச்சரவையின் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவை இதனை அனுமதிப்பது தொடர்பில் உப குழுவை நியமித்து அவர்களிடம் சமர்ப்பித்துள்ளது. உங்களது நியமனங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துகின்றோம். விரைவில் கிடைப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கின்றது" - என்று அவர் தெரிவித்தார்.

அவரது கருத்தால் ஆசிரியர்கள் சமாதானமாகவில்லை. தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.
(ற-5-101-106)

## யாக ஹோமம்

சாவகச்சேரி ஓக. 2
சாவகச்சேரி வாரிவனநாத புராதன தான்தோன்றீஸ்வர வாரியப்பர் சிவன் ஆலயத்தில் வியாழ மாற்றத்தையொட்டிய சிறப்புயாக ஹோமமும் விசேட வழிபாடும் எதிர்வரும் நான்காம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்று வியாழ மாற்றம் இடம்பெறுவதையிட்டு சிறப்பு யாக ஹோமம் இடம்பெறவுள்ளது என்று கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஜ்வரக் குருக்கள் தெரிவித்தார். (ற-9)

## நீத்தார் நயப்புரை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 2
அகில இலங்கை இந்து மாமன்றத்தால் கீரிமலை சிவபூமி மடத்தில் ஆடி அமாவாசை தினமான இன்று காலை 8.30 மணி முதல் நீத்தார் நினைவு நிகழ்வு நடத்தப்படும்.

இந்த நீத்தார் நினைவு நிகழ்வில் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் சேவையாற்றி மறைந்தவர்கள் நினைவு கூரப்படவுள்ளனர்.

ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (ற-ரி)



பருத்தித்துறை நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 3 லட்சம் ரூபா பெறுமதியான 2.10 கிலோக் கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. கஞ்சா வைத்திருந்த சந்தேகத்தில் 28 வயதான இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறைப் பகுதியிலிருந்து வேறு இடத்துக்குக் கொண்டு செல்வதற்காக கேரளக் கஞ்சா நகரப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டது. இதன்போதே மேற்படி நபர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-5-108-26-109)

## காக்கைதீவிலுள்ள மீன்சந்தை பிரதேச சபையால் சீரமைப்பு

### நீதிமன்ற உத்தரவுக்கமைய

வலி.தென்மேற்கு, ஓக.2
காக்கைதீவு இறங்கு துறையில் அமைந்துள்ள மீன் சந்தை மல்லாகம் நீதிவானின் அறிவுறுத்தலுக்கமைய சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்படுகின்றது.

வலி.தென்மேற்குப்பிரதேசத்தில் காக்கைதீவு இறங்கு துறையில் கடந்த இரு வருடங்களுக்கு முன் சுகாதார முறைப்படி நவீனமான முறையில் பல இலட்சம் ரூபா செலவில்பிரதேசசபையால் மீன் சந்தை கட்டப்பட்டது. அதைப் பயன்படுத்தப் பின்னடித்த வியாபாரிகள் கூறுவிலை மண்டபத்துக்கு அருகில் கட்டப்பட்ட கட்டடத்தில் சட்ட விதிகளுக்கு முரணாக மீன் விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் பிரதேச சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வியாபாரிகள் தெரிவித்த கருத்தைத் தொடர்ந்து ஏற்கனவே பிரதேச சபையால் அமைக்கப்பட்ட மீன்சந்தையை இரு மாதங்களுக்குள் சீரமைத்து வழங்க வேண்டும் என்று நீதிவான் பிரதேசசபைக்கு அறிவுறுத்தினார். நீதிவானின் அறிவுறுத்தலுக்கமைய சந்தை சீரமைக்கப்படுகின்றது.
(ற-115)

## மரக்கறி விலைகள் சடுதியாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் நேற்று சடுதியாக அதிகரித்தன.

ஆடி, அமாவாசையை முன்னிட்டு மரக்கறி வகைகள் கூடுதலாக சந்தைகளுக்கு வந்து சேர்ந்தும் அவை உடனடியாக விற்றுத் தீர்க்கப்பட்டன.

பிரதான சந்தைகளில் மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்ய மக்கள் அதிகளவில் கூடியதால் சன நெரிசல் ஏற்பட்டது.

கத்தரி, பயிற்றை, பாகல், தக்காளி போன்ற மரக்கறி வகைகளும் கிலோ 200 ரூபாவுக்கு மேல் விற்கப்பட்டன. மரக்கறி விலை அதிகரிப்பால் நுகர்வோர் பாதிக்கப்பட்டனர்.
(ற-17)

## நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு சந்தேக நபர்கள் இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஓக.2
குருநகர்ப் பகுதியில் நீர் இறைக்கும் இயந்திரத்தைத் திருடிய சந்தேகத்தில் இரு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் 18, 19 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குருநகரில் உள்ள விருந்தினர் மண்டபத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் இருந்து கடந்த சனிக்கிழமை இயந்திரம் திருடப்பட்டது. யாழ். பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறையிடப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்திய விசாரணையில் அவர்கள் திருடியதை ஒப்புக் கொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். திருட்டுடன் தொடர்புடைய மற்றொரு சந்தேகநபர் தப்பிச் சென்றார்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்கள் புறா திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)

## எழுதுமட்டுவாழ், கரம்பகத்தில் 45 ஆயிரம் தென்னைகள் நடுகை

### போர் முடிவுற்ற பின்னரான காலத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 2
எழுதுமட்டுவாள், கரம்பகம், விடத்தல்பளை, வரணிப் பிரதேசங்களில் போருக்குப் பின்னர் 45 ஆயிரம் தென்னைகள் நடப்பட்டன.

இவ்வாறு யாழ். மாவட்டச் செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் தென்னைச் செய்கையில் அதிகம் விளைச்சலைப் பெற்ற பிரதேசங்களான [illegible] கிளப்பு ஆகிய பகுதிகளில் இருந்த சுமார் ஒரு லட்சம் வரையான தென்னைகள் போர் காரணமாகவும், சோடை நோயின் காரணமாகவும் அழிவடைந்தன.

இதனால் இந்தப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. மீள் குடியமர்வின் பின்னர் மாவட்டச் செயலகங்கள் ஊடாக பிரதேச செயலகங்கள் மற்றும் தெங்கு அபிவிருத்திச் சபை போன்றவற்றின் ஊடாக மீள் பயிரிடலுக்கு ஊக்குவிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசங்களில் இது வரை 45 ஆயிரம் தென்னங் கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. தென்னங்கன்றுகளின் பராமரிப்புக்கான செலவீனம் உயர்வாக உள்ளது. இன்னும் 4 ஆண்டுகளில் இந்தத் தென்னைகளிலிருந்து உச்சப் பயன் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய சில பிரதேசங்களில் போர் காலத்தில் அமைக்கப்பட்ட இராணுவக்காவலரண்கள், மண் அணைகள் இன்னும் அகற்றப்படாத நிலையில் உள்ளன. இவை அகற்றப்பட்டால் அந்தப் பகுதிகளிலும் தென்னங் கன்றுகள் நடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5-101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு சமூக சேவைகள் திணைக்கள உதவிகளுக்காக ரூ. 275 மில். ஒதுக்கீடு

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக.2
வடக்கு மாகாணத்தில் உள்ள சமூக சேவைகள் திணைக் களங்களின் பல்வேறுபட்ட உதவிகளுக்காக வருடாந்தம் அண்ணளவாக 275 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. அத்துடன் மாகாண சபை அங்கத்தவர்கள் மற்றும் அமைச்சர்களின் பிரத்தியேக நிதிஒதுக்கீட்டில் இருந்து கணிசமான தொகை இவ்வாறான சமூகப் பணிகளுக்குப் பிரித்தொதுக்கப்படுகின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற மாவட்டத்துக்கான சமூக சேவைகள் திணைக்களத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நடைபெற்றது. அதில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஒரு சமூகம் எதிர்பாராத பாதிப்புக்கு உட்படும்போது அதன் ஆதாரத் தூணாக அதை ஏந்தி நிற்க வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் சமூக சேவைத் திணைக்களத்திற்கே உரியது.

பாதிக்கப்பட்டவர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களாக இருக்கலாம். போரால் அங்கவீனர்களாக ஆக்கப்பட்டவர்களாக இருக்கலாம். விசேடதேவைகள் உள்ளவர்களாக இருக்கலாம், குடும்பப் பாரத்தைத்தனியே சுமக்கும் பெண்களாக இருக்கலாம், வயோதிபர்களாக இருக்கலாம், வேறு பலவிதங்களில் உடலாலும் மனதாலும் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம்.

இவர்கள் யாவரையும் அணைத்துச் சென்று மனதில் அமைதியையும் நிறைவையும் ஏற்படுத்தவே சமூகசேவைகள் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது. சமூகத்தில் விரக்தியான சிந்தனைகளுடன் எமது சகோதர சகோதரிகள் வலம் வருவது எமது சமூகத்துக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதைப் புரிந்து கொண்டே மக்கள் நலம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட சமூக சேவைகள் திணைக்களம் முன்வந்துள்ளது.

அவ்வாறான ஒரு திணைக்களம் தனது சேவைகளை நம் மக்கள் மத்தியில் விரிவாக்கவே இந்தக் கட்டடத்தைக் கட்டியது. சமூக சேவைத் திணைக்களத்தின் பணிகள் வரையறைக்குட்பட்டதன்று. காலத்துக்குக் காலம் சமூகங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டறிந்து காலச் சூழலுக்கேற்ப புதிய திட்டங்களை வகுப்பதுடன் அவை நீண்டு நிலைத்திருக்கக்கூடிய விதத்தில் அதனை அணுகி தீர்வு காணவேண்டிய ஒரு திணைக்களமாக இருக்கிறது.

அவர்களின் பணி நலிவுற்ற சமூகங்களை நோக்கியதாகவே அமைந்திருப்பன.

இவ்வாறான சேவைகளை விரைந்து செயற்படுத்துவதற்கு மாவட்ட சமூக சேவை அலுவலகமும் அங்கே கடமையாற்றும் சமூக சேவைத் திணைக்களத்தினரும் பெரும் பங்காற்றுகின்றனர். சமூக சேவைகள் விரிவாக்கப்படுவதற்கும்வினைத்திறனுடன் செயற்படுவதற்கும் அந்தந்த மாவட்ட சமூக சேவை அலுவலகங்கள் சிறந்த முறையில் செயலாற்ற வேண்டும்.




*11 மில்லியன் ரூபா நிதியில் முல்லைத்தீவு நகரப்பகுதியில் அமைக்கப்பட்ட மாவட்டத்துக்கான சமூகசேவைகள் திணைக்கள அலுவலகம் நேற்று வடக்கு முதலமைச்சரால் திறக்கப்பட்டது. நிகழ்வில் வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், வடமாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட செயலக கணக்காளர், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, வெலிஓயா பிரதேச செயலாளர்கள், சமூகசேவை திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.* (ற-ரி7)

இந்தக் கட்டடத்தை அமைப்பதற்காக ரூபா 11 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டமாக 2 மில்லியன் ரூபா யுனிசெவ் நிறுவனத்தாலும் மிகுதி 9 மில்லியன் ரூபா மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழும் வழங்கப்பட்டன.

சமூக சேவைத் திணைக்களம் பல்வேறுபட்ட உதவிகளை பொதுமக்களுக்கும் நலிவடைந்தவர்களுக்கும், மேற்கொண்டு வருகின்றபோதும், அவை பற்றிய போதிய விளக்கங்களோ அல்லது விபரங்களோ பொது மக்களிடம் சென்றடையவில்லை எனக் கருதப்படுகின்றது. திணைக்களத்தால் நீண்டகாலமாக பொதுசன மாதாந்த கொடுப்பனவு, புற்றுநோய்க் கொடுப்பனவு, தொழுநோய்க் கொடுப்பனவு, காசநோய்க்கொடுப்பனவு என்பவற்றுக்கு மேலதிகமாக தலசீமியா என்ற ஓர் அரிய வகை நோய்க்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டு வருகின்றமை பற்றி நாம் அறிந்துள்ளோம்.

மாதாந்த உதவிகள் தவிர்ந்த இன்னும் பல உதவிகளும் வழங்கப்படுகின்றன. இவற்றுக்கும் மேலாகப் போரால் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களில் கழுத்துக்குக் கீழ் இயங்காதவர்களுக்கு ரூபா 3 ஆயிரம் மாதாந்த கொடுப்பனவாகவும், இடுப்புக்கு கீழ் இயங்காதவர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபாவும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது.

இந்தக் கொடுப்பனவுகளை இரட்டிப்பாக்க எமது அமைச்சரவை முயன்று வருகின்றது. அதேபோன்று உடல் ஊனமுற்றவர்களின் குடும்பங்களின் சுயதொழில் முயற்சிக்காக 30 ஆயிரம் ரூபா வரையான முழு உதவிக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

தற்செயல் உதவிகளாக இயற்கை அழிவு, யானை போன்ற பெரிய மிருகங்களால் ஏற்படுத்தப்படக்கூடிய அழிவுகள் போன்றவற்றுக்கு உச்சவரம்புத் தொகையாக 20 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படுகின்றது.

உடல் ஊனமுற்றவர்கள், நடக்க முடியாதவர்களுக்கு மூன்று சில்லு துவிச்சக்கர வண்டி, தோல்உற்பத்திப்பொருள்கள் மற்றும் மலசலகூடம், வீட்டு வாசல் ஆகியனவற்றில் நுழைவதற்கு ஏதுவான சாய்தளங்கள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ரூபா 50ஆயிரம் வரை உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகள், பாதிக்கப்பட்டோர், மாற்றுத்திறன் உடையவர்கள் என்று பல நலிவுற்ற மக்களுக்கு உதவி புரிய வேண்டியகடப்பாடு எமக்குள்ளது. கிடைக்கும் வரவின் அடிப்படையில் எமது செயற்திட்டங்கள் அமைந்துள்ளன. எம்மால் முடியுமான பல சேவைகளை ஆற்றி வருகின்றோம்-என்றார்.

(ற-21-ரி 7)

# முன்னாள் போராளிகளுக்கு பன்னாட்டு மருத்துவ சோதனைக்கு ஏற்பாடு செய்க

***வட மாகாண உறுப்பினர் து. ரவிகரன் வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை***

புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் அனைவருக்கும் பன்னாட்டு ரீதியிலான மருத்துவ சோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். இது விடயத்தில் வடக்கு முதலமைச்சர் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கோரிக்கை விடுத்தார்.

முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற சமூக சேவைகள் திணைக்கள கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஒட்டுசுட்டான் பிரதேச செய லகத்தில் நடைபெற்ற மக் களின் கருத்துக்களைப் பதிவு செய்யும் செயலணியில் தன்னுடைய கருத்துக்களை முன்வைத்த முன்னாள் போராளி ஒருவருடைய கருத்து பத்திரிகையில் வெளி வந்துள்ளது. தங்க ளுக்கு வலுக்கட்டாயமாக ஊசி மருந்து ஏற்றினார்கள் என்றும், பல போராளிகள் மயங்கி விழுந்தார்கள், அதில் அன்றே ஒருவர் இறந்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நூறு கிலோ பாரத்தை தூக்கிக் கொண்டு ஓடித் திரிவேன், இன்று சிறிய பொருளைக் கூடத் தூக்க முடியாதுள்ளது என்று என்று நல்லிணக்க செயலணியினரிடம் அந்த முன்னாள் போராளி கூறியுள்ளார்.

இப்படியான நிகழ்வுகள் புனர்வாழ்வு வழங்கப்பட்ட அனைவருக்கும் உள்ளதா என்பது ஆராயப்பட வேண்டும். புனர்வாழ்வு வழங்கப்பட்டவர்கள் இறந்தால் காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கு பன் னாட்டு மருத்துவ சோதனை நடத்தப்பட வேண்டும். இங் குள்ள மருத்துவ பரிசோதனைகளை நம்ப யாரும் தயாராக இல்லை. இதற்குரிய நீதியான பதிலை எங்களுடைய நீதியரசர் கூற வேண்டும். இதை முதலமைச்சர் செய்து காட்டுவார் என நம்புகிறோம் - என்றார்.

(ற-21)

## மீள்குடியேற்றக் கொள்கை குறித்து எம்.பி.சிகளுக்கு விளக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 2
வடக்கு மாகாண மீள் குடியேற்றக் கொள்கை தொடர்பில், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி விளக்கமளிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த ஆண்டு மீள் குடியேற்றம் தொடர்பிலான கலந்துரையாடல் இடம் பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றக் கொள்கையைத் தயாரிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவுக்கு அமைவாக, வடக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் மீள் குடியேற்ற விடயங்கள் ஆராயப்பட்டு வடக்குக்கான மீள் குடியேற்றக் கொள்கை தயாரிக்கப்பட்டது. இந்தக் கொள்கை வடக்கு மாகாண சபையில் இன்னமும் முன் வைக்கப்படவில்லை. வடக்கு அமைச்சரவையில் மாத்திரமே முன் வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையில் அதனை முன் வைத்து சமர்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு முன்னதாக, வடக்கு மாகாண சபையின் 38 உறுப்பினர்களுக்கும் அந்தத் தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

(உ-5-10)

# வைத்தியசாலைகளில் நிரந்தரமான சமையலாளர் இல்லாததால் சிரமம்

## நோயாளர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.2
வைத்தியசாலைகளில் நிரந்தர சமையலாளர்கள் இல்லாதநிலமை காணப்படுகின்றது. தற்காலிகமாக சமையல் வேலையில் ஈடுபடுவோரும் திடீரென வராதுவிட்டால் நோயளர்கள், கடைகளில் உணவு வாங்க வேண்டிய நிலமை ஏற்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

வைத்தியசாலையில் உணவு பெற்றுக் கொள்வதற்கு நோயாளர்கள் பதிவு செய்த பின்னர் தமது வீடுகளிலிருந்து உணவு கொண்டு வருவதில்லை. வைத் தியசாலைகளில் சமையல் வேலைகளில் ஈடுபடும் தற்காலிக பணியாளர்கள் திடீரென வராதுவிடும் சந்தர்ப்பத்தில் நோயாளர்களுக்கு வைத்தியசாலை நிர்வாகத்தால் உணவு வழங்கப்படுவதில்லை. இரண்டும் கெட்டான் நிலையில் நோயாளர்கள் கடையில் உணவுகளை வாங்கிச் சாப்பிடும் நிலை ஏற்படுகின்றது.

வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள சமையலாளர் உட்பட பல்வேறு பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு ஆள்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகளும் நடத்தப்பட்டுள்ளன. எனினும் இதுவரை உரிய பதவிக ளுக்கு ஆள்கள் நியமிக்கப்படவில்லை. நிரந்தர சமையலாளர் இல்லாதால் வைத்தியசாலையில் வேறு பதவிக ளில் உள்ளவரை பதில் கடமையாக சமையல் வேலையில் ஈடுபடுத்தி நோயாளர்களுக்கும் பணியாளர்க ளுக்கும் உணவு வழங்கப்படுகிறது. சிலவேளைகளில் பதில் கடமையில் ஈடுபடுபவர் விடுமுறையில் நின்றால் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்களால் நோயாளர்களுக்கு உரிய நேரத்தில் உணவு வழங்க முடியாதுள்ளது என்று வைத்தியசாலைகளின் நிர்வாகங்களால் தெரிவிக்கப்பட்டது.

(ற-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டானில் உள்ள குளங்கள் சீரமைக்க வேண்டிய நிலையில்

## நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக.2
ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட கற்சிலைமடு பெரியகுளம் உட்படப் பல குளங்கள் சீரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அவற்றைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

> ❝குளங்கள் சீரமைக்கப்படாது உள்ள நிலையில், விளை நிலங்கள் காடுகளாக மாறியுள்ளன. வன்னிப் பெரு நிலப்பரப்பில் உள்ள அனைத்துக் குளங்களும் சிறந்த முறையில் சீரமைக்கப்பட்டு அதிகூடிய நீர்வளத்தைப் பெற சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஆவன செய்ய வேண்டும்❞

அவர்கள் தெரிவித்ததாவது:
ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட கற்சிலைமடு பெரியகுளம், உலக உணவு நிறுவனத்தால் கமநல சேவைத் திணைக்களத்தின் உதவியுடன் கற்சிலைமடு மக்களால் சீரமைக்கப்பட்டது. சீரமைக்கப்பட்டுக் குறுகிய காலத்தில் மீண்டும் இந்தக் குளத்தின் அணைக்கட்டு பெருமளவு சேதத்துக்குள்ளானது. அணைக்கட்டின் மத்தியில் பெரிய உமை ஒன்று இருந்து, அதன்மூலம் குளம் முறிக்கும் அபாய நிலை ஏற்பட்டது.

அதை கமநல சேவை நிலையத்துக்கு விவசாயிகள் உடனடியாகத் தெரியப்படுத்தினர். அப்போதிருந்த பெரும்பாக உத்தியோகத்தர் தி.அமிர்தலிங்கம் உடன் கவனம் எடுத்து, விவசாயிகளின் உதவியுடன் அவரின் நேரடிக் கண்காணிப்பில் மண்மூடைகள் அடுக்கி உடைப்பு தடுத்து நிறுத்தப்பட்டது. அது தற்காலிகமான வேலையாகவே இருந்தது. தற்போது துருசுக்கான கதவு இல்லாததால் வான் கட்டு உடைந்துள்ளது. குளத்துக்கான வான் கட்டு சுமார் 100 வருடங்கள் பழைமை வாய்ந்தது. அது தற்போது வெடித்தநிலையில் உள்ளது. 12 அடி நீர் கொள்ளளவு கொண்ட கற்சிலைமடு பெரியகுளத்தின் கீழ், 147 ஏக்கர் வயல்கள் உள்ளன. குளத்து நீரை நம்பியே அந்த நிலங்களில் விவசாயிகள் விவசாயத்தை மேற்கொண்டனர். குளத்தின் நீரேந்துப் பிரதேசத்தில் மக்களுக்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் காணிகள் பண்படுத்தலால் மணல் அனைத்தும் குளத்துக்குள் சேர்கின்றது. குளம் தூர்ந்த நிலையில் உள்ளது. நீர் கொள்ளளவு குறைந்துள்ளது. இந்த வருடம் 35 ஏக்கர் மட்டுமே சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

பெருங்கருவேப்ப முறிப்புக் குளம், கட்டைக்காட்டுக்குளம், வெடுக்குநாறிக்குளம், சின்னக் குளம் போன்ற குளங்களும் சீரமைக்கப்பட வேண்டியது அவசியம். சின்னக் குளமானது உடைப்பெடுத்து 8 வருடங்கள் கடந்தும், உடைப்பெடுத்த நிலையிலேயே உள்ளது. கட்டைக்காட்டுக்குளம் கடந்த காலத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின்போது உடைப்பெடுத்த நிலையில் இன்றும் அணைக்கட்டு முழுமையாக்கப்படவில்லை.

முல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறிய நீர்ப்பாசனக் குளங்களை நம்பியே விவசாயிகள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றனர்.

எத்தனையோ குளங்கள் சீரமைக்கப்படாது உள்ள நிலையில், விளை நிலங்கள் காடுகளாக மாறியுள்ளன. வன்னிப் பெரு நிலப்பரப்பில் உள்ள அனைத்துக் குளங்களும் சிறந்த முறையில் சீரமைக்கப்பட்டு அதிகூடிய நீர்வளத்தைப் பெற சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஆவன செய்ய வேண்டும் - என்று கோரிக்கை விடுத்தனர்.

"ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட, பாதிக்கப்பட்டு, கைவிடப்பட்ட அனைத்து குளங்களின் விவரங்களும் கமக்கார அமைப்புக்கள் ஊடாக திரட்டப்பட்டு, எங்களுடைய தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டது. எமக்கு உரிய நிதி கிடைக்கும்போது முன்னுரிமை அடிப்படையில் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. சில குளங்களுக்குரிய வேலைகள் எம்மால் தொடங்கப்பட்டுள்ளன"- என்று ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற-21,500,ரி7)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சாரணர் குழு நூற்றாண்டை முன்னிட்டு, ஆவணக் கண்காட்சி கடந்த 28 ஆம் திகதியில் இருந்து 30 ஆம் திகதி வரை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில் சாரணர் குழுவால் தொகுக்கப்பட்ட ஆவணங்களுடன் யாழ்ப்பாணத்தின் தொன்மையான பயன்பாட்டுச் சின்னங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. (ற)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 2
கண்ணனின் "கிறுக்கிப் போட்ட காகிதங்கள்" கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி தெற்கு - மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. 'ஒளி அரசி' மாத இதழின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த திருமதி பா.ஜெயிலா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக கோப்பாய் ஆசிரியகலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் சிறப்பு விருந்தினராக கரவெட்டி தெற்கு - மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் அ.வினோதராஜும் கலந்துகொள்வர். (ற-5-108)

## நுழைவாயில் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக. 2
இரத்தினம் கமலாதேவி ஞாபகார்த்தமாகக் கரணவாய் கிராய் இந்து மயானத்தில் அமைக்கப்பட்ட நுழைவாயில் திறப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் முகாமையாளர் மா.பரமானந்தம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், தலைமை விருந்தினராக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா கலந்து கொண்டு நுழைவாயிலைத் திறந்து வைப்பார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோரும், வடமாகாண சபை உறுப்பினர்களான க.தர்மலிங்கம், வே.சிவயோகன், எம்.கேசிவாஜிலிங்கம், ச.சுகிர்தன் மற்றும் சி.அகிலதாஸ் ஆகியோருடன் - கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, பிரதேச சபைச் செயலாளர் அ.வினோதராஜ் மற்றும் முன்னாள் பிரதேசசபைத் தலைவர் பொ.வியாகேசு ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொள்வர். (ற-5-108)

## மரங்களை நடுவதில் மக்கள் முனைப்புக் காட்டவேண்டும்

### *'வேள்ட்விசன்' நிறுவன சங்கானை பிரதேச திட்ட முகாமையாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 2
வடக்கிலும் சரி, ஏனைய பிரதேசங்களிலும் சரி, காடழிப்பு மற்றும் மரங்களைத் தறித்தல் என்பன தொடர்ந்து கொண்டிருக்கின்றன. மரங்களைப் பாதுகாப்பதற்கும் மரங்களை நடுகை செய்வதற்கும் மனிதன் தினமும் தவறிழைத்த வண்ணமே உள்ளான்.

இவ்வாறு தெரிவித்தார் 'வேள்ட் விசன் லங்கா' தன்னார்வ சர்வதேச தொண்டு நிறுவனத்தின் சங்கானை பிரதேச திட்டமுகாமையாளர் ஜி.ஜே.அனுராஜ்.

வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட, பசுமை கரங்கள் திட்டத்தின் கீழ் சமூகமட்ட பிரதிநிதிகள் 100 பேருக்கு பயன்தரு மரங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
மனிதனுக்கு உயிர் வாழ்வதற்கு நுரையீரல் எவ்வளவு முக்கியமானதோ, அதுபோலவே பூமியும் நீண்ட காலம் நிலைப்பதற்கு மரங்கள் தேவை. காடுகள் அழிக்கப்படுவதாலும், மரங்கள் அழிக்கப்படுவதாலும் பூமியின் வெப்பநிலை அதிகரித்த வண்ணம் உள்ளது.

வேப்பமரம், புளியமரம், இலுப்பை மரங்கள் போன்றன பொருளாதார வளம் மிக்க மரங்கள். இவ்வாறான மரங்களை நடுவதற்கு ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு விசேட தினங்களிலும் மரம் நட்டு பேணிப்பாதுகாக்க மனிதர்கள் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மரம் நடுகை என்பது மிக அருகிவிட்டது. இதற்கான செயற்றிட்டத்தை ஒவ்வொரு அரச தனியார் நிறுவனங்களும் பொது அமைப்புக்களும் முன்னெடுக்கவேண்டும். சமூக சேவை நிறுவனங்களான உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட அரச நிர்வாகங்கள் கூடிய அளவுக்கு முனைப்புக்காட்டி கடந்த காலங்களில் அழிவடைந்த மரங்களுக்கு பதிலீடாக மரங்களை நட்டு, பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.

வலி. மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலைகள் அனைத்துக்கும் 1,000 பயன் தரு மரங்களை வழங்கி, நடுகை செய்ததுடன் இதன் முன்னேற்ற விவரங்களை அதிபர்கள் ஊடாக பெற்ற வண்ணம் உள்ளோம். இதுபோல் கடந்த காலங்களில் சிலரின் தன்னார்வ முயற்சியின் பயனாக மரங்களை இலவசமாக வழங்கினர். வழங்கிய மரங்கள் எந்த வகையான பயனை மக்களுக்கு வழங்கின என்பது தொடர்பில் மக்கள் அதனை ஆய்வு செய்ய வேண்டும்.

பாடசாலை மாணவர்கள், அரச சேவையாளர்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், மாதர் மற்றும் பொது நிலை அமைப்புக்கள் என்பன மரங்களை நடுவதற்கு முனைப்புக் காட்டி, எமது சமூகத்தில் எமது வளத்தில் மாறுதல்களை ஏற்படுத்தி, பசுமைப் புரட்சியைக் கொண்டு வரவேண்டும் - என்றார். (ற-ரி, 50)

## முதியவர்கள் உதவிப் பணத்தை வீடுகளில் கொடுக்க நடவடிக்கை

தென்மராட்சி, ஓக. 2
சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் முதியோர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் விநியோகிக்கும் காலப்பகுதியில் சுகவீனம் காரணமாக அஞ்சல் அலுவலகத்துக்கு வரமுடியாதவர்களுக்கு அஞ்சல் அலுவலகப் பணியாளர்கள் மூலம் வீடுகளுக்குச் சென்று கொடுப்பனவைக் கையளிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமது சுகவீனத்தைச் சுட்டிக்காட்டி அஞ்சல் அதிபருக்கு விண்ணப்பித்தால் அவரது வீட்டுக்கு அஞ்சல் அலுவலகப் பணியாளர் ஒருவர் மூலமாக விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று - சாவகச்சேரி அஞ்சல் அதிபர் தெரிவித்தார்.

கொடுப்பனவுகள் விநியோகிக்கப்படும் வேளைகளில் முதியவர்கள் பலர் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில், வாகனங்களில் பணம் செலுத்தி வந்து கொடுப்பனவைப் பெற்றுச் செல்கின்றனர்.

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் முதியோர்களுக்கான கொடுப்பனவுகளைப் பெறுவோர், தமது சரியான முகவரியை அஞ்சல் அலுவலகத்தில் வழங்கினால், கொடுப்பனவு காலத்தில் அஞ்சல் ஊழியர்கள் மூலம் தகவல் கூற வசதியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தரப்புக் கோரிக்கை வெற்றி பெற விட்டுக் கொடுப்புடனே நடக்க வேண்டும்

## அறிவுரை கூறுகின்றார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, ஓக. 2
நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தேசிய அரசின் முயற்சிகளில் தமிழர் தரப்பின் கோரிக்கைகளும் வெற்றிபெற வேண்டுமாயின் வடக்கு அரசியல் தலைமைகளும் விட்டுக் கொடுப்புடனும் – புரிந்துணர்வுடனும் செயற்பட வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சியான ஹெலஉறுமயவின் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.
கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இனவாதத்தால் ஏற்பட்ட விளைவு அனைத்து மக்களுக்கும் தெரியும். ஆயுத மோதலில் ஆரம்பித்த பிரிவினைவாதப் பயணம், மத, இனரீதியில் நாட்டை நாசப்படுத்தியது. இனவாத – பிரிவினைவாத செயற்பாடுகளையும் தாண்டி மக்களை ஒன்றிணைக்கும் நல்லிணக்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தேசிய அரசின் ஊடாக இது சாத்தியமாகியது.
வடக்கு – கிழக்கு – தெற்கு உள்ளிட்ட சகல மக்களின் பிரச்சினைகளுக்கும் தேசிய அரசு தீர்வு கண்டு வருகின்றது. நீண்ட கால இனப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் நாட்டை அபிவிருத்தியின் பாதையில் கொண்டு செல்லத் தடையாக இருந்த காரணிகளைத் தகர்த்தெறிந்து நாட்டை அபிவிருத்தியின் பாதையில் கொண்டு செல்கின்றோம்.
இனப் பிரச்சினைக்கும், பொருளாதாரப் பிரச்சினைக்கும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் அரசு என்ற ரீதியில் எம்மால் உறுதியான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும். வடக்கிலும், தெற்கிலும் மக்கள் மத்தியில் உருவாக்கப்படும் இனவாதத்தை எவ்வாறு முறியடிப்பது?
வடக்கில் சிங்கள மக்களைக் குடியேற்றக் கூடாது என்று தமிழ் அரசியல் தரப்புக்கள் கூறுகின்றன என்றால் தெற்கிலும் அதே நிலைமையே ஏற்படும்.
வடக்கில் தமிழ் மக்கள் இனவாதத்தைக் கையில் எடுக்கும் போது தெற்கிலும் சிங்கள மக்கள் இனவாதத்தையே கையில் எடுப்பார்கள். சர்வதேச தரப்பிடமும் இராஜதந்திரிகளிடமும் வடக்கு முதலமைச்சர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவிக்கும் கருத்துக்கள் பிரச்சினைகளை வளர்க்கும் வகையில் அமைந்துள்ளன.
வடக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு அவர்களுக்கான சுதந்திரம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது. அன்று வடக்கில் இருந்த பிரிவினைவாதக் கொள்கை இன்றும் தமிழர் தரப்பிடம் காணப்படுகின்றது.



இலங்கையில் உள்ளகப் பொறிமுறைகளின் மூலமாக உண்மைகளைக் கண்டறியும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதைத் தவிர்த்து பன்னாட்டு விசாரணைகளை மட்டுமே தமிழர் தரப்புக் கோரி நிற்கின்றது. பன்னாட்டுத் தரப்பினர் இலங்கையில் உள்ளக விசாரணைகளை பலப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையே முன்வைக்கும் நிலையில் இவர்கள் தொடர்ந்தும் பன்னாட்டுத் தரப்பின் அழுத்தங்களைக் கோரி நிற்கின்றமை ஏற்றுக் கொள்ள முடியாதது.
நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தேசிய அரசின் முயற்சிகளில் தமிழர் தரப்பின் கோரிக்கைகளும் வெற்றி பெற வேண்டுமாயின் வடக்கு அரசியல் தலைமைகளும் விட்டுக் கொடுப்புடனும், புரிந்துணர்வுடனும் செயற்பட வேண்டும் – என்றார். (ா–5)



கூட்டு எதிரணியின் ஏற்பாட்டில் கண்டியில் இருந்து கொழும்புக்கு நடைபவனி நடத்தப்பட்டது. அதில் முன்னாள் ஜனாதிபதியும், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்சவும் கலந்து கொண்டார். நடைபவனியில் அவர் வாகனத்தில் இருந்தவாறு பயணித்தார். ஒரு கட்டத்தில் களைப்படைந்து ஐஸ் பழம் வாங்கி ரசித்துச் சுவைத்தார்.

# கடந்த மே மாதத்தில் ஏற்றுமதிகள் குறைவு

## மத்திய வங்கி அறிக்கை கூறுகின்றது

கொழும்பு, ஓக. 2
இலங்கையின் கடந்த மே மாத ஏற்றுமதிகள் 12 வீதத்தால் வீழ்ச்சியடைந்தன என்று இலங்கை மத்திய வங்கி தகவல் வெளியிட்டது.
கடந்த ஆண்டின் மே மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மே மாத ஏற்றுமதிகள் 12 வீதத்தால் குறைந்துள்ளன. 776 மில்லியன் டொலர் ஏற்றுமதியே இந்த ஆண்டு மே மாதம் நடந்துள்ளது.
கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மே மாதத்தில் ஆயிரத்து 590 மில்லியன் டொலர் இறக்குமதிகள் இடம்பெற்றுள்ளன. இது 0.3 வீத அதிகரிப்பாகும்.
கடந்த ஆண்டு மே மாதத்துடன் ஒப்பிடுகையில் வர்த்தக பற்றாக்குறை 15.7 வீதமாக விரிவடைந்துள்ளது.
இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களிலும், இறக்குமதிகள் 2.8 வீதத்தால் (7 ஆயிரத்து 645 மில்லியன் டொலர்) குறைவடைந்துள்ளன. ஏற்றுமதிகள் 6 வீதத்தால் (4 ஆயிரத்து 211 மில்லியன் டொலர்) குறைந்துள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்தது.
சுற்றுலாத்துறை வருவாய் 5.3 வீதத்தால் (3 ஆயிரத்து 434 மில்லியன் டொலர்) அதிகரித்துள்ளது என்றும் மத்திய வங்கி அறிக்கையில் கூறப்பட்டது. (ா–5)

# விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை ஆராய்ந்தது அமெ. இராணுவக் குழு

கொழும்பு, ஓக.2
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புப் பயன்படுத்திய ஆயுதத் தளபாடங்களை அமெரிக்க இராணுவக் கல்லூரி இராணுவக் குழு நேரில் சென்று ஆராய்ந்தது.
அமெரிக்க இராணுவக் கல்லூரியின் கீழ் உள்ள நவீன போர் நிறுவனத்தைச் சேர்ந்த இளநிலை இராணுவத்தினரைக் கொண்ட குழு இலங்கைக்கு அண்மையில் வந்தது. அந்தக் குழு வடக்குக்கும் வந்தது.
வடக்கில் அரசியல் தரப்பு, சிவில் சமூகத் தரப்பினரை இந்தக் குழு சந்தித்தது. இலங்கை இராணுவ அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தியது.
புலிகள் பயன்படுத்திய ஆயுதங்களையும் பார்வையிட்டது. புலிகளின் ஆயுதங்கள் முல்லைத்தீவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ா–5)





# இலங்கையின் அபிவிருத்திக்கு ஜப்பான் அரசு சலுகைக் கடன்

## 90 மில்லியன் டொலர் வழங்கியது

கொழும்பு, ஓக. 2
இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஜப்பான் அரசு 90 மில்லியன் டொலர் (13 பில்லியன் ரூபா) சலுகைக் கடன் வழங்கியது.



இது தொடர்பான பிரகடனப் பத்திரத்தை நிதியமைச்சர் ரவி கருணா நாயக்கவிடம் ஜப்பானியத் தூதுவர் கெனிச்சி சுகமா கையளித்தார்.
2016ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அரசு முன்மொழிந்திருந்த அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கே இந்த சலுகைக் கடன் வழங்கப்பட்டது.
ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர், 25 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தும் வகையில் இந்தக் கடன் வழங்கப்பட்டது. இந்தக் கடனுக்கு 1.4 வீத வட்டியையே இலங்கை செலுத்த வேண்டும். இதுபோன்ற சலுகைக் கடனை இலங்கைக்கு ஜப்பான் வழங்குவது இதுவே முதற்தடவை. (ா–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அமைச்சர் பசிலின் விளக்கமறியல் நேற்று நீடிப்பு

## கடுவலை நீதிவான் மன்ற நீதிபதி உத்தரவிட்டார்

கொழும்பு, ஓக.2

முன்னாள்பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவின் விளக்கமறியலை எதிர்வரும் 8ஆம் திகதி நீடித்தார் கடு வலை நீதிவான் தம்மிக்க ஹேமபால.

கடந்த ஆட்சியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இருந்த வாழ்வின் எழுச்சித் திணைக்களத்திற்குரிய நிதியைப் பயன்படுத்தி பிளாஸ்ரிக் குழாய்களைக் கொள்வனவு செய்ததில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் கடந்த 18ஆம் திகதி பசில் ராஜபக்ச கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் கடு வலை நீதிவான் மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நேற்று திங்கட்கிழமை மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார். அவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி தம்மிக்க ஹேமபால உத்தரவிட்டார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து ஜனவரி 10 ஆம் திகதி உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறிய பசில் ராஜபக்ச 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி நாடு திரும்பினார். ஏப்ரல் 22ஆம் திகதி வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் நிதியத்தின் ஆணையாளர் உட்பட மூவருடன் பசில் ராஜபக்சவும் கைது செய்யப்பட்டார்.

பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த அவர் கடந்த மே மாதம் 12ஆம் திகதி மாத்தறை காணி விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டு மாத்தறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு அன்றே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த ஜூன் மாதம் 6 ஆம் திகதி கம்பஹா மாவட்டத்திலுள்ள காணி விவகாரம் தொடர்பில் மீண்டும் கைது செய்யப்பட்ட பசில் ராஜபக்சவுக்குப் பிணை வழங்கப்பட்டது.

நான்காவது தடவையாக கடந்த 18ஆம் திகதி பசில் ராஜபக்ச கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டார். (ற-5)

# பொலிஸாரின் கோரிக்கை நீதிமன்றால் நிராகரிப்பு

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பதினொரு நாடாளுமன்ற உறுப்பினர்களை நீதிமன்றத்தில் முன்னிலையாவதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்ற பொலிஸாரின் கோரிக்கையை கோட்டை நீதிவான் மன்றம் நிராகரித்தது.

11 பேரும் நீதிமன்ற உத்தரவை மீறி மத்திய வங்கியின் ஆளுநருக்கு எதிர்ப்பு வெளியிட்டதன் காரணமாக இந்த உத்தரவைப் பிறப்பிக்குமாறு பொலிஸார் கோரியிருந்தனர்.

கோட்டை நீதிவான் லங்கா ஜெயவர்த்தன இந்தக் கோரிக்கையை நிராகரித்து உத்தரவிட்டார். (ற-5)

உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன
எக்ஸ்றீம்
சேவர்

ரூ. 1000 தொடக்கம் ரூ. 50 மில்லியனுக்கு மேல் நீங்கள் தொடர்ச்சியாக சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும் அதிகபட்ச வட்டி வருமானமாக 6.50% (AER 6.70%) முதல் 9% (AER 9.38%) வரை கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

- உங்கள் கணக்கில் ஆகக்குறைந்த தொகையாக ரூ.1000 இருப்பினும் வட்டி வழங்கப்படும்.
- வட்டி வீதமானது வாராந்த இலங்கை வங்கிகளுக்கிடையிலான சலுகை வீதங்களுக்கு தொடர்புபடுத்தப்படுவதுடன் (SLIBOR) வாராந்தம் மீள் பரிசீலிக்கப்படும்.
- எந்தவொரு ATM இலிருந்தும் பெறப்படும் எல்லையற்ற மீள் பெறுகைகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டா. (LankaPay மூலமான நாடு முழுவதும் பரந்துள்ள 3500க்கும் அதிக ATM வலையமைப்புகள்)
- உங்கள் சேமிப்புத் தொகையின் 90% வரை முற்பணமாக சலுகை வட்டி வீதத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112350000

இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கி கிளைக்கு விரைந்து வர்தன எக்ஸ்றீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.

www.dfcc.lk

DFCC வங்கி ஃபிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலை [illegible] மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

*நிபந்தனைகள் உண்டு.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பிரதேசங்களின் வரலாற்றை மாற்றும் செயல் தேவை தானா…?

'இரப்பானைப் பிடித்ததாம் பறப் பிராந்து' என்று பேச்சு வழக்குத் தமிழில், வாசகம் ஒன்று உண்டு.

அதே நிலைக்கு எமது மக்களைத் தள்ளும் தடத்தில், நல்லாட்சி அரசின் அபிமானிகள், அவ்வப்போது உருவாகிச் செயற்படுகிறார்கள்.

அதில் ஆகப் பிந்திய அடாவடித்தனமே, முல்லைத் தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பெயர் பெற்ற கற்சிலைமடு சிவன்கோயில் ஆலயத்துக்குச் சொந்தமான காணியைக் கபளீகரம் செய்து தமதாக்கும் போக்கு ஆகும்.

ஒட்டுசுட்டானில் உள்ள, தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியாரின் சொத்துக்களான - காணிகளில் இராணுவத்தினர் புத்தர் பெருமானின் சிலைகளை அமைத்து வருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அந்தப் பிரதேசத்தில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள், புத்தர் வழிபாடுகள் நடத்தப்பட்டன என்ற போர்வையிலேயே கபளீகரம் பெரிதுயர்ந்து வருகிறது.

குறிப்பிட்ட இடம் அநுராதபுரத்தைச் சேர்ந்தது என்று அறிவித்தல் பலகை ஒன்றும் நடப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அத்தோடு தரிக்கவில்லை. மன்னாகண்டல் பகுதியில் தமிழ் விவசாயிகளின் உரக் களஞ்சியசாலையின் காணியும் ஆக்கிரமிக்கப்பட்டு, புத்தர் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

அதேவகை சார்ந்து, ஒட்டுசுட்டான் பிரதேசம் மிக விரைவில் சிங்கள மயமாக்கப்பட்டு விடும் என்ற அச்சமும் எழுவதாக சிவன் ஆலயத்தின் நிர்வாகி தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் கற்சிலைமடு, பண்டார வன்னியன் பற்றிய வரலாறு பொறிக்கப்பட்ட இடம் என்பதாகும். ஆங்கிலேய ஆட்சியாளர் காலத்தில் அது நடந்தேறியது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல எல்லைக் கிராமங்கள் கொழும்பு அரசுகளின் அனுசரணையோடு கபளீகரம் செய்யப்பட்டு வந்த நிலையில் --

எல்லையோரக் கிராமங்கள் அரித்து எடுக்கப்பட்டு வந்த நிலையில்--


அதன் மையப் பகுதியிலும் கூசாமல் கை வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை தொடரும் பட்சத்தில், புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட்டு நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாகவே, வடக்கின் முல்லைத்தீவு மாவட்டம் முற்றுமுழுதாக, நூறு சதவீதம் சிங்கள மயமாகி விடும் போக்கே உயர்ந்து தெரிகிறது.

எந்த வகை சார்ந்த வரலாற்று ஆதாரமும் இல்லாத, புதிய செயற்கை வரலாற்றை படைப்பதற்கு, படைத்தரப்பினருக்கு--

புவியியல் சரிதத் திணைக்களம் அதிகாரம் வழங்கியதா என்ற பென்னம் பெரிய வினாவும் எழுகிறதே…!

அவ்வாறாயின், நல்லாட்சி அரசின் அனுமதியும் கிடைத்துவிட்டதோ என்றும் கண்டறியப்படவேண்டும்.



யாழ்.படைகளின் கட்டளைத் தலைமையகத்தில் இடம்பெற்ற சந்திப்புக்குப் பின்னர் அமெரிக்க அதிகாரிகள் எடுத்துக் கொண்ட படம்

நித்தியபாரதி

தமது எதிர்காலப் போர்களுக்காக, அமெரிக்காவுக்கு வெளியே, நடக்கும் போர்கள் மற்றும் இராணுவ விவகாரங்களை ஆராய்வதற்காக, வெஸ்ற்பொயின்ற் அதிகாரிகள் உலகம் முழுவதிலும் முன்னர் பயணங்களை மேற்கொண்டு வந்தனர்.

1919இல் முடிவுற்ற முதலாம் உலகப் போரில் பங்குகொண்டு அதிலிருந்து தப்பிய இராணுவ வீரர்கள் பகிர்ந்து கொண்ட அனுபவங்கள் தற்போதும் முன்னணிப் போர் அரங்குகளில் பயிற்றுவிக்கப்படும் முக்கிய இராணுவப் பாடங்களாக உள்ளன.

### வருகையும் பகிர்வும்

1875இல், உள்நாட்டுப் போர்ப் படையினருக்கான அமையத்தை அமெரிக்க இராணுவத் தளபதியான ஜெனரல் வில்லியம் ரி.செர்மன் தனது கட்டளைத் தளபதி பதவி நிலையிலிருந்தவாறு மீளவும் வடிவமைத்தார். இவர் ஜப்பான், சீனா, இந்தியா, பேர்சியா, ரஷ்யா, இத்தாலி, ஜேர்மனி, ஒஸ்ரியா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து நாடுகளின் இராணுவங்களை, அமெரிக்க இராணுவத்தினர் நேரடியாகச் சென்று பார்வையிடுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். இவர் இது தொடர்பான தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

இதேபோன்று 1855இல், அமெரிக்க இராணுவத் தளபதியாகக் கடமையாற்றிய றிச்சர்ட் டெலாபீல்ட், செவஸ்ரப்போல் மீதான கிறிமியா போரை நேரடியாகச் சென்று, அவதானிப்பதற்கான குழுவொன்றுக்கு தலைமை தாங்கியதுடன், அமெரிக்காவின் இராணுவக் கல்லூரியான வெஸ்ற் பொய்ன்றில் கண்காணிப்பாளராகப் பதவி வகித்த வேளையில், இதுதொடர்பான தனது அனுபவங்களை அறிக்கையாக்கினார்.

அமெரிக்கா போர் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் 150 தடவைகளுக்கு மேல் தனது இராணுவத்தினரை வேற்று நாடுகளில் இடம்பெற்ற போர்களைப் பார்வையிடுவதற்கும் அதிலிருந்து அனுபவங்களைக் கற்றுக்கொள்வதற்கும் அனுப்பியிருந்ததாக வரலாறு கூறுகிறது.

இந்த நடைமுறையின் அடிப்படையில், இந்தவாரம் அமெரிக்க இராணுவக் கல்லூரியின் கீழுள்ள நவீன போர் நிறுவகத்தைச் சேர்ந்த இராணுவத்தினர் சிறிலங்காவுக்கு வருகை தந்தனர். இவர்கள் சிறிலங்காவில் கடந்த 2009இல் முடிவுக்கு வந்த மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரை ஆராய்வதற்கும் அதிலிருந்து போரியல் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனும் சிறிலங்கா வந்தனர்.

அமெரிக்க இராணுவத்தினரைப் பொறுத்தளவில் சிறிலங்காவின் போரியல் அனுபவங்கள் இவர்கள் ஒருபோதும் தெரியாதவையாக இருக்கலாம்.

உலக நாடுகளின் இராணுவங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மற்றும் வரலாறு தொடர்பாக நூல்கள் மற்றும் உசாத்துணைகளின் ஊடாக மட்டும் நோக்கக்கூடாது எனவும் அவற்றை நேரடியாகத் தரிசிப்பதன் மூலம் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதையே போரியல் தத்துவம் எடுத்துரைக்கிறது.

அண்மையில் ஏற்பட்டுவரும் நோய்களின் தாக்கங்களை இளம் மருத்துவர்கள் கற்றுணர்வது போலவும், சட்ட மாணவர்கள் நாளாந்தம் நடைபெறும் வழக்குகளைத் தொடர்ந்தும் அவதானிப்பது போலவும், இளநிலை இராணுவ அதிகாரிகளும் தற்போதைய உலக நாட்டுப் போரை ஆராய வேண்டும்.

கடந்த கால இராணுவ வரலாறு, தற்போதும் இராணுவ வீரர்களை வழிநடத்துவதற்கான முக்கிய வழிகாட்டிகளாக உள் ளன. சேர் மைக்கேல் ஹொவார்ட் எழுதிய, 1961 என்ற கட்டுரை நூலில், போரின்போது ஆழம், அகலம், பின்னணி போன்ற மூன்று முக்கிய காரணிகளைக் கருத்திற்கொள்ள வேண்டும் என இராணுவ வீரர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இதேபோன்று நவீன போரியல் தத்துவமானது, மூலோபாயம், சமூகம் மற்றும் ஆளுமை ஆகிய மூன்று விடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது.

### காரண காரியங்களின் ஆய்வு

போரின் மூலோபாயக் காரணத்தைப் புரிந்து கொள்வதென்பது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் இதன்மூலம் அடிப்படைப் பிரச்சினைகள், நோக்கங்கள் தொடர்பான பதில்கள் முன்வைக்கப்படுகின்றன. பெற்றோலிய வளத்துக்கான போர், ஆட்சியைக்கைப்பற்றுவதற்கான போர், அடக்குமுறையிலிருந்து விடுபடுவதற்கான போர், தற்பாதுகாப்பற்றவர்களைப் பாதுகாப்பதற்கான போர் எனப் போரின் நோக்கங்கள் பல வகைப்படுகின்றன.

இந்த வகையில் சிறிலங்காவுக்குப் பயணம் செய்துள்ள அமெரிக்காவின் இராணுவக் கல்லூரியைச் சேர்ந்த இளநிலை இராணுவத்தினர், உள்நாட்டுப் போரின் மூலோபாயக் காரணத்தை ஆராய்வார்கள். அத்துடன் இவர்கள் தந்திரோபாயத் தெரிவுகள், போர் முறைமைகள், இராஜதந்திர அணுகுமுறைகள், அரசியல் அவாக்கள், மனிதக் கேடயங்கள், தொழிற்றுறை வளர்ச்சி, நவீன ரக ஆயுதங்கள், தற்கொலைப் பயங்கரவாதம் போன்ற பல்வேறு விடயங்களைக் கற்றுக்கொள்வார்கள். இதன் மூலம் அமெரிக்காவின் இளநிலை இராணுவத்தினர் சிறிலங்காவில் தொடரப்பட்ட உள்நாட்டுப் போரை அறிவார்ந்த முறையில் நோக்க முடியும்.

இவ்வாறான போர் ஒன்றை இணையத்தின் ஊடாக வாசித்தறிவதென்பது அதன் உண்மையான தோற்றத்தை ஒருபோதும் உணர்த்தாது. போர் இடம்பெற்ற இடத்துக்கு நேரடியாகச் சென்று அதைப் பார்வையிடும்போது மட்டுமே அந்தப் போரின் உண்மையான முகத்தை அறியமுடியும்.

ஐ.எஸ்.ஐ.எஸ். இழைத்த கொடுமைகள், ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு, வடகொரியாவின் அச்சுறுத்தல், சூடானில் இடம்பெறும் கொடுமைகள் போன்ற அனைத்தையும் அவற்றை நேரில் சென்று பார்வையிடுவதன் மூலம் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். அதாவது இராணுவத்தினர் குறித்த போரின் தள உண்மையைக் கண்டறிய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்காலப் போர்முனைகளைத் தரிசிப்பதால்

# பயன்பெறப்போகும் அமெரிக்கப் படையினர்

வேண்டும். அதுவே அவர்களுக்கு அதன் நோக்கத்தைத் தெளிவாகப் பயிற்றுவிக்கும்.

### அவதானங்களுடான மனநிலைகளின் புரிதல்

இவ்வாறானதொரு கற்றலைப் புறக்கணிக்கும் எந்தவொரு இராணுவமும் தனது எதிரியின் மனநிலை அல்லது செல்வாக்குச் செலுத்தும் சூழல் தொடர்பான முழுமையான காரணியைப் புரிந்து கொள்ள முடியாது. இந்தக் காரணிகளை மானுட, சமூக மற்றும் உளவியல் ரீதியாக நோக்கும் போது மட்டுமே போர் சார்ந்த மூலோபாயமானது முழுமை பெறுகிறது.

சிறிலங்காவுக்குப் பயணம் செய்துள்ள அமெரிக்காவின் இராணுவக் குழு அங்கு நடைபெற்ற போரின் தோற்றப்பாடு, நோக்கங்கள் மற்றும் அவை சார்ந்த கருத்துக்களை அதில் சம்பந்தப்பட்ட தமிழ்ப் புலிகளைச் சேர்ந்தவர்கள், அரசதரப்பினர் மற்றும் சமூக வலைத்தளங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்வார்கள்.

அமெரிக்க இராணுவத்தினரின் சிறிலங்காவுக்கான பயணமானது இங்கு இடம்பெற்ற போருக்கான ஒரு சாளரமாக அமையும். அத்துடன் இது ஒரு கண்ணாடியாகவும் அமையும். போர் என்பதை தனிப்பட்ட ரீதியாக மிகவும் நுணுகி ஆராய்ந்து அனுபவங்களைப் பெறும் போது மட்டுமே அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும். போரியலை முழுமையாகப் புரிந்து கொள்வ தற்கு ஒருவர் போரில் ஏற்பட்ட உயிரிழப்புக்களை நேரில் பார்த்திருக்க வேண்டும். இதற்கு இரக்கம் மற்றும் அனுதாபம் ஆகிய இரண்டும் தேவைப்படுகின்றன.

சிரியாவில் இடம்பெற்ற அண்மைய போரானது வெடிபொருள்களின் மணம், மரங்களின் எரிந்த மணம், மனித உடலங்களின் துர்நாற்றம், குப்பைகளிலிருந்து எழுந்த துர்நாற்றம், அச்சம் எனப் பல்வேறு மணங்களையும் உணர்வுகளையும் கொண்டிருந்ததாக அமெரிக்காவைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஜனீன் டீ கியோவன்னி குறிப்பிட்டிருந்தார்.

இவர் பெற்றுக்கொண்ட பல்வேறு உணர்வுகள் மற்றும் மணங்களை சிறிலங்காவின் முன்னாள் போர்க்களத்தைத் தரிசிக்கும் அமெரிக்க இராணுவக் கல்லூரியின் நவீன போர் நிறுவகத்தைச் சேர்ந்த இளநிலை இராணுவத்தினரும் பெற்றுக் கொள்வார்கள். ஏனெனில் இவர்கள் புதிய பல போர்க்களங்களில் பணியாற்றியுள்ளனர் என்ற வகையில் இவ்வாறான பல வகையான உணர்வுகளை சிறிலங்காவின் போர்க் களத்திலிருந்தும் இவர்கள் பெற்றுக்கொள்வார்கள்.



யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாருடன் கலந்துரையாடும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள்.

சிறிலங்காவில் நடந்து முடிந்த போரின் அனுபவங்களை அமெரிக்கர்கள் நேரடியாகப் பார்வையிடும்போது, தற்போதும் கொழுந்துவிட்டெரியும் போர் வடுக்கள் தொடர்பில் அவர்களது பார்வையை நாங்கள் சரி செய்யத் தவறினால், எதிர்காலத்தில் இவர்கள் தமது சொந்த வாழ்வில் இவ்வாறானதொரு நிலையை எதிர்கொள்ளும் போது பெரியதொரு ஆபத்தைச் சந்திப்பதற்கான வழியை நாமாகவே உருவாக்கியுள்ளோம் என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.

மனிதாபிமானம் என்பது, இவர்கள் தமது உயிரைப் பணயம் வைத்துப் போராடத் தூண்டுகிறது. இராணுவத் தொழில் என்பது இவர்களைத் தியாகிகள் ஆக்குகின்றது. இவ்வாறானதொரு உயர்ந்த விலையைக் கொடுக்கும் இராணுவ வீரர்கள் போதியளவான கல்வி அறிவைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். நல்வாய்ப்பாக, வெஸ்ற் பொயின்ற் பழைய, சிறந்த வழிமுறையை நினைவுபடுத்துகிறது. 1919இல் வெஸ்ற் பொயின்ற்றிலிருந்து வெளியேறிய இளநிலை இராணுவத்தினர் முதலாம் உலகப் போரின் அனுபவங்களைக் கற்றிருந்தனர். இதே போன்று 2019இல் வெஸ்ற் பொயின்ற்றிலிருந்து வெளியேறும் அமெரிக்காவின் இளநிலை இராணுவத்தினர் சிறிலங்காவில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரிலிருந்து பாடங்களைக் கற்று வெளியேறுவார்கள்.

1919இல் அமெரிக்க இராணுவப் பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளியேறியவர்களுள் ஒருவரான ஜெனரல் அல்பேட் சி.விடேமயர், இரண்டாம் உலகப் போரின் வெற்றித்திட்டம் என்கின்ற நூலின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியிருந்தார். சீனாவில் இடம்பெற்ற ஜப்பானியர்களுக்கு எதிரான போருக்குக் கட்டளை வழங்கும் தளபதியாக இவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவரது இடத்துக்கு நியமிக்கப்பட்ட டக்ளஸ் மக்ஆர்தர் எழுதிய விடயங்கள் இன்றும் அமெரிக்க இராணுவத்துக்கு நல்லதொரு பயனை அளிக்கின்றது.

அதாவது தற்காலப் போர் முனைகளை நேரடியாகத் தரிசித்து, அவற்றை ஆராய்வது, எதிர்காலத்தில் வேறு களமுனைகளில் வெற்றி என்கின்ற பழங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வித்துக்களாக இருக்கும் என்பதே டக்ளஸ் மக்ஆர்தரின் கருத்தாகும்.

1919இல், அவர்கள் நவீன போரை ஆராய்ந்தார்கள், அதன் மூலோபாயத்தை, சமூகங்களை நுணுகி ஆராய்ந்தார்கள். இவர்கள் இதனைத் தன்னார்வத்துடன் ஆராய்ந்தனர். இதனால் அவர்கள் தேவைப்பட்ட வேளைகளில் இவற்றைப் பயன்படுத்தி, போரை வெற்றி கொண்டார்கள். 2019இல் அமெரிக்க இராணுவக் கல்லூரியிலிருந்து வெளியேறுபவர்களும் இதனையே செய்வார்கள்.

## குடிதண்ணீர் பிரச்சினைக்கு அதிகாரிகள் உதவுவார்களா?

ஏழாலை மேற்கில் உள்ள சிறிய ஒழுங்கைகளில் வைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கிகளில் குடிதண்ணீர் ஒழுங்காக நிரப்பப்படாமையினால் இந்தப் பகுதி மக்கள் கடுமையான குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது சிறிய ஒழுங்கைகளில் இடையூறாகக் காணப்பட்ட மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. ஆனால், ஏனோ தெரியவில்லை, நீரைக் கொண்டு வந்து நிரப்புவதில் சம்பந்தப்பட்டவர்கள் அசிரத்தை காண்பிக்கின்றனர்.

இதனால் குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு வேறு இடங்களை நாடிச் செல்ல வேண்டிய அவலநிலையில் உள்ளனர்.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்கள் உரியவர்களிடம் பல தடவைகள் முறைப்பாடு தெரிவித்த போதிலும், பயன் கிடைக்கவில்லை.

ஆகவே இந்த மக்களின் அவல நிலையைப் போக்குவதற்கு உரியவர்கள் முன்வரவேண்டுமெனக் கோரிக்கை விடப்படுகின்றது.

**சி.சந்திரா**

## நாய்களின் தொல்லைக்கு விடிவு கிடைக்குமா?

கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களால் இங்குள்ள வீதிகள் அசிங்கப்படுத்தப்பட்டு, பெரும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களை எவரும் கட்டி வளர்ப்பதாகத் தெரியவில்லை.

இந்த நாய்கள் எந்த வேளையிலும் தெருக்களிலேயே காணப்படுகின்றன.

இதனால் தெருக்களில் இவற்றின் கழிவுகள் நிறைந்து காணப்படுகின்றன.

தெருக்களில் நடந்து செல்பவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதற்கு முடிவுதான் என்ன?

**மா.வசீகரன், சுன்னாகம்**

## சீரமைக்கப்படாத நிலையில் ஒட்டுசுட்டான் சின்னக்குளம்

ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையத்துக்குட்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளமான சின்னக்குளம் 10 வருடங்கள் கடந்தும் சீரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையத்துக்குட்பட்ட கற்சிலைமடுவில் அமைந்துள்ள சின்னக்குளம் கடந்த 2007 ஆம் ஆண்டு உடைப்பெடுத்தது. விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்கியதால் சீரமைக்கப்பட்டபோதிலும், 2008 ஆம் ஆண்டு மீண்டும் பெரிய உடைப்பு ஏற்பட்ட நிலையில், இன்று வரை முறிகுளமாகவே உள்ளது. இந்தக் குளத்தைக் கட்டுவதற்காக அன்றைய கமநலச் சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தரிடம் விவசாயப் பிரதிநிதி மூலம் தெரிவிக்கப்பட்டபோது, 1000 குளத்திட்டத்தின் கீழ் கட்டப்படுவதற்காக இந்தக்குளத்தின் பெயரும் அனுப்பப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின் அணைக்கட்டு அளக்கப்பட்டு, லெவல் எடுக்கப்பட்டு, வேலை ஆரம்பிக்கவுள்ளதாக அங்கு அளவீடு செய்ய வந்தவர்கள் தெரிவித்தனர். ஆனால், அது கடந்த இரு வருடங்கள் கடந்து விட்டது. ஆனால் கட்டப்படும் ஏது நிலை தென்படவில்லை. இதனால் அந்தக்குளம் முறிகுளமாக உள்ளதால் நீரினைத் தேக்கமுடியாத நிலையில் அதன் கீழ் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் கவலையுடன் உள்ளனர். இதை இவ்வாண்டிலாவது சீரமைப்பார்களா என விவசாயிகள் கேட்கின்றனர்.

மேலும், இந்தக் குளம் சீரமைக்கப்படுமாயின் இங்குள்ள ஏழை விவசாயிகள் அதிக பயன்களைப் பெறமுடியும். அதிகாரிகளே இது உங்களுக்குச் சமர்ப்பணம்.

**க.இராசா,ஒட்டுசுட்டான்**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். [illegible] விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஈராக்கில் எரிபொருள் உற்பத்தி நிலையங்கள் மீது தாக்குதல்

பக்தாத், ஓக. 02
வட ஈராக்கில் உள்ள இரண்டு எரிபொருள் உற்பத்தி நிலையங்கள் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 5 பாதுகாவலர்கள் கொல்லப்பட்டனர். தற்கொலைப் படைத் தாக்குதலும் இடம்பெற்றது. கிர்குக் பகுதியில் அமைந்துள்ள ஏபி2 வாயுத் தொழிற்சாலையில், கைக் குண்டு எறிந்து கதவுகளை உடைத்து உள்ளே நுழைந்தவர்கள், தாக்குதலை நடத்தினர். கட்டுப்பாட்டு அறையில் இருந்த 4 ஊழியர்களைச் சுட்டுக் கொன்றனர். அங்கு பணிபுரிந்த ஏனைய ஊழியர்கள் ஓடிஒளிந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர்.

இந்தத் தாக்குதலை அடுத்து பாய் ஹசான் எண்ணெய்த் தொழிற்சாலையில்தாக்குதல்நடத்தினர். வாயுத்தொழிற்சாலையில் கையாண்ட உத்தியே இங்கும் கையாளப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. 2 பேர் தற் கொலை அங்கியை அணிந்து சென்று எண்ணெய்த் தாங்கிக்கு அருகில் தாக்குதலை நிகழ்த்தினர். இதனை அடுத்து பாதுகாப்பு ஊழியர்களுக்கும், போராளிகளுக்கும் இடையே சண்டை இடம்பெற்றது. இந் தத் தாக்குதலில் 4 போராளிகள் கொல்லப்பட்டதுடன், ஓர் எண்ணெய்ப் பொறியியலாளரும் உயிரிழந்தார். மேலும் 6 பொலிஸார் காயமடைந்தனர்.

இதனால் 55 ஆயிரம் பரல் எண்ணெய் உற்பத்தி தடைப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. தாக்குதல் இடம்பெற்ற பகுதி குர்திஷ் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளதாகும். இதனால், தாக்குதல் நடத்தியவர்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில் ஐ.எஸ். அமைப்பின் இணைய ஊடகத்தில் பாய் ஹசான் தொழிற்சாலையில் தாக்குதல் நடத்தியதாகப் பதிவேற்றப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் கிர்குக் பகுதியில் உள்ள எண்ணெய்க் கிணறுகளைக் குறிவைத்து ஐ.எஸ். அமைப்பினர் தாக்குதல் நடத்தியிருந்தனர். (ரி4)

# உலகப் போ
# ஐ.எஸ். அ

டமஸ்கஸ், ஓக. 02
ஐ.எஸ். அமைப்பினர் ஈராக் மற்றும் சிரியாவில் அரச தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கமுடியாமல் பின்வாங்கி வருகின்றனர். இதனால் தாம் உலகின் பல பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளனர். குறிப்பாகப் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி போன்றவை தம்மால் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். கடந்த ரம்ழான் மாதத்தில் புனிதப் போரை நடத்துவதற்கு அழைப்பு விடுத்து, உலகின் பலபகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனை அடுத்தே இந்த அறிவிப்பும் விடுக்கப்பட்டது. அத்துடன், ஐ.எஸ். ஆதரவாளர்களைத் தமது தலைநகர் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட இடத்தில் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்ததுடன், தமது சார்பில் பல பகுதி



களிலும் செயற்படுமாறு ஊக்கப்படுத்தியுள்ள
ஐ.எஸ். ஊடகப்பேச்சாளர் அபு முகமத் அல் அட்நா
"குடியேறிகளாகச் செல்லும் நாட்டில், நீங்

# மிகப்பெரிய டைனோசர் தடம்கண்டு

வோஷிங்டன், ஓக. 02
உலகிலேயே மிகப் பெரிய டைனோசரின் காலடித்தடத்தை பொலிவியாவில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இதுவரை நியூமெக்சிக்கோவில் கண்டுபிடிக்கப்பட்ட 110 சென்ரிமீற்றர் நீளமுடைய டைனோசரின் கால் தடமே பெரியதாகக் கருதப்பட்டது. கடந்த ஜூலை மாதம் சுற்றுலா வழிகாட்டி ஒருவரால் குறித்த காலடித்தடம் இனம் காணப்பட்டது. அபிலிசரஸ் குடும்பத்தைச் சேர்ந்த இந்த



டைனோ
களை உ
லியன்
முன்னா
தாகும்.
இறுதிய
டைனோ
இராட்சத
உடைய
இவற்றி
கூர்ப்பு
வற்றை
டைனோ
களுக்க
அலசவ
மாக அமைந்தன.

# ஆப்கானில் தாக்குதல்

காபுல், ஓக. 02
ஆப்கானில் வெளிநாட்டவர் தங்கும் விடுதி ஒன்றின் மீது, தலிபான் அமைப்பினர் தாக்குதல் நடத்தினர். நேற்று அதிகாலை 1:25 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. நகரம் முழுவதும் சத்தத்தால் அதிர்ந்தது. வெளிநாட்டவர்கள் தங்கிச் செல்லும் வளாகத்தின் வாயிலில், வெடிபொருள்களுடன் வந்த லொறியினால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனை மேற்கொண்ட இருவரும் ஒரு பொலிஸ் அதிகாரியும் சம்பவத்தில் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் 3 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர். தாக்குதல் இடம்பெற்ற வாயில் பகுதியை வெளிநாட்டவர்கள் அதிகம் பயன்படுத்துவதனால், அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. தாக்குதலுக்குப் பின்னர் காபுல் நகரம் முழுவதும் சில மணிநேரங்களுக்கு மின்தடை செய்யப்பட்டது.

கடந்த வருடங்களில் இடம்பெற்ற தாக்குதல்களுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் பெரியது. இவ்வாறானதொரு பெரிய சத்தத்தை இதுவரை கேட்டதில்லை என நகரமக்கள் தெரிவித்தனர். ஆப்கானின் சோதனைச் சாவடிகள் மிகவும் வலுவானவை. ஆனால் இரவு வேளைகளில் குறைந்த பாதுகாப்புப் படையினர் மட்டுமே பணியில் ஈடுபடுவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கடந்த வாரம் ஆப்கானில் ஐ.எஸ்ஸினால் மேற் கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் 80 பேர் உயிரிழந்தனர். (ரி4)



# மதரீதியாகத் தீவிரவாத
# அணுக வேண்டாம் : பா

ரோம், ஓக. 02
"இஸ்லாத்துடன் தீவிரவாதத்தை இணைப்பது தவறானது" எனப் பாப்பரசர் தெரிவித்தார். பணத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை அடைவதற்கான நாட்டத்தினை தீவிரவாதிகள் காட்டுகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். "ஆகையால் தீவிரவாதத்தை இஸ்லாத்துடன் இணைப்பது உண்மையான விடயம் அல்ல, அது தவறானது" எனப் போலந்திலிருந்து உரோமுக்கு மேற்கொள்ளப்பட்ட பயணத்தின் போது, பிரான்ஸில் மதகுரு மீதான தாக்குதல் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு தனது கருத்துக்களைப் பகர்ந்தார்.

மேலும், குறித்த அமைப்பில் அனைத்து மதத்தினரும் போராளிகளாக இருந்து வருகின்றனர். இஸ்லாமிய போராளிகளின் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கருத்துக்களைப் பகிர விரும்பவில்லை. காரணம் இத்தாலிய செய்தித்தாள்களில் தினமும் பலவிதமான வன்முறைச் சம்பவங்களை வாசிக்கின்றோம். அவர்கள் அனைவரும் கத்தோலிக்கர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். நான் இஸ்லாமிய வன்முறை தொடர்பாகக்



கருத்து பகர்ந்தா
வன்முறை தொடர்
பகிரவேண்டும் எ
பணத்துக்கான மு
வாதம் வளர்வதற்கு
துள்ளது என்றார்.
தாரத்தையும் பண
வும் அவர் தெரிவித்
ஆதாரம் மனிதத் து
ஆகும். இவை
னது அல்ல. போர
பாடுகளால் பல பெ
கள் முடக்கப்பட்டுள்
காட்டினார். இதன
இளைஞர்கள் போ
வதையும் அவர் கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ருக்கு
# ...ழைப்பு



...புள்ளது.
...ட்நானி,
...நீங்கள்

அவமதிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக செயற்பட நாம் உதவுகின்றோம்" எனப் பரப்புரைக் குரல் பதிவொன்றையும் வெளியிட்டார்.

கடந்த 2 மாதங்களாக இவ்வாறான அழைப்புக்குப் பலர் தமது ஒத்துழைப்பைக் காட்டியுள்ளனர். புளொரிடா இரவுவிடுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு, பிரான்ஸ் வாகனத் தாக்குதல், ஜேர்மனியில் இடம்பெற்ற கோடரித் தாக்குதல்கள் ஆகியன இவற்றுக்கு உதாரணங்களாகும். இவ்வாறான தாக்குதல்களை நடத்தியவர்கள், இனரீதியான தாக்கத்தையும், சமூக அழுத்தங்களையும் கொண்டிருந்தவர்கள் என்றும் இனம் காணப்பட்டுள்ளனர். சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ்ஸின் வீரியம் குறைக்கப்பட்டிருப்பினும் உலக அளவில் போராளிகளைத் தூண்டி, செயற்படுத்தி வருவதாக, அரசியல் நிபுணர்கள் கருத்துப் பகிர்ந்துள்ளனர். இந்த நிலையில், உலக அளவில் போரை நடத்துவதற்கான திட்டமிடுதலுடன் ஐ.எஸ். அமைப்பு நகர்வதாக பாதுகாப்புப்படை அதிகாரிகள் தெரிவித்தனர். (ரி4)



பிப்பைன்ஸ் நாட்டின் சிறைச்சாலையினுள் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. தலைநகர் மணிலாவில் அமைந்துள்ள இந்தச் சிறைச்சாலையில் 3 ஆயிரத்து 800 கைதிகள் காணப்படுகின்றனர். ஆனால் குறித்த சிறைச்சாலை கிட்டத்தட்ட 760 வரையான கைதிகளைக் கொள்ளக்கூடிய அளவிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது, அதன் எண்ணிக்கையின் 5 மடங்கு கைதிகள் அந்தச் சிறைச்சாலையில் உள்ளனர். நித்திரை கொள்வதற்கு இடமற்ற நிலையில், மிகவும் நெருக்கமாக உறங்குவது இந்தப் ஒளிப்படங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள், குளிப்பது, கழிவகற்றுவது போன்றவற்றில் மிகுந்த நெருக்கடிநிலை காணப்படும் என்று சமூக ஆர்வலர்கள் கொந்தளித்துப் போயுள்ளனர். (ரி4)

## ...டுபிடிப்பு

...னோசர், இரு கால்
...ள் உடையது. 70 மில்
...ன் ஆண்டுகளுக்கு
...னர் உயிர்வாழ்ந்த
...ம்.
...தியாக வாழ்ந்த
...னோசர் இனங்களில்
...ட்சத உருவ அமைப்பு
...டய இனம் இதுவாகும்.
...ற்றின் உருவாக்கம்
...ப்பு நிலை போன்ற
...றை ஆராயவும்,
...னோசர்களின் அழிவு
...க்கான காரணத்தை
...சவும் இது ஆதார
...ன. (ரி4)



## முதல் பெண் ஆளுநர் டோக்கியோவில் தெரிவு

டோக்கியோ, ஓக. 0 2

ஜப்பானின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யுரிக்கோ கெய்கி ஜப்பான் தலைநகர் டோக்கியோவின் முதல் பெண் ஆளுநராகப் பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் 2.9 மில்லியன் வாக்குகளைப் பெற்றதாலேயே அவர் டோக்கியோ நகரின் முதல் பெண் ஆளுநராகப் பதவி வகிக்கவுள்ளார். புதிய ஆளுநராகப் பதவியேற்கும் யுரிக்கோ கெய்கி 2020ஆம் ஆண்டில் நடைபெறப் போகின்ற ஒலிம்பிக் போட்டிகளுக்கான நிதிதொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி இருக்கும் என்று கூறப்படுகிறது. இதுவரை ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் டோக்கியோவின் இரண்டு ஆளுநர்கள் பதவி விலகினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி4)

## அமெரிக்க நாளிதழ் அதிரடி
### *ட்ரம் மனைவியின் ஆடையற்ற ஒளிப்படங்கள் பிரசுரிப்பு*




வோஷிங்டன், ஓக. 02


அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளராகத் தேர்வாகியுள்ள டொனால்ட் ட்ரம்மின் மனைவியான மெலன்யா, 1990ஆம் ஆண்டு மொடலிங் செய்தபோது எடுக்கப்பட்ட ஆடையற்ற ஒளிப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் பிரபல பத்திரிகைகளுள் ஒன்றான நியூயோர்க் போஸ்ட் இவ்வாறான படங்களை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. "முதற் பெண்மணிக்குப் போட்டியிடும் இத்தகைய தொருவரை பார்த்திருக்கமாட்டீர்கள்" என்ற தலைப்பில் அந்த ஒளிப்படங்கள் பிரசு ரிக்கப்பட்டுள்ளன. 90களில் மொடலிங்கின் போது பிரஞ்சு ஒளிப்படக் கலைஞர்களால் எடுக்கப்பட்ட பலதரப்பட்ட ஒளிப்படங்கள் இதில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்த ஒளிப் படங்கள் மெலன்யாவுக்கு 25 வயதிருக்கும் போது எடுக்கப்பட்டவையாகும். குறித்த ஒளிப்படங்கள் பிரசுரிப் புத் தொடர்பில் ட்ரம் கருத்துத் தெரிவித்ததாவது:

மெலன்யா மிகவும் வெற்றிகரமான மொடல் அழகி, அவர் பல்வேறு மொடல் ஒளிப்படப்பதிவுகளில் இடம்பெற்றுள்ளார். பல முன்னணி சஞ்சிகைகளின் முதற்பக்கத்தில் இடம்பிடித்துள்ளார். ஐரோப்பாவின் மொடலிங் துறையில் பிரபல்யமானவர். பல மொடலிங் துறையினரும், அழகுக் கலை நிபுணர்களும், மெலன்யாவின் இந்த ஒளிப்படங்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். ஏனெனில் ஆடையற்ற இவ்வாறான படங்கள் மொடலிங்துறையினருக்கு ஒன்றும் புதியவை அல்ல. உடல் அமைப்பு ஒளிப்படத் திறமை என்பவற்றைப் பாராட்டியும் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர் – என்றார்.

இவ்வாறு வெளியான தனது ஒளிப்படங்கள் பற்றி மெலன்யா இதுவரையில் எந்தவொரு கருத்துக்களையும் வெளியிடவில்லை. (ரி4)

## ...தத்தை
## ...ப்பரசர்




...தால், கத்தோலிக்க
...டர்பாகவும் கருத்துப்
... எனத் தெரிவித்தார்.
... முக்கியத்துவம் தீவிர
...கு ஆதாரமாக அமைந்
...ர். உலகப் பொருளா
...ணம் தீர்மானிப்பதாக
...த்தார். தீவிரவாதத்தின்
...த் துக்கு எதிரான போர்
...தங்களுக் கிடையிலா
...ாராளிகளின் செயற்
... பொருளாதாரக் களங்
...டுள்ளதை அவர் சுட்டிக்
...தனால் வேலையற்ற
...பாதைக்கு அடிமையா
... குறிப்பிட்டார். (ரி4)

## கயிற்றில் தொங்கியபடி நிறைவேறிய திருமணம்

புதுடில்லி, ஓக. 02

இந்தியாவில் கொல்காப்பூர் பகுதியைச் சேர்ந்த தம்பதியர் புதுவிதமான முறையில் திருமணம் செய்துள்ளனர். நிலத்தில் இருந்து 90 மீற்றர்கள் உயரத்தில் சிதீர் மற்றும் ரேஷ்மா தம்பதியினர் கயிற்றில் அந்தரத்தில் தொங்கியபடி தமது காதல் திருமணத்தை நிகழ்த்தினர். கயிற்றில் தொங்கியபடி மாலை மாற்றி மங்கல நாண் சூட்டப்பட்டது. குடும்பத்தினரும், நண்பர்களும் அவர்களது திருமணத்துக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். (ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக்களின் பிதிர் வழிபாட்டுக்குரிய புண்ணியமான தினம்

மதுரகவி காரை
எம்.பி.அருளானந்தன்

# ஆடி அமாவாசை

சூரியசந்திரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியில் சஞ்சரிக்கும் புனிதமான நாள் அமாவாசையாகும்.

அத்துடன் தேவர்களும் அமாவாசையின் அதிபர்களாக உள்ளனர். பூமியிலுள்ளவர்களைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு அமாவாசையும் பிதிர் கருமத்துக்கு அதாவது, தென்புலத்தார் வழிபாட்டுக்கு மிக உகந்த நாள். சூரிய மண்டலத்துக்கு அப்பால் தென்மண்டலத்தில் பிதிர்கள் உறையும் பிதிர்லோகம் உள்ளது. பிதிர்களைத் தென்புலத்தார் என்று அழைப்பது தமிழர்கள் மரபு. தென்புலத்தார் வழிபாடு எள்ளும் தண்ணீரும் இறைத்தல், பிண்டம் போடுதல் என்பவை பழந்தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை. அமாவாசையில் விரதம் இருந்து இந்தக் கருமங்களை ஆற்ற வேண்டும். ஆடி அமாவாசை பிதிர்க் கருமங்களுக்கு மிகவும் உகந்தது என்றும் பிதிர் வழிபாடு செய்ய வேண்டியவர்கள் தவறாது ஆடி அமர்வாசையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் நூல்கள் எடுத்துரைக்கின்றன. பிதிர்தர்ப்பணத்துக்கு மிகவும் ஏற்றது ஆடி அமாவாசை என்பது இந்துக்களின் கொள்கை.

ஆடி அமாவாசைத் தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பழைய வினைகள் அறும் என்றும் பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின் அருள் செறிந்த நீராக நினைந்து முன்னோர்களான பிதிர்களை எண்ணி, அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களுக்கு முத்தியளிக்கும்படி இறைவனை வேண்டித் தீர்த்தமாடுதல் வேண்டும்.

அமாவாசை, பௌர்ணமித் தினங்களில் கடல் பொங்கியெழும் நிலை உண்டு. இவ்வாறே இந்தத் தினங்களில் மனித மன உணர்வுகளிலும் மாறுதல்கள் நிகழ்வதாகக் கூறப்படுகிறது. மானிடரின் ஆன்மிக வலுவும் குன்றும் காலமாக இந்தத் தினங்கள் உள்ளன. எனவேதான் அமாவாசை போன்ற கனத்த நாள்கள் மிக அவதானமாக கழிக்கப்பட வேண்டும் என்றும் இந்த நாள்களில் வேறு காரியங்களைச் செய்யாதும், மனங்களைப் புலன்கள் வழிச் செல்ல விடாதும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆன்றோர்கள் கூறிவைத்தனர். இந்தத்தினங்களில் கடவுள் வழிபாடு பிதிர் வழிபாடு என்பவற்றைச் செய்து நல்ல பயனைப் பெறுவதே முறையாகும்.



ஆடிஅமாவாசையில் தீர்த்தமாடுதல், பிதிர்வழிபாடு செய்தல் தர்ப்பணம், பிண்ட தானம் நிறைவேற்றுதல் என்பவை ஆண்டுதோறும் கீரிமலை நகுலேஸ்வரத்திலும் மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வேறும் பல சிவத்தலங்களிலும் இந்த நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

எல்லோரும் நோயின்றிச் சுகமாக வாழவும் சகல செல்வங்களையும் பெற்று இனிதாக வாழவும் தெய்வங்களை ஆராதிக்கிறோம். இதற்குப் பிதிர்களையும் திருப்தி செய்து மகிழ்விக்க வேண்டும். இவற்றுக்குரிய விதிமுறைகளையெல்லாம் எமது முன்னோர்கள் எழுதி வைத்துள்ளனர். பராசர், மனு, விகுதர், சாதாபர் போன்ற இருடிகள் எழுதி வைத்தவைகள் யாவும் சேர்த்து தர்மசாஸ்திர நிபந்தனம் எனும் சிறந்த நூலாகத் தொகுக்கப்பட்டது. தட்சிணாயனத் தொடக்கமாதம் ஆடி என்பதால் பிதிர்க் காரியங்களுக்கு ஆடி மாதம் சிறப்பானது எனக் கொள்ளப்படுகிறது. ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசைத் திதி பிதிர் வழிபாட்டுக்குப் புண்ணியமான தினம் எனச் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

இத்தகு புண்ணிய காலமாக இன்று இந்துக்களால் தமிழ் மக்கள் வாழும் பிரதேசமெங்கும் பிதிர்க்கடன் நிறைவேற்றி, ஆடிஅமாவாசை விரதம் நிறை வேற்றப்படுகின்றது. வடபுலத்திலே ஈழத்தில் பிரசித்தி பெற்ற சிவாலயங்களிலொன்றான பூர்வீக வரலாற்றுப் பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட நகுலேஸ்வரத்தில் (கீரிமலைச் சிவன்கோயில் ) கீரிமலை



என்னும் புனித தீர்த்தத்தில் பல்லாயிரக் கணக்கான இந்துக்கள் தீர்த்தமாடி பிதிர்த் தர்ப்பணம் நிறைவேற்றுகிறார்கள்.

இராசையா ஸ்ரீதரன்

# பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை விரதம் இன்று

புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த உலக வாழ்க்கையை வழங்கியவர்கள் அன்னையும் பிதாவும் என்று சொல்லப்படுகின்ற தாய் தந்தையர்களேயாவர். அவர்களில் பிதா என்ற பெருமைக்குரிய தந்தை இறைபதம் சேர்ந்து விட்டால் அவரது பிதிர்க்கடன் செலுத்த உகந்த நாளே இன்றைய ஆடி அமாவாசையாகும். இது ஒரு மகிமையும் மகோன்னதமும் மிக்க விரதமாகும்.

ஆடிமாதம் பிறந்து விட்டாலே கூடவே விரதங்களும் விழாக்களும் வரத் தொடங்கி விடும். ஆடிப்பிறப்பு முதற்கொண்டு ஆடிச் செவ்வாய், ஆடிப்பூரம், ஆடிவெள்ளி, ஆடிக் கிருத்திகை, ஆடி அமாவாசை என்று அடுக்கடுக்காய் வருகின்ற ஒவ்வொன்றும் புனித புண் ணிய தினங்களே. அந்த வகையில் இன்று அனுட்டிக்கப் பெறும் ஆடி அமாவாசை விரதம் மிகவும் பவித்திரமானது. ஏனெனில் தந்தையின் ஆத்மாவுக்காகச் செய்யும் பிதிர்ப் பிரார்த்தனை மிக முக்கியமானது. எமது வாழ்வில் கல்விச் செல்வத்தைத் தந்து விளக்கேற்றி வைத்தவர் தந்தை. எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியில் எம்மைப் படிக்க வைத்து ஆளாக்கிய அன்புத் தந்தைக்கு நாம் செய்ய வேண்டிய தலையாய கடமை, இந்த விரத அனுட்டானம் தான்.

இதனை அனுட்டிப்பவர்கள் இன்று காலை எழுந்து புனித புண்ணிய நீராடி, ஓர் அந்தண சிவாச்சாரியாரிடம் தர்ப்பை வாங்கி அணிந்து விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். பக்கத்திலிருக்கும் ஆலயத்தில் இறைவழிபாடாற்றி காலையில் எதுவும் உண்ணாமல் தேவாரத்திருவாசகங்களைப் பாராயணஞ் செய்தல் உத்தமம். முடியுமாயின் இயன்றவரை தானதர்மங்கள் செய்து அந்தணர் ஒருவருக்கு அரிசி, காய்கறி, தேங்காய் மற்றும் சமையற் பொருள்களைத் தானமாகக் கொடுத்தல் நல்லது. ஒரு தர்ப்பை மூலமாக எள்ளுந் தண்ணீரும் இறைத்துத் தந்தையின் ஆத்மா சாந்தியுறப் பிரார்த்தித்துக் கொண்டு, காத்தோட்டிக்காய்ப் பொரியலுடன் அறுசுவையான உணவைதயாரித்து முதலில் காகத்துக்கு வைத்துப் பின்பு தந்தைக்கு நிவேதித்து வணங்கிப் பிரார்த்தனை செய்த பின்பு மதிய உணவு உண்ணலாம். இன்று இரவு பால் பழம் அருந்திய பின்பு நித்திரைக்குச் செல்லாம்.

மேலும், ஆடி அமாவாசையின் விசேடம் என்னவெனில் அமா என்பது ஓரிடத்திலே வந்து பொருந்தியது என்றும் குவிந்தது அல்லது அடுத்தது என்றும் பொருள்படும். அதாவது சூரியனும் சந்திரனும் ஓர் இராசியில் சந்தித்து உறவாடும் நாளே அமாவாசையாகும். சூரியபகவான் உலக இயக்கத்துக்கு மூல காரணர் என்றும் சந்திரன் மகிழ்ச்சி நிறைந்த இன்ப ஆனந்தத்துக்கும் தெளிந்த அறிவுக்கு தலைவர் என்றும் கருதப்படுகின்றது. அபுத்தி பூர்வமாகச் செய்தவினைகள் அந்தியேட்டி தகனக்கிரியைகளால் மாறும். புத்திபூர்வமாகச் செய்தவினைகள் நாம் அனுபவித்தேயாக வேண்டும். தந்தையோடு கல்வி போகும் என்பார்கள். ஆகவே தந்தையை இழந்த பின்பு படிப்பது மிகவும் கஷ்டம். ஆகவே, இன்றைய ஆடி அமாவாசை விரதத்தை அனுட்டித்துத் தந்தையின் ஆசியைப் பெற்றுக் கொண்டால் ஓரளவு கல்விச் செல்வம் கிடைக்கும். ஆதலால் ஆடி அமாவாசை விரதத்தை முறையாகக் கைக்கொண்டு உயர்வு பெறுவோமாக.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிகளைக் கடைப்பிடிப்பதால் ஆபத்துக்கள் தவிர்க்கப்படலாம்

செ.அன்புராசா

*(பேராபத்தை ஏற்படுத்தும் பேருந்துகள் என்ற தலைப்பில் நேற்று வெளிவந்த க்ட்டுரையின் தொடர்ச்சி....)*

திருநெல்வேலியில் இடம்பெற்ற விபத்தில் அநியாயமாக உயிர் பறிக்கப்பட்ட சுவஸ்தீகனின் இறுதிச் சடங்கில் ஒரு துண்டறிக்கை வெளியிடப்பட்டது. "அன்பான வாகனச் சாரதிகளுக்கு அறிவுபூர்வமான வேண்டுகோள்! வாகனம் செலுத்தும் போது கைத்தொலைபேசியைத் துண்டித்து, மது அருந்துவதை விடுத்து, போட்டியை விடுத்து, வேகத்தைக் குறைத்து வாகனத்தைச் செலுத்துங்கள். நீங்கள் விதியை மீறுவதால் என் விதி முடிந்தது. சாதிக்கவேண்டிய என்னைச் சாகடித்து விட்டீர்கள். நானும் உங்கள் குழந்தைதானே, உங்கள் பசிக்குப்பலியானது நானே கடைசி ஆளாக இருக்கட்டும். இப்படிக்கு, இனி உங்களோடு காற்றாக வாழும் சுவஸ்தீகன்" என அதில்கூறப்பட்டிருக்கிறது. இதயமுள்ள சாரதிகளுக்கும்(நடத்துனர்களுக்கும்தான்) இதயத்தில் ஈரமுள்ள வாகன ஓட்டுனர்களுக்கும் இப்பிரிவுத் துயரிலும் மனித உயிர்களை நேசிக்க சுவஸ்தீகனின் குரலாக ஒலிக்கும் அந்த வார்த்தைகள் பெரும் பாடமாக அமையவேண்டும்.

**தனியார் பேருந்துகளைத் தவிர்ப்பதேன்?**

"தனியார் பேருந்துகளில் இனிப் பயணம் செய்வதில்லை" என்ற எனது தீர்மானம் வலுப்பெறுவதற்கு ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு முன் மாங்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்குத் தனியார் பேருந்து ஒன்றில் பயணிக்கும் போது இடம்பெற்ற ஒரு சம்பவமே இறுதியான காரணமாகும். சுமார் 65 வயது மதிக்கத்தக்க தாயும் ஒரு சிறு பிள்ளையும் (அவரின் பேர்த்தியாராக இருக்கவேண்டும்) அந்தப் பேருந்தில் ஏறிக்கொண்டார்கள். அந்தத் தாயினால் நடக்க முடியாத காரணத்தினால் பேருந்தின் பின் வாசலினால் ஏறி, பேருந்தின் பின்னிருக்கையில் இருந்துகொண்டு, பின் வாசலால் இறங்குவதற்குத் திட்டமிட்டிருந்தார். கிளிநொச்சி டிப்போச் சந்தியில் பேருந்தில் இருந்து இறங்குவதற்குச் சுமார் 30-40 நொடிகள் (செக்கன்) வரையான நேரத்தை அவர்கள் எடுத்திருப்பார்கள். இறங்குவதற்கு அதிகப்படியான நேரத்தை எடுத்துவிட்டார் எனக் கோபம் கொண்ட நடத்துனர் வாய்நிறைய வெற்றிலைப் பாக்கை வைத்துக் குதப்பியபடி, "இவ்வளவு நேரமும் என்ன செய்தனீ! படுத்தா கிடந்தனீ!" என்று சத்தம் போட்டுக் காட்டுக்கூச்சல் எழுப்பினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அதிர்ச்சிக்குள்ளான பல பயணிகளில் நானும் ஒருவன். என்னுடைய உடனடியான எதிர்வினை என்னாலேயே நம்பமுடியாத அளவுக்கு ஆக்கிரோசமனதாக இருந்தது. இருக்கையில் இருந்து எழுந்து ஆட்காட்டி விரலால் நடத்துனருக்கு நான் கவனம் காட்டிய விதத்தில் பேருந்தின் முன் வாசற்படிகளில் இருந்து யாழ்ப்பாணம் சேரும்வரை பேருந்தின் பின் வாசல் பக்கமாகவோ அன்றேல் நானிருந்த பின்னிருக்கைப் பக்கமாகவோ அவர் வரவேயில்லை!

அவ்வளவு கோப உணர்வை மிக நீண்ட காலத்தின் பின் வெளிப்படுத்தியதை நான் உணர்ந்தேன். இயலாமையால், வயது முதிர்ச்சியினால், நோயினால் மிகவும் நொந்துபோயிருந்த ஓர் ஏழைத் தாயிடத்தில் இவ்வாறு இவர் நடந்துகொள்வதற்கு இவருக்கு என்ன துணிவும் அருகதையும் இருக்கிறது என உணர்வு ரீதியாக மட்டுமல்ல என் மனம் அறிவு ரீதியாகவும் சிந்தித்தது தெரிந்தது. தனியார் பேருந்துகளில் செல்கின்றபோதுதான் அனேகமாக இவ்வாறான அசௌகரியமான நிலைமைகள் ஏற்படுகின் றன. அதற்காக இ.போ.ச. பேருந்துகளில் இது அறவேயில்லை என்று சொல்லிவிடமுடியாது. ஒப்பீட்டளவில் குறைவு. எனவே, தனியார் பேருந்துகளில் செல்வதைத் தவிர்த்து விட்டால் பல அசௌகரியங்களில் இருந்து என்னை நானே காப்பாற்றிக்கொள்ள முடியும் என்ற முடிவுக்கு வந்ததனால் கூடுமானவரை தனியார் பேருந்துகளைத் தவிர்த்து வருகிறேன்.

**பாட்டுச் சத்தம் படுமோசம்!**

இப்போது இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துகளில் பாட்டுச் சந்தம் படுமோசமாக இருக்கிறது. வாகனங்களில் பயணிக்கும்போது தாராளமாகப் பாட்டுக்களைச் செவிமடுக்கலாம். ஆனால், ஒருவர் கதைப்பது மற்றவருக்கு விளங்கமுடியாத அளவிற்கு செவிப்பறை பாழாகும் அளவுக்குப் பாட்டுச் சத்தம் இருப்பதுதான் கவலையளிக்கிறது. நோயாளர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என பலரும் இதனால் பல அசௌகரியங்களைச் சந்திக்கிறார்கள். மேலும்,

"என்ர சீதேவியே வாவன்!" என அள்ளியேற்றுவதுபோல ஏற்றுகிறார்கள். பலவேளைகளில் பெண்களென்றும் பார்க்காமல் முதுகுக்குப் பின்னால் கையைப்போட்டு, தாங்கி, தூக்கி, அள்ளி ஏற்றுகிறார்கள். அவர்களும் மறுப்போ, எதிர்ப்போ தெரிவிப்பது குறைவு என்பதால் நடத்துனர்களும் அந்த நடைமுறையைத் தொடர்கிறார்கள் போலும்! இங்கு கவனிக்கப்படவேண்டி விடயம் என்னவென்றால் சீதேவிகளாகக் கருதி ஏற்றிய அதே பயணிகளை இறக்கும்போது "மூதேவியே கெதியா இறங்கித் துலையன்!" எனப் பொருள்களைத் தள்ளிவிடுவதுபோல தட்டி விட்டுச் சென்றுவிடுகிறார்கள்.

செவிப்பறைகளும் ஒரு குறிப்பிட்ட சத்தத்தைத் தானே தாங்கும் என்பதைப் பேருந்துகளின் சாரதிகளும் நடத்துநர்களும் மனதில் கொள்ளாதமை, சத்தமாகப் பாடல்களைக்கேட்டுக்கேட்டு அவர்களின் செவிப்பறைகள் செவிட்டறைகளாக மாறிவிட்டதோ என்றும் சிந்திக்க வேண்டி இருக்கிறது.

**அள்ளி ஏற்றித் தள்ளி இறக்குதல்!**

பொதுவாகப் பயணிகளைப் பேருந்துகளில் ஏற்றும் போது "என்ர சீதேவியே வாவன்!" என அள்ளியேற்றுவதுபோல ஏற்றுகிறார்கள். பலவேளைகளில் பெண்களென்றும் பார்க்காமல் முதுகுக்குப் பின்னால் கையைப் போட்டு, தாங்கி, தூக்கி, அள்ளி ஏற்றுகிறார்கள். அவர்களும் மறுப்போ, எதிர்ப்போ தெரிவிப்பது குறைவு என்பதால் நடத்துனர்களும் அந்த நடைமுறையைத் தொடர்கிறார்கள் போலும்! இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயம் என்னவென்றால் சீதேவிகளாகக் கருதி ஏற்றிய அதே பயணிகளை இறக்கும்போது "மூதேவியே கெதியா இறங்கித் துலையன்!" எனப் பொருள்களைத் தள்ளிவிடுவதுபோல தட்டிவிட்டுச் சென்றுவிடுகிறார்கள் என்பதைத்தான்.

இன்னோருமுறை, "கிளிநொச்சி எல்லாம் முன்னுக்குக் கெதியா போ!" என்று முறிகண்டி கடந்ததும் நடத்துனர் கத்தினார். இரவு 08 மணியிருக்கும், வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையான போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்து அது. அன்றைய நாள் ஏதோ ஒரு வைபவத்துக்குப் போய்விட்டுப் பெற்றோர்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் பயணித்துக் கொண்டிருந்தார்கள். களைத்துப்போய் இருந்ததால் பிள்ளைகள் நித்திரையாகி விட்டனர். "கிளிநொச்சி எல்லாம் முன்னுக்குக் கெதியா போ!" என்ற அறிவிப்பைக் கேட்டதும் அரைத் தூக்கத்தில் இருந்த பெற்றோர்கள் விழுந்தடித்துக் கொண்டு எந்த இடத்தில் பேருந்து பயணித்துக் கொண்டிருக்கிறது என்றுகூடப் பாராமல் நித்திரையாயிருந்த பிள்ளைகளை அவசர அவசரமாக எழுப்பி சாரதிக்கு அருகில் சென்று நெருக்கி அடித்துக் கொண்டு நின்றார்கள். இவர்கள் எல்லாரும் இறங்கவேண்டிய இடம் கிளிநொச்சி கச்சேரியடிச் சந்தி! அதாவது பயணிக்க இன்னும் 07, 08 கிலோ மீற்றர் தூரம் இருந்தது. இதனால், கிளிநொச்சி கச்சேரியடிச் சந்திக்கு முன்புள்ள சந்திகளில் இறங்கவேண்டியவர்கள் ஏற்கனவே குழந்தை குட்டிகளுடன் அரைத்தூக்கத்தில் நின்றவர்களை இடித்துக்கொண்டு, மிதித்துக் கொண்டு, உளக்கிக்கொண்டு இறங்க வேண்டியதாயிற்று!

குழந்தைகள் மிதிபடுவதையும் பெற்றோர் குழந்தைகளை வைத்துக்கொண்டு அவஸ்தைப்படுவதையும் அவதானித்துக் கொண்டிருந்த நான் பேருந்தில் நின்றுகொண்டிருந்தவர்கள் இறங்கியதும் நடத்துனருக்கு அன்று ஒரு நல்ல பாடம் புகட்டத் தீர்மானித்துக் கொண்டேன். பிள்ளைகளுடன் நின்றவர்கள் கச்சேரிச் சந்தியடியில் இறங்கியதும் பேருந்தில் இருக்கைகளுக்கு மேற்படாமல் பயணிகள் இருந்ததால் நின்றுசெல்லவேண்டிய தேவை எவருக்கும் இருக்கவில்லை. ஆனால், நான் எழுந்து நின்றுகொண்டு அத்தனை பயணிகளுக்கும் முன்னால் பேருந்து நடத்துனரை நோக்கி, "முறிகண்டி தாண்டியதும்,'கிளிநொச்சி எல்லாம் முன்னுக்குக் கெதியா போ!' என்று சொன்னீர். ஆனா, முறிகண்டியைக் கடந்ததும் இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி மருத்துவமனைச் சந்தி, கிளிநொச்சி பாடசாலைச் சந்தி, டிப்போச் சந்தி, கச்சேரியடிச் சந்தி எனச் சந்திகளின் பெயர்களைச் சொல்லாமல், கிளிநொச்சி எல்லாம் முன்னுக்குக் கெதியா போ! என்றால், இந்த இரவு நேரத்தில இந்தச் சனம் என்ன பாடுபடும்? வவுனியா யாழ்ப்பாண 'றூட்' எவ்வளவு காலமா ஓடுறீங்க! இரண்டு வாசல்களிலும் நின்று இரண்டு பேர் காசப் பாத்துக் கணக்கா வாங்குவிங்க! ஆனா, மனிசர மரியாதையா உங்களுக்கு நடத்தத் தெரியாதோ!" என்று முழங்கினேன். நடத்துனர் தலையைக் குனிந்தபடி கொஞ்ச நேரம் நின்றுவிட்டு பவ்வியமாக, "நாங்க சொன்னாலும், சனம் கேட்காது!" என்றபோது, "சனம் கேட்கா விட்டாலும் நீ சொல்லவேணும்! அது உன் கடமை!" என்று நான் கூறியதும் அவன் வேறேதும் சொல்லவில்லை. அத்துடன் அவ்வுரையாடல் முடிவுக்கு வந்தது.

இன்று, பயணிகள் எவரும் பொது விடயங்களைப் பற்றிக் கதைக்க முன் வராததால் நடத்துனரும் சாரதியும் பூனையில்லாத வீட்டில் சுண்டெலிகளுக்குக் கொண்டாட்டம் என்பதுபோல நடந்துகொள்கிறார்கள். பயணிகள் புத்திசாலித்தனமாகவும் சாதூரியமாகவும், கவனமாகவும், விழிப்புணர்வோடும் செயற்பட்டால் பேருந்துகளால் ஏற்படும் பேராபத்துக்களை அசௌகரியங்களை எவ்வளவோ தவிர்த்துக் கொள்வதோடு பாதுகாப்பான பயணங்களை உறுதி செய்துகொள்ளலாம்

*(கட்டுரையாளர், அமலமரித் தியாகிகள் திருச்சபையின் மாங்குளம் பிரிவில் பணிசெய்யும் அடிகளார்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர் தெய்வம்

கள்ளமில்லாப் பிள்ளையுளம் கொண்டவர் – நாம்
கல்வி பெற சொல்லித்தர வந்தவர்
தன்னுயிரே மாணவர்தான் என்பவர் – நாம்
தங்கநிழல் தந்துதினம் நின்றவர்

அன்பு நடம் கொண்டு நிதம் வாழுவார் – நாம்
அறிவு பெறத் தொண்டு செய்து தாழுவார்
எந்த நிலை வந்தபோதும் இமயமாய் – நாம்
ஏற்றம் பெற வழியமைப்பார் சமயமாய்

தந்தை போலத் துயரெழுந்தால் ஆற்றுவார் – நாம்
தாரணிக்குப் பாடுபட மாற்றுவார்
ஏணி போல நின்று நமை ஏற்றுவார் – நாம்
ஏறுவதைப் பார்த்துத்தினம் போற்றுவார்

ஆசிரியர் தெய்வமெனும் நல்லவர் – நாம்
அன்போடு வணங்கத் தகும் வல்லவர்
மாசில்லாத் தொண்டினிலே வாழட்டும் – நாம்
மாண்புடனே வாழுவதைக் காணட்டும்

# வாயால் அகப்பட்டுக் கொண்டவன்

ஏழை ஒருவன் வெள்ளரிக்காய் திருடுவதற்காக ஒரு தோட்டத்துக்குள் நுழைந்தான். அங்கே காவல்காரன் இல்லை.
திருடப் போனவனுக்குச் சிந்தனை பலமாகத் தொடங்கியது.
ஒரு கூடை வெள்ளரிக் காய்களைப் பறித்துக் கொண்டு போய் சந்தையில் விற்றால் நிறையப் பணம் கிடைக்கும். அதற்கு இரண்டு கோழிகள் வாங்குவேன். கோழிகள் முட்டைகள் இடும். அவைகளை அடைகாக்கும்; குஞ்சுகள் பொரிக்கும். கூட்டம் கூட்டமாக குஞ்சுகளை வளர்ப்பேன். அந்தக் குஞ்சுகளை விற்று ஒரு ஆடு வாங்குவேன். ஆடு குட்டிகள் போடும். அவற்றை வளர்த்து விற்றால் ஏராளமாகப் பணம் கிடைக்கும். அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு வீடும் அதைச் சுற்றி ஒரு தோட்டமும் வாங்குவேன். தோட்டத்தில் வெள்ளரிக் காய்களைப் பயிர் செய்வேன். வெள்ளரிக் காய்களை எவனும் திருடாதபடி காவலுக்கு முரட்டுக் காவற்காரன் ஒருவனை நியமிப்பேன். அடிக்கடி நானும் தோட்டத்துக்குச் சென்று "யாரடா அங்கே உஷார்" என்று உரக்கக் கூவுவேன்.
ஏழை இவ்வாறு சிந்தனை உலகில் பறந்து கொண்டிருந்ததில் தன்னையே மறந்து விட்டான். வேறு ஒருவருடைய தோட்டத்தில்தான் நிற்பதையும் அவன் மறந்துவிட்டான். அளவு கடந்த உற்சாகத்தினால் அவன் கடைசியாக எண்ணியபடி உரத்த குரலில், "யாரடா அங்கே? உஷார்!" என்று கூறி விட்டான்.
தோட்டத்தில் வேற்று மனிதன் குரல் கேட்டதும் காவல்காரன் ஓடிவந்து அவனைப் பிடித்து நையப் புடைத்து அனுப்பினான்.



# வரலாற்றில் இன்றைய தினம்

1870 – உலகின் முதலாவது சுரங்க ரயில்பாதை, லண்டனில் திறந்து வைக்கப்பட்டது.
1916 – முதலாம் உலகப் போர், இத்தாலிய போர்க்கப்பலான லியானோ டாவின்சி, ஒஸ்ரியர்கள் சேதப்படுத்தியதால் மூழ்கியது.
1922 – சீனாவைப் புயல் தாக்கியதில் 50,000 பேர் உயிரிழப்பு.
1943 – ட்றெப்லிங்கா வதைமுகாமில், யூதச் சிறைக்கைதிகள் எதிர்ப்பில் ஈடுபட்டனர். கொடூரமான இந்த வதை முகாமில் 900,000 பேர் 18 மாதங்களில் கொலை செய்யப்பட்டனர்.
1989 – பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பிலிருந்து 1972 ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்ட நிலையில், ஜனநாயகம் மீளமைக்கப்பட்டதனால், மீண்டும் பொதுநலவாய அமைப்பில் சேர்க்கப்பட்டது.
1998 – இரண்டாம் கொங்கோ போர் தொடங்கியது.
1992 – கட்டுவனில் படையினர் சூடு, ஏழாலையில் பெண் சாவு.
– தந்திரி மலை பிக்கு கொலை. சதிப்பின்னணியில் பலர். இளம் பிக்கு விளக்கமறியலில்.
1995 – வடமராட்சிக் கடலில் இருந்து அகோர பீரங்கித் தாக்குதல், 7 பேர் காயம். கோயில்கள், வைத்தியசாலை சேதம்.
– போர் தொடர்ந்து நீடித்தால் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சி என ஆலோசனை.
2002 – ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பாக ஈ.பி.டி.பி உறுப்பினர் முரளி நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.
– அதிகாரப் போட்டியால் சு.க. பிளவுபடலாம் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த தெரிவிப்பு.
2006 – மூதூர் பகுதியிலிருந்து புலிகளை விரட்டுவோம் என கெஹலிய ரம்புக்வெல கூளுரை.
– மோதலை நிறுத்துமாறு எரிக்சொல்ஹெய்ம் இரு தரப்பினரிடமும் கோரிக்கை–விசேட தூதுவர் போவர் இன்று வருகை.
– அரச படையினரால் முடியாவிட்டால் மாவிலாறு அணைக்கட்டைத் திறக்க உயிரைக் கொடுக்கவும் தயார் என ஹெல உறுமய தலைவர் கூறுகிறார்.
– 850 படையினருடன் திருகோணமலைக் கடலில் புலிகளின் முற்றுகைக்குள் உள்ள கப்பலுக்கு இந்தியா உதவக் கூடாதென மன்மோகன்சிங்குக்கு வைகோ அவசரக் கடிதம்.
2014 – ஷங்காய்க்கு அருகில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில், 146 பேர் உயிரிழந்ததுடன், 114 பேர் காயமடைந்தனர்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றவருக்கு அடித்தாலும் வலி ஏற்படவே செய்யும்

உலகில் மூன்றாம் உலகப்போர் இடம்பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்திருப்பதாக பாப்பரசர் கடந்த வாரத்தில் தெரிவித்திருந்தார். சமீப காலமாக உலகத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண அரசியல் போக்கையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். வழமையாக உள்நாட்டுப் போர்கள், போராளிகளின் உரிமைப்போர்கள் இடம்பெற்று வந்தன. ஆனால் தற்போது தனி நபராகவோ, அல்லது சிறுகுழுக்களாகவோ அசம்பாவிதங்களை ஏற்படுத்தும் கலாசாரம் மேலோங்கியுள்ளது. மேலை நாடுகளில் கடந்த 2 மாதங்களாக இடம்பெற்ற சம்பவங்கள் பல தனி மனித முயற்சிகளின் விளைவினால் ஏற்பட்ட அழிவுகளாகும். தாக்குதலை நடத்தியவர்களின் பின்னணிகள் என்னவாயினும், விளைவுகள் பலரின் வாழ்வைக் கேள்வியாக்கியுள்ளன. பிரான்ஸ் ரக் வாகனத் தாக்குதல், ஓர்லாண்டோ துப்பாக்கிச் சூடு, பிரான்ஸ் மதகுரு கொலை என்பவற்றை ஏன் அரங்கேற்றி இருக்கவேண்டும்? குறிப்பாக ஒரு குழுவில் இல்லாத தனி நபர் ஏன் இவ்வாறான விளைவுகளை ஏற்படுத்த வேண்டும்? இந்தக் கேள்விகள் ஒரு புறம் இருக்க, பன்னாட்டு போராளி அமைப்பு ஒன்று இவற்றுக்கு ஊக்குவிப்பு வழங்கி வருகின்றது.

முன்னொரு காலத்தில், அமைப்பு ஒன்றுடன் தொடர்பிருந்தால் மட்டுமே போராளி என்ற கருத்து நிலவியது. தற்போது, தனியாகவோ, குடும்பமாகவோ செயற்படுகின்றனர். இவற்றின் விளைவு உலக அமைதியின்மை ஆகும். ஆனால் இவற்றில் கவனிக்கப்படவேண்டியது, தனி மனித ஆளுமை. மிகவும் விரக்தி அடைந்த மனநிலையில் பலர் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். மன நோயாளி என இலகுவாகப் பட்டம் சூட்டி, விசாரணைகள் முடிக்கப்படுகின்றன. ஆனால் தற்போது இவ்வாறான முயற்சிகள் அதிகரித்துள்ளன. உரிமைகள் அனைத்தும் கிடைத்து, மிக ஆனந்தமான வாழ்க்கை வாழும் எந்த மனிதனும் இவ்வாறான அசம்பாவிதச் செயலுக்குத் தம்மை உட்படுத்துவதில்லை.

வறுமை, இல்லாமை, இயலாமை, அங்கீகாரமின்மை என்பன ஒரு மனிதனுக்குள் உள்ள மிருகத்தனத்தைத் தூண்டக் கூடியவை.

இவ்வாறான உணர்வுகள் மேலோங்குவதற்கு யார் காரணம்? போரின்போது பூக்களைத் தூவி உலகில் எந்த இராணுவமும் போர் செய்யவில்லை. பொதுவாக நாடு அல்லது அதிகார ரீதியிலான நகர்வுகள் நியாயமானவை என்றும், அதிகாரமற்ற குழுமுயற்சிகள் நியாமற்றவை என்றும் கருத்துக்கள் நிலவுகின்றன. இவற்றை மீறி தமக்கான நியாயத்தை முன்வைத்து அதன் உறுதிப்பாட்டில் இருந்து பின்வாங்காமல் செயற்படும் மனிதர்கள் வரலாற்றை உருவாக்கியுள்ளனர். தனி மனிதர்களாக உயிரை மாய்ப்பதற்குப் பதிலாக, உரிமைகளைப் பிறருக்கு உணர்த்தும் வகையில் போராடலாம் எனும் கருத்து மனதில் எழலாம். யார் அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவது? ஏற்கனவே பொறுப்புக் கூறலுக்கான பதவியில் பலர் இருப்பார்கள். அவர்களை மீறிச் செயற்பட்டு, மக்கள் மனதில் இடம்பிடித்து அதன் பின்னர் உரிமைகள், தேவைகள் தொடர்பாக ஆராய வேண்டும்.

இந்த நீண்ட நெடிய பயணத்திற்குப் பல தசாப்தங்கள் ஆகும். அதை வரலாற்றில் கண்டுள்ளோம். இவற்றுக்குத் தீர்வு காண்பது என்பதைவிட, மனிதனை மனிதனாக மதிப்பது மட்டுமே இவற்றைத் தவிர்க்கக் கூடிய விடயமாக அமையும். எனக்கு அடித்தால் வலிக்கும் என்றால், மற்றவருக்கு அடித்தாலும் வலிக்கும் என்ற உணர்வு தான் அது.




# பிணி கொண்ட உடல்களை குணமாக்கி அருளும் வேலா!

கே.எஸ். சிவஞானராஜா

*பெருவாரி நோய்களையும்*
*பிணிகொண்ட உடல்களையும்*
*குருவாகி வந்து குணமாக்கும் வேலா !*
*அரிதாகி ஒருபோதும்*
*அகலாத நோயெல்லாம்*
*சரியாகவே ஆடி அமாவாசையில் நீங்கும்.*

விஜயன், குவேனி, இயக்கர், நாகர், நகுல முனி, உக்கிரசிங்கசேனன், சித்ராங்கதன், நளமகாராஜன், பிருகுமுனி, ஜமதக்கினி, அயக் கீரிவ முனி, இராமன், இராவணன், மாருதப்புரவீக வல்லி, திசையுக்கிரப்பெருவழிதிமன்னன், பெரியமனத்துள்ளார் தீட்சதர் வரையான வரலாறு கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை ஆகிய மூன்றோடும் பின்னிப்பிணைந்ததாகும். குறிப்பாகப் பெரிய பெரிய சாம்ராஜ்ஜியங்களில் நிலவிய அகோரப்பிணிகளையும், அதீத தோசங்களையும், வாட்டிய குறைபாடுகளையும் கீரிமலைத் தீர்த்தமே குணமாக்கிற்று என்பது வரலாறு.

*"ஸ்ரீமத் காவேர் யாஹ தஷிணதீரே*
*ஸமுத்திரஸ்ய பஸ்சி மதடே*
*பாஸ்கர ஷேத்தே துரகானன*
*விமோசன புரே"*

என்று வடமொழியில் வழங்கப்பட்ட இவ்விடமே மாவிட்டபுரம் எனத் தமிழில் வழங்கலாயிற்று. தவசிரேட்டர்கள், அருச்சுனன், இருடிகள், தபசிகள் வழிபட்டு பாவமோசனம் பெற்றதாக வரலாறு இயம்புகிறது. மேலும் இந்தப்பாவ விமோசனத்தீர்த்தம், புண்ணிய புரவாவி, அந்தர் வாவி, கண்டகி தீர்த்தம், திவ்வியதீர்த்தம், மகற்றுறைத் தீர்த்தம், வளவர் கோன்பள்ளவாவி, திருத்தம் பலேஸ்வரவாவி, நகுலகிரிவாவி, புரவீகவாவி, குமாரத்தி பள்ள வாவி, மணற்றி டல்வாவி, உக்கிர சாந்த வாவி எனப் பற்பல பெயர் களால் அழைக்கப்பட்டு வருகிறது. இப்பேறுடைய தீர்த்தமதில், நாம் விரதமிருந்து உடல், பொருள், ஆவி தனை உளப்பூர்வமாக அர்ப்பணித்து நீராடி பார்வதி சமேத பரமேஸ்வர வாலய முருகப் பெருமானை வணங்குவோமாக இருந்தால் செய்த பாவங்கள் இனி மேலும் செய்யாதவாறு மன்னிக்கப்படும். தவறுகள் செய்யாதபடி உணர வைக்கப்படும். பிதிர்களுக்கு ஆற்ற வேண்டிய தேவையை ஏற்றுக்கொள்ள பிரியமாக்கப்படும். பிதிர்களினால் திருப்திகளின், நீடித்தவாழ்வு வாழ்க்கையில் ஏற்படும். அதர்ம வழிகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். மது, மாது துன்மார்க்கப் பாதைகளுக்குச் செல்லாமல் தடுக்கப்படுவர். அதர்ம, அக்கிரம, வக்கிர எண்ணங்கள் யாவும் மெல்ல மெல்லக் கரைந்து போகும். எனவே இந்தத் தீர்த்தம் ஆடி அமாவாசையன்று வரும் போது இயற்கையின் மாறுதல் காரணமாகப் பாவ விமோசனத்தைத் தரவல்லதாகும். பாவங்களை நாசமும் செய்யக்கூடியது.



**கனத்தநாள்**

அமாவாசை, பூரணை, அட்டமி, நவமி ஆகிய நாள்களும், அமாவாசைக்கு முந்திய நாளான இருத்தையும் மனிதமனங்களை மாற்றக் கூடிய வல்லமை படைத்த நாள்களாகும். பூரணை தவிர்ந்த ஏனைய நாள்களில் சுபகாரியங்களை ஆற்றுவதானது அவதானமாகச் செய்ய வேண்டும். அமாவாசை இந்தியாவின் சில பகுதிகளில் சிறந்த நாளாகப் போற்றப்படுகிறது. முன்னாள் இந்திய ஜனாதிபதியான வெங்கட்ராமன் அமாவாசை கூடிய நாளிலேயே பதவிப்பிரமாணம் செய்தார், வெற்றி கண்டார்.

**அமாவாசை வருவதனாலேதான்**
**பௌர்ணமிக்குப் பெருமையுண்டு.**

இருட்டு இருப்பதால்தான் இல்லறம் சிறக்கிறது. அம்மா என்று சொல்வதற்கு மூலகாரணமான 'அப்பா' பரலோகம் சென்ற பின்னர், அப்பாவின் ஆத்மாவுக்கும், அவரோடிணைந்த ஏனைய பிதிர்களுக்குமாக கீரிமலையில் ஆற்றப்படும் பிதிர்க்கடமைகளே ஆடிஅமாவாசையில் நிகழ்த்தப்படுகின்ற அதேவேளை, மாவை முருகனின் புண்ணிய தீர்த்தமாகவும் ஆடப்படுகிறது. புண்ணிய தீர்த்தமாகப் பக்தர்கள் ஆடி பாவ விமோசனமும் பிதிர்களின் ஆத்ம சாந்திக்காகத் தந்தையை எண்ணி பிதாகர்ம தீர்த்தமுமாடி ஆத்ம விமோசனமும் அடைவர்.

**மாவை**

ஆனிமாத பூர்வபட்ச ஷஷ்டியில் கொடியேற்றம் ஆரம்பமாகி இருபத்தைந்துநாள்கள் திருவிழா பார்க்கக் கோடி கண்கள் தேடிப் பெறவேண்டும். ஆடி அமாவாசையன்று மாவைக் கந்தனுக்கு மனங் குளிரத் தீர்த்தம் நடைபெறும். பாவம் தீர்க்கப் பரிகாரம் இதுவே.

மேலும் போதைகளை வர்த்தகம் செய்தல் கொலைசெய்தல், கற்பழிப்பு, அடாவடித்தனம், அட்டகாசம், கடமை, துஷ்பிரயோகம், காதல் துஷ்பிரயோகம், காணி அபகரிப்பு, கடன் அபகரிப்பு, சமய வியாபாரம், கொள்ளையடிப்பு, யாவற்றுக்குமான தண்டனைகளிலிருந்து தப்ப முடியாதவாறு உறுதிப்படுத்தப்பட்டு நிரபராதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்பது தீர்த்த மகிமையாகும். இந்தத் தீர்த்தம் குற்றவாளிகள் எவராக இருந்தாலும், இறைவனிடம் காட்டிக் கொடுத்தே தீரும். சிங்கையாரியனும் புவனேகபாகுவும் இந்தத் தீர்த்தத்தால் பெரும்பேறு பெற்றனர். இதனாலன்றோ இலங்கையை எவர் ஆண்டாலும், மாவிட்டபுரத்துக்கும் கீரிமலைக்கும் சென்று வழிபடுவது வழமையாகும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் மாவிட்டபுரம் சிதைக்கப்பட்டு, பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் வளர்ச்சி கண்டது. அபிஷேகமானது குளிரக் குளிர கோயில் அபரிமிதமாக மிளிரவும், ஒளிரவும், வளரவும் வகைசெய்யப்பட்டு வருகிறது.

**திருப்பணி**

ஆகமவிதிப்படி பல கோடி பெறுமதியான திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. கோபுரங்கள், வில்வடிவு மண்டபங்கள், சிற்ப வேலைப்பாடுகள், தூண் வனப்புகள், ஓவியப்படைப்புக்கள், தேர் முட்டி, தேர்க்கொட்டகை, தேர்கள், ஓடுபாதைப் பிரகாரம், பழனி ஆண்டவர் சந்நிதி, கொடித்தம்ப மண்டபங்கள், உற்சவ மூர்த்திகள், பொம்மைச் சிற்பங்கள், வர்ணப் பூச்சுக்கள், பாதுகாப்புப் பெட்டகங்கள் என ஆயிரம் பணிகள் ஆற்ற வேண்டியுள்ளது. ஆலயத்தைத் தேவலோகமாக மாற்ற வேண்டிய தேவை உலக சைவ அன்பர்களைச் சார்ந்துள்ளது. மாவை ஆதீனம் ஒரு பல்கலைக்கழக மேன்மையை வழங்குகின்றது. கலைகளின் உறைவிடமாகவும், பயிலிடமாகவும், அரங்கிடமாகவும் திகழ்கிறது! சிவப்பேறும், தவப்பேறும், தலப் பேறும், முருகப்பேறும், நலப்பேறும் கிடைக்க வாருங்கள், தீர்த்தம் ஆடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** மனதில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். தொழில், வியாபாரம் செழித்து, திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** சொந்தப் பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டியைச் சரி செய்ய முயல்வீர்கள். இலாபம் சுமாராக இருக்கும். உடல்நிலை சீராக இருக்கும்.

**மிதுனம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில் இலக்கு எளிதில் பூர்த்தியாகும். இலாபம் அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** தேவையற்ற விடயங்களில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரம் தாமதகதியில் இயங்கும். இலாபம் சுமார். நண்பர்களால் உதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் நல்லது.

**சிங்கம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், அபரிமிதமான இலாபம் கிடைக்கும். பணி யாளர்கள் பாராட்டு, வெகுமதி பெறுவர்.



**கன்னி:** குடும்ப பிரச்சினையில் தீர்வு ஏற்படும். பொறுப்புகளை முழு மனதுடன் நிறைவேற் றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். மனைவி விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** பிறர் விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் முயற்சி தேவை. இலாபம் மிதமாக இருக்கும். வெளியூர்ப் பயணத்தில் மாறுதல் ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமை காப்பது நல்லது.



**விருச்சிகம்:** குடும்பத்தில் பணத்தேவை அதி கரிக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, கூடுதல் முயற்சி தேவை. இலாபம் சுமார். உடல்நலம் சீராக இருக்கும். அதிக விலையுள்ள பொருளை கவனமுடன் பாதுகாப்பது நல்லது.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். இடையூறுகளை சமயோசிதமாக சரி செய் வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் கணிசமாக உயரும். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**மகரம்:** பிறர் நலனில் அக்கறை கொள் வீர்கள். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். சராசரி பணவரவுடன், நிலுவைப் பணமும் வசூலாகும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டு.

**கும்பம்:** கடந்த கால அனுபவத்தால், நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த இலாபம் கிடைக்கும். சேமிப்பு பணம் செலவுகளுக்கு பயன்படும். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வீர்கள்.

**மீனம்:** பணிகளில் குளறுபடி ஏற்படலாம். நண்பர்களால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகளின் செயற்பாடு கண்டு நிம்மதி கொள்வீர்கள்.



மனைவி: உங்கள மாதிரி ஒரு மாப்பிள்ளை இனிமே கிடைக்க மாட்டார் என்று எங்க அப்பா சொன்னாங்க...
எனக்கு எவ்வளவு பெருமையா இருந்தது தெரியுமா...?
கணவன்: அதெல்லாம் சும்மாடி... நம்பாத
மனைவி: ஏன்.. ஏன்.. அப்படி சொல்றீங்க?
கணவன்: என்னை மாதிரி மாப்பிள்ளை இனிமே கிடைக்க மாட்டார் என்றா... அப்புறம் ஏன் உன் தங்கச்சிக்கு உங்கப்பா வேற மாப்பிள பாக்குறாரு...




"நான் 100 படங்களுக்கு இசை அமைத்து விட்டேன். மென்மையான பாடல்கள், குத்துப்பாடல்கள் என்று ரசிகர்கள் விரும்பும் பல விதமான பாடல்களைக் கொடுத்து இருக்கிறேன். சமீப காலங்களில் பெண்களை இழிவுபடுத்தி, அதிக பாடல்கள் வருகின்றன. பெண்களை மோசமான வார்த்தைகளால் திட்டுவது போன்று பாடல் வரிகள் உள்ளன. இது வருத்தம் அளிக்கிறது.

எனது இசையில் பெண்களை இழிவுபடுத்தும் பாடல்களை உருவாக்க மாட்டேன். ஜீவா-நயன்தாரா ஜோடியாக நடித்துள்ள 'திருநாள்' படத்துக்கு இசையமைத்து இருக்கிறேன். இந்தப் படத்தில், 'பெண்களைத் திட்டாதே' என்று ஒரு பாடல் வைத்து இருக்கிறேன். பெண்களை திட்டியும் தாக்கியும் பாடல்கள் வெளிவரும் இந்தக் கால கட்டத்தில், பெண்களை திட்டாதிங்கப்பான்னு ஒரு கருத்தோடு இந்தப் பாட்டை உருவாக்கி இருக்கிறோம்.

மேலும் 5 பாடல்கள் இந்த படத்தில் இடம்பெற்று உள்ளன. 'தந்தையும் யாரோ' என்ற பாடலை ஜானகி பாடி இருக்கிறார். எத்தனையோ இசை ஜாம்பவான்களுடன் பணியாற்றி உள்ள ஜானகி, எனது இசைக்குப் பாடியதை பெருமையாகக் கருதுகிறேன்.

ஹேய் சின்ன பங்காளி என்ற பாடலை டி. இமான் பாடி உள்ளார். கங்கை அமரனும் ஒரு பாடலை பாடி இருக்கிறார். 'பழைய சோறு பச்ச மிளகா' என்ற மென்மையான பாடலும் ரசிகர்கள் வரவேற்பை பெற்றுள்ளது. ராம்நாத் இயக்கி உள்ள இந்தப் படம் அடுத்த மாதம் திரைக்கு வருகிறது. தமிழ் திரையுலகின் ஐந்து முன்னணி இசையமைப்பாளர்கள் பட்டியலில் ஒருவராக என்னையும் இந்தப் படம் இடம்பெறச் செய்யும். இதன் பின்னணி இசை அனைவராலும் பாராட்டப்படும். ரசிகர்கள் எனக்கு மியூசிக் ஸ்டார் என்று பட்டம் கொடுத்துள்ளனர். இது மகிழ்ச்சி அளிக்கிறது" என்று சிறீகாந் தேவா தெரிவித்தார்.

முந்நூறு ரூபா கொடுத்து கபாலியைத் தியேட்டரில விசில் அடிச்சிப் பார்ப்பீங்கடா நீங்க,



முப்பது ரூபா கொடுத்து கபாலியோட சேர்த்து தியேட்டரில நீங்க அடிச்ச விசிலையும் பார்ப் போம்டா நாங்க...

டேய்... இன்னுமா நீ தனியாளாவே இருக்க...
உனக்கு கேவலமா இல்லையா...



யாரப் பார்த்து கேவலம் எண்டு சொல்ற... நான் எப்பவுமே என் நண்பர்கள்கூட சந்தோசமாகத்தான் இருப்பேன், உன்னால இருக்க முடியுமா? எனக்கு நெற்காட் மட்டும் போட்டா போதும், உனக்கு போதுமா? நான் ஒவ்வொரு நாளும் 10 மணித்தியாலம் தூங்குவன், உன்னால முடியுமா? போடா... தனியாளா இருக்கிறதுக்கு பெருமைப்படணும்டா...

ரம்பா:
ஹாய் நான் ஒரு
புது மொபைல் வாங்கி
இருக்கேன். apps லாம் டக்
டக்குன்னு ஓபன் ஆகும்.
ஊர்வசி: ஓஹோ விலை
எவ்வளவடி??
ரம்பா: 80000 ரூபா, உனக்கு
வேணுமாடி?
ஊர்வசி: பரவாயில்லை
மெதுவாவே ஓபன்
ஆகட்டும்.



கோழியின் இறுக்கல்!!
நடுத்தரவர்க்கம் வீடு கட்றதெல்லாம் ஒரு சாதனையா? அதுக்கு வாங்கின கடனைக் கட்டுறதுதான் சாதனை!!!
121 63

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | 7 | | | | 8 |
| | | | | 9 | 8 | | 7 | |
| | | 2 | 5 | | | | | |
| | | | | | 1 | | 6 | 4 |
| | | 8 | | | | 5 | | |
| 1 | 3 | | 6 | | | | | |
| | | | | | 2 | 1 | | |
| | 6 | | 1 | 3 | | | | |
| 3 | | | | 6 | | | 4 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 2 | 4 | 8 | 9 | 1 | 3 | 5 |
| 9 | 5 | 3 | 6 | 1 | 7 | 2 | 8 | 4 |
| 4 | 1 | 8 | 2 | 3 | 5 | 6 | 9 | 7 |
| 7 | 9 | 1 | 5 | 6 | 4 | 3 | 2 | 8 |
| 5 | 2 | 6 | 8 | 9 | 3 | 4 | 7 | 1 |
| 3 | 8 | 4 | 1 | 7 | 2 | 9 | 5 | 6 |
| 8 | 4 | 7 | 3 | 2 | 6 | 5 | 1 | 9 |
| 2 | 6 | 9 | 7 | 5 | 1 | 8 | 4 | 3 |
| 1 | 3 | 5 | 9 | 4 | 8 | 7 | 6 | 2 |

## சுடோக்கு எண் விளையாட்டு


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாகரிக லெதர் சப்பாத்துக்கள் அறிமுகமாகியுள்ளன. கணுக்கால் வரை இந்தச் சப்பாத்துகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை 2600 ரூபா தொடக்கம் 3000 ஆயி ரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின் றன.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 150 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 800 | 800 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 700 | – | – |
| சீலா | 300 | 600 | 400 | 600 | 500 | – | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 400 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 200 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | 200 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 200 | – | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | – | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | – | 200 |
| மதனம் | 150 | 200 | 180 | 400 | 300 | – | 350 |
| கொய் | 100 | 200 | 60 | 70 | 100 | – | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |



# சிப்பி சீடை

### தேவையான பொருள்கள்

அரிசி மா – 1 கப்
உளுத்தம் மா – கால் கப்
கடலை மா –கால் கப்
கெட்டியான தேங்காய்ப் பால் – கால் கப்
வெண்ணெய் – 1 தேக்கரண்டி
உப்பு –தேவையான அளவு
எண்ணெய் பொரிப்பதற்கு –தேவையான அளவு
சுடுநீர்–தேவையான அளவு

### செய்முறை

அரிசி மா, உளுத்தம் மா மற்றும் கடலை மா என்பவற்றுடன் உப்பு, வெண்ணெய் சேர்த்து கையால் பிசைய வேண்டும்.

பின்னர் அதில் வெது வெதுப்பாகச் சூடேற்றிய தேங்காய்ப் பாலை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி மென்மையாகப் பிசைந்து கொள்ள வேண்டும்.

தேங்காய்ப் பால் போதாமல் இருந்தால் சுடு நீரை கொஞ்சம் ஊற்றிப் பிசைந்து கொள்ளலாம்.

பின்பு முறுக்கு உரலில் தட்டையாக சீப்பு போன்று இருக்கும் அச்சை எடுத்து பொருத்தி பின் அதில் மாவை வைத்து ஒரு தட்டில் நேராக ஒரு கோடு போன்று பிழியவேண்டும். பின் கத்தியால் சிறு துண்டுகளாக வெட்டி அதனை உருட்டிக் கொள்ளவேண்டும். பிறகு ஒரு சட்டியை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் உருட்டி வைத்துள்ளதைப் போட்டு பொரித்து எடுத்தால் சீப்பு சீடை தயார். மாலை நேரங்களில் தேநீருடன் பரிமாறலாம்.

## நாளை

ஆடி-19
புதன்கிழமை
-03.08.2016
திதி: பிரதமை
பி.இ.02.51 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
பி.இ.03.50 வரை
ராகுகாலம்:
12.04-01.34 வரை
சுபநேரம்:
04.34-06.04 வரை



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 80 | 50 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 140 | 100 | 140 | 100 | 120 | 80 | 90 | 80 |
| கரட் | 200 | 160 | 240 | 100 | 160 | 180 | 110 | 100 |
| மரவள்ளி | 120 | 90 | 80 | 80 | 100 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 250 | 180 | 200 | 250 | 260 | 140 | 200 | 100 |
| பாகல் | 350 | 220 | 325–400 | 300 | 320 | 160 | 240 | 200 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 200 | 130 | 140 | – | 75 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 100 | 80 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 50–100 | 70 | 90 | 100 | 90 | 70 |
| பூசணி | 70 | 80 | 120 | 80 | 100 | 100 | 70 | 100 |
| தக்காளி | 200 | 100 | 200 | 100 | 80–100 | 150 | 120 | 70 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 100 | 100 | 80 | 70 | 50 |
| கீரை | 30 | 20 | 40 | 25 | 30 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 400 | 600 | 300 | 600 | 600 | 400 | 400 |
| புடோல் | 80 | 80 | 80 | 50 | 80 | 80 | 70 | 60 |
| கோவா | 150 | 40 | 140 | 150 | 140 | 80 | 90 | 120 |
| வெண்டி | 80 | 60 | 80 | 40 | 100 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 130 | 220 | 160 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 100 | 200 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 30 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 80 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 160 | 100 | 120 | 200 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 300 | 200 | 320 | 200 | 200 | 200 | 200 | 170 |
| இராசவள்ளி | 160 | – | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 300 | 150 | 120 | 150 | 100–120 | 400 | 200 | 120 |

## பாட்டி வைத்தியம்

- மலச்சிக்கல்: செம்பருத்தி இலைகளை தூள் செய்து, தினமும் இருவேளை சாப்பிட்டு வர மலச்சிக்கல் தீரும்.
- சீதபேதி: மலை வாழைப்பழத்தை நல்லெண்ணெயில் சேர்த்துச் சாப்பிட சீதபேதி குணமாகும்.
- பித்த வெடிப்பு: கண்டங்கத்திரி இலைச் சாறை ஒலிவ் எண்ணெயில் காய்ச்சி பூசி வந்தால் பித்த வெடிப்புக் குணமாகும்.
- மூச்சுப்பிடிப்பு: சூடம், சுக்கு, சாம்பிராணி, பெருங்காயம் இவைகளைச் சம அளவு சேர்த்து வடித்த கஞ்சியில் கலக்கி மறுபடியும் சூடுபடுத்தி மூச்சுப்பிடிப்பு உள்ள இடத்தில் மூன்று வேளை தடவினால் குணமாகும்.
- சரும நோய்: ஒரேஞ்சு தோலை வெயிலில் காயவைத்து பொடி செய்து தினமும் சோப்புக்குப் பதிலாக உடம்பில் தேய்த்து குளித்து வர சரும நோய் குணமாகும்.
- தேமல்: வெள்ளைப் பூண்டை வெற்றிலை சேர்த்து மசிய அரைத்து தினமும் தோலில் தேய்த்து குளித்து வர தேமல் குணமாகும்.
- மூலம்: கருணைக் கிழங்கை சிறுதுண்டுகளாய் நறுக்கி துவரம் பருப்புடன் சேர்த்து. சாம்பாராகச் செய்து சாப்பிட்டு வர மூலம் குணமாகும்.
- தீப்புண்: வாழைத் தண்டைச் சுட்டு அதன் சாம்பலை தேங்காய் எண்ணெயில் கலந்து தடவி வர தீப்புண், சீழ்வடிதல் மற்றும் காயங்கள் விரைவில் குணமாகும்.
- மூக்கடைப்பு: ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லிட்டர் நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி, பால், சர்க்கரை சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வர மூக்கடைப்பு விரைவில் நீங்கும்.
- வறட்டு இருமல்: எலுமிச்சம் பழச்சாறு, தேன் கலந்து குடிக்க வறட்டு இருமல் குணமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாவகச்சேரியில் மாணவர்களை கௌரவித்தது கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் 'அருணலு' சேமிப்பு கணக்கு வைத்துள்ள ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 28 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு வங்கிக் கிளைக் கட்டடத்தில் நடை பெற்றது. கிளை முகாமையாளர் சி.சிவரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக வங்கியின் வட பிராந்திய மூத்த முகாமையாளர் எஸ்.கே.குணசிங்கமும், கௌரவ விருந்தினராகக் கிளையின் உதவி முகாமையாளர் திருமதி ம.அனித்தாவும் கலந்து கொண்டனர். (து-9-131)

## 77 ஆண்டுகளின் சேவை நயப்பில் இலங்கை வங்கி



சாவகச்சேரி ஓக. 2

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை, தமது 77 ஆண்டுகால சேவைநயப்பின் நிறைவு நாள் நிகழ்வுகளை நேற்றையதினம் கோலாகலமாக கொண்டாடியது.

கிளை முகாமையாளர் மற்றும் சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் ஆகியோர் 77 ஆவது ஆண்டு நிறைவு நாள் கேக்கை வெட்டி நிகழ்வை சிறப்பித்தனர்.

சாவகச்சேரி கிளை முகாமையாளர் திருமதி சு.நேதானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர சபையின் செயலாளர் கா.சண்முகநாதன் கலந்து கொண்டார். ஆசியுரைகளை சிவஸ்ரீ வீ.பாலகுமாரக் குருக்கள் மற்றும் பங்குத் தந்தை அருட்திரு. யோசப் பிரான்சிஸ் அடிகளார் ஆகியோர் வழங்கியிருந்தனர். (ரி - 2)

## குழந்தைகளுக்கான ஸ்மார்ட் வோச் அறிமுகம் இயங்கு நிலையை கண்காணிப்பதற்கான ஏற்பாடு




இன்றைய காலகட்டத்தில் குழந்தைகள் பெற்றோரிடமிருந்து தூரவிலகி இருக்க வேண்டிய சந்தர்ப்பங்களையும் அவர்களின் நடவடிக்கைகள், செயல் நிலைகளை கண்காணிப்பதை, ஆபத்துக்களில் இருந்து அவர்களை பாதுகாப்பதை நோக்காகக் கொண்டும் ஸ்மார்ட் வோச் நிறுவனம் இந்த விசேட கடிகாரங்களை உற்பத்தி செய்துள்ளது.

குழந்தைகளின் பாதுகாப்பு வசதி, பயன்பாடு என்பவற்றுக்கு ஏற்றவகையிலே புதிய தொழில்நுட்ப வசதிகள் உட்புகுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக குழந்தைகளின் அசைவியக்கத்தை எமது கைபேசியிலிருந்து இருந்து அறிந்து கொள்ள முடியும். மேலும் 5 முதல் 10 வரையிலான இலக்கங்களையும் சேமித்து வைக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டது. குழந்தைகள் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது, குழந்தைகள் சுலபமாக பெற்றோருடன் தொடர்பு கொண்டு பேசக்கூடிய செயலிகள் அதில் உள்ளடக்கப்பட்டன.

இவைதவிர சமிக்ஞை ஒலிகள், நாள்காட்டி, ஞாபக மூட்டல் செயலிகள், விளையாட்டு வசதிகள் என மேலதிக வசதிகளும் இணைப்புச் செய்யப்பட்டன.

மேலும், இந்த கடிகாரத்தில் உள்ள வழித்தடப் பதிவேட்டில் பதிவுகளை மேற்கொள்வதன்மூலம் குழந்தைகள் வழித்தடங்களை மறக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது, எச்சரிக்கை ஒலிகளை எழுப்புவதன்மூலம் அவர்களுக்கு சரியான வழியைக் காட்டுகின்றன. இதன் மூலம் குழந்தைகள் தொடர்பிலான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ரி-2)

வணிகம்

நுட்பம்



## எச்ரிசி நிறுவனத்தின் புதிய வெளியீடு எச்ரிசி 10

எச்ரிசி கைத்தொலைபேசி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கைபேசி வகைளிலேயே தற்பொழுது வெளியிடப்பட்டுள்ள எச்ரிசி 10 வகையே முதன்மையானதாகக் கருதப்படுகிறது.

துல்லியமான ஒலித்திறன்தான் கொண்ட கைபேசிகளை வெளியிடும் நிறுவனங்களில் எச்ரிசி முதன்மையில் உள்ளது.

அந்த நிறுவனம் தற்போது வெளியிட்டுள்ள எச்ரிசி 10 கைபேசிபேசி, 5.2 அங்குல திரை 564 பிக்சல் தீர்மானத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் 32 ஜிபி உள்ளக சேமிப்பகமும், 2 ரிபி வரையான சேமிப்பு அதிகரிப்பு வசதியும் உள்ளது. அன்ரொய்ட் மாஸ்மெல்லோ இயங்குதளத்தில் இயங்குகின்றது. 12 மெகா பிக்சல் கமரா, 5 மெகா பிக்சல் முன்பக்கக் கமரா என்பவற்றுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் எச்ரிசியின் பூம்சவுண்ட் தொழில் நுட்பம் மற்றும் டால்பி அட்மோஸ் தொழில் நுட்பம் என்பன பொருத்தப்பட்டுள்ளன.



## வட்ஸ்அப் உரையாடல்கள் ஒருபோதும் அழியாது!

வட்ஸ்அப் செயலியில் மேற்கொள்ளும் உரையாடல்களை அழித்துவிட்டாலும், அவை ஒருபோதும் அழிவதில்லை என்று அப்பிள் நிறுவனத்தின் பாதுகாப்பு துறை வல்லுநர் ஜோனதன் செட்சியார்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் நிறுவனத்தின் ஒரு சமூக வலைத்தள செயலியான வட்ஸ்அப் தற்போது உலக அளவில் அதிகமானவர்களால் பாவிக்கப்படும் ஒன்றாக உள்ளது. அதன் பாவனையாளர்களின் நன்மை கருதி அதில் மேற்கொள்ளப்படும் உரையாடல்களை என்கிரிப்டுசெய்து 3ஆவ்து நபர் பார்க்கமுடியாத அளவுக்கு பாதுகாப்பு வசதியை வட்ஸ்அப் வழங்கி வருகிறது.

இந்தநிலையில் வட்ஸ்அப் உரையாடல்களை நாம் அழித்துவிட்டாலும் அது முற்றிலுமாக அழியாது என ஜோனதன் செட்சியார்ஸ்கி தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது:

வட்ஸ்அப்பில் உரையாடல்களை நாம் அழித்தாலும் அந்த உரையாடல்கள் முற்றிலுமாக அழிந்துவிடாது.

அவற்றை 3ஆவது நபரால் கண்காணிக்க இயலும். கைப்பேசியில் இருந்து வட்ஸ்அப்ஐ அழித்து விடுவதே ஒரே தீர்வு. என்கிரிப்சன் வசதியை கொண்டுவந்துள்ள போதிலும் வட்ஸ்அப் உரையாடல்களின் பாதுகாப்பு இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதயாத்திரையால் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது: சு.க.

பாதயாத்திரை மூலம் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது என சிறிலங்கா சுதந்திரக் கட்சி திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

அத்துடன், அன்று மன்னர்போல் இருந்த மகிந்த ராஜபக்ச, பதவி ஆசையால் இன்று நடுவீதியில் உலாவருகிறார் என்றும் அது விமர்சித்துள்ளது.

அரசுக்கு எதிராக மகிந்த ஆதரவு அணியினர் முன்னெடுத்த பாதயாத்திரை நேற்றுடன் நிறைவுக்கு வந்தது. இது தொடர்பில் கருத்து தெரிவித்த சு.கவின் உப தலைவரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளருமான மகிந்த அமரவீர மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு தவறான ஆலோசனைகள் வழங்கப்பட்டதாலேயே தேர்தலில் தோல்வியைச் சந்திக்க நேரிட்டது. விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் அவரைச் சூழ்ந்திருந்து இறுதியில் ஆபத்துக்குள் தள்ளிவிட்டனர். ஐ.நாவுக்கு எதிராக போராட்டம் நடத்தி அனைத்துலக சமூகத்தின் முன்னால் நாட்டை தலை குனியவைத்ததும் இவர்கள்தான். மன்னர்போல் இருந்த மகிந்த ராஜபக்ச இன்று நடுவீதிக்கு வந்து ஆட்சியைக் கோரி நிற்பதும் இவர்களுக்காகத்தான். 11 மாதங்களில் எப்படி அரசைக் கவிழ்க்க முடியும். அதற்கு சாத்தியமே இல்லை. எனவே, தெளிவாகக் கூறுகின்றோம். இன்னும் ஐந்து வருடங்களுக்கு இந்த அரசை அசைக்க முடியாது - என்றார் அமைச்சர் அமரவீர. அதேவேளை, மகிந்த அணியில் பங்கேற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும்ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அக்கட்சி அறிவித்துள்ளது. இதற்காக அக்கட்சியின் மத்திய செயற்குழு விரைவில் கூடவுள்ளது.

(உ-சி)

## சிறையில்

ருந்தன. மக்களின் கரகோசத்துடனும், வான் பிளந்த கோசத்துக்கு மத்தியிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

வைத்தியர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என்று அனைவரும் இங்கு வந்துள்ளனர். அரசின் வதை தாங்க முடியாமலேயே அவர்கள் வீதியில் இறங்கியுள்ளனர். எதிரணியின் அரச எதிர்ப்புப் பயணத்தை ஒடுக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது.

அன்று நான், வாசு போன்றோர் பாதயாத்திரை சென்றோம். ஆனால், பிரமேதாச நீதிமன்றத்துக்குச் சென்று தடையுத்தரவு வாங்கவில்லை. இன்று நிலைமை மாறியுள்ளது.

குறுகிய காலத்துக்குள்ளேயே 8 லட்சம் மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். மக்கள் வெள்ளத்தையும் பேரணியையும் கண்டு அரசின் முழு உடலும் நடுநடுங்குகின்றது. அச்சத்தால் தலைகால் புரியாது தடுமாறுகின்றது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவையும், இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவையும் வைத்துக் கொண்டு எம்மை முடக்குவதற்கு முயற்சிக்கின்றனர். சிறையில் போட்டாலும் போராட்டம் ஓயாது. அச்சுறுத்தல்கள் மூலம் மக்கள் குரலை நசுக்க முடியாது. ஆட்சியைக்கவிழ்த்தே தீருவோம்.

இன்றைய அரசு சர்வாதிகாரிபோல் செயற்படுகின்றது. உலகில் இருந்த சர்வாதிகரிகளுக்கு நடந்ததுதான் இவர்களுக்கும் நடக்கும் என்பதைப் புரிந்து கொண்டால் சரி.

அதேவேளை, எமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை இல்லாமல் செய்யும் வகையில் வெளிநாடுகளுடன் உடன்படிக்கை செய்வதற்கு இவர்கள் தயாராகின்றனர். இதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

இராணுவத்தினர் நடுவீதியில் விடப்பட்டுள்ளனர். அவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. ஆனால், இராணுவத்தினரைப் போர்க்குற்ற நீதிமன்றத்துக்கு அனுப்பப் பார்க்கின்றனர். கலப்பு நீதிமன்றத்துக்கு அனுமதி வழங்கக்கூடாது. இதைத் தடுக்கத்தான் நாம் வந்துள்ளோம்.

ஆட்சியைக் கவிழ்க்க மக்களைத் தயார்ப்படுத்தி வருகின்றோம். அதை எப்படி செய்வது என்பதைச் சொல்லிவிட்டுத்தான் திரும்பிச் செல்வோம் - என்றார்.

(உ-5)

## மன்னார்

மனிதப் புதை குழி தற்செயலாகக் கண்டறியப் பட்டது. மன்னார் நீதிவான் மன்றின் உத்தரவு மற்றும் நெறிப்படுத்தலின் கீழ் அந்தப் புதை குழியில் இருந்து 80 க்கும் மேற்பட்ட மண்டையோடுகளும் மனித எச்சங்களும் மீட்கப்பட்டன.

இந்த மனிதப் புதைகுழிக்கு அருகே இருந்த கிணறு ஒன்றினுள்ளும் மனிதச் சடலங்கள் போட்டு மூடப்பட்டதாகச் சந்தேகம் கிளப்பப்பட்டது. இதையடுத்து மன்னாரில் காணாமற் போனவர்களின் உறவினர்களால் சட்டத்தரணிகள் ஊடாக மன்னார் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. சந்தேகத்துக்கிடமான கிணற்றைத் தோண்டி அதற்குள் மனித எச்சங்கள் உள்ளனவா என்று சோதிக்க வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டது. இதற்கான அனுமதி நீதிமன்றால் வழங்கப்பட்ட போதும் மழை வெள்ளம் மற்றும் பல்வேறு காரணங்களால் அகழ்வுப் பணிகள் நீண்ட காலமாகப் பின்தள்ளப்பட்டு வந்தது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

காணாமல் போனவர்களின் உறவுகள் சார்பாக சட்டத்தரணிகளான வி.எஸ்.நிறைஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜா ஆகியோர் மன்றில் முற்பட்டிருந்தனர். மன்னார் மாவட்ட விசேட சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் டபிள்யு. ஆர்.எஸ்.ராஜபக்ச உட்பட அழைக்கப்பட்ட அரச திணைக்கள அதிகாரிகள் அனைவரும் மன்றுக்கு வருகை தந்திருந்தனர். விசாரணைகளின் பின்னர் கிணற்றை அகழ்வதற்கு நீதிவான் மன்னார் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். காலை 10.30 மணியளவில் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் கிணறை அகழும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. முதலில் கிணறு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வெடி பொருள்கள் எவையும் காணப்படுகின்றதா என்பது குறித்து விசேட அதிரடிப் படையினர் சோதனை நடத்தினர். பின்னர் நீதிவான் முன்னிலையில் அகழும் பணி ஆரம்பிக்கப்பட்டது. மதியம் ஒரு மணி வரை அந்தப் பணி தொடர்ந்தது. கிணற்றிலிருந்து இரண்டு சிறிய எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

மீண்டும் பிற்பகல் 2 மணியில் இருந்து 5 மணிவரை அகழ்வு தொடர்ந்தபோதும் வேறு தடயங்கள் மீட்கப்படவில்லை. இன்று காலை 8 மணிக்கு அகழ்வுப் பணி மீண்டும் இடம்பெறவுள்ளது. மீட்கப்பட்ட இரண்டு எலும்புக் கூடுகளும் மனிதர்களுடையதா என்பது தொடர்பான பகுப்பாய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

(உ-21,56)

## தந்தையர்

நடப்பட வேண்டியிருக்கின்றது. போர் காரணமாக பெருமளவிலான மரங்கள் அழிந்துவிட்டன. எமது இயற்கை வளம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இயற்கைச் சமநிலை குழம்பியுள்ளது.

இன்று ஆடி அமாவாசை. தந்தையரை இழந்தவர்கள் பிதிர்கடன் செலுத்தும் நாள். இன்று பிதிர்கடன் செலுத்தும் ஒவ்வொருவரும், தமது தந்தையர் நினைவாக ஒரு மரத்தை நட்டால்போதும். ஒவ்வொரு வருடமும் இவ்வாறு மரம் நட்டுவந்தால் எமது யாழ். மாவட்டம் பசுமை மாவட்டமாக மாற்றமடையும்.

எனவே இன்று பிதிர்கடன் செய்யும் ஒவ்வொருவரும், மரம் நடுகையில் ஈடுபடுங்கள் - என்றார் மாவட்டச் செயலர். (உ-5)

## இன, மத

களைத் தடைசெய்யும்படி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுவில் வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறான உத்தரவொன்றைப் பிறப்பிக்க உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரங்கள் இல்லை என்று தெரிவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் அரச தரப்பு சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் அதனைத் தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

எதிர் தரப்பின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் மனுவை விசாரணையின்றித் தள்ளுபடி செய்தனர். (உ-5)

## 320 மீனவக்

320 மீன்பிடிக் கிராம சேவையாளர் பிரிவுகள் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்தக் கிராமங்களில் முழுமையான அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 65 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஒதுக்கீடு செய்தது. இது தொடர்பில் ஆய்வு செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்தனர்" என்று வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ. பத்திநாதன் தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழுத் தலைவர் கிறட் கலிஸ்பெரி மற்றும் திட்டப் பணிப்பாளர் புவனேந்திரன் உள்ளிட்ட குழுவினரே யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்தனர். மாவட்டச் செயலகத்தில் செயலர் நா.வேதநாயகன் தலைமைச் செயலர் அ.பத்திநாதன் ஆகியோருடன் இந்தக் குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சந்திப்புக் குறித்து தலைமைச் செயலர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் 912 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. அவற்றில் 320 கிராம சேவையாளர் பிரிவுகள் மீனவர்களைப் பெரும்பான்மையானவர்களாகக் கொண்டது. அந்தக் கிராமங்களின் முழுமையான அபிவிருத்திக்காகவே 65 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் கிராமங்களை இந்தக் குழுவினர் நேரடியாகச் சென்று பார்வையிடுவார்கள். மக்களின் தேவைகளை இணங்கண்டு அறிக்கை தயாரிப்பார்கள். மீனவர்களுக்கான இறங்குதுறை, கப்பல் நிறுத்துமிடம், வெளிச்ச வீடுகள், கடற்றொழிலுக்குச் செல்லும் கரையோர வீதிப் புனரமைப்பு, மீனவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள், மீனவக் கிராமங்களுக்கான அபிவிருத்திகள் என்று பல்வேறு விடயங்கள் தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்படும்.

அறிக்கைப் பணி ஒக்ரோபர் மாதத்தில் நிறைவடையும். இதன் பின்னர் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக, மீனவக் கிராமங்கள் முழுமையான – நிலையான அபிவிருத்தியை அடையும் என்று நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்ட மீனவப் பிரதிநிதிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

(உ-5-101-106)

## தீப்பெட்டியின்

ஒன்றின் புதிய விலை 6 ரூபாவாகும். தீப்பெட்டி தயாரிப்பதற்கான மூலப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளதால் தீப்பெட்டியின் விலை உயர்த்தப்படுகின்றது என்று உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

(ம-5)

## சிறிசேனவின்


கண்டியிலிருந்து ஆரம்பமான பாதயாத்திரை நேற்றுக் கொழும்பை வந்தடைந்தது. டார்லி வீதியினூடாகப் பாதயாத்திரை சென்றது. மகிந்த பாதயாத்திரைக்குத் தலைமை தாங்கி முன்சென்றார். சுதந்திரக் கட்சித் தலைமை அலுவலகத்தைப் பாதயாத்திரை கடக்கும்போது, "இது சிறிசேனவின் அப்பக்கடை" என்று பெரும் முழக்கம் எழும்பியது.

(உ-5)

## மரண அறிவித்தல்

### வினாசித்தம்பி தர்மசோதி

தோற்றம்
14 . 04 . 1952



மறைவு
31 . 07 . 2016

பூவரசங்குளம், வவுனியாவைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி தர்மசோதி 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி- பாக்கிய சௌந்தரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மாணிக்கம் காலஞ்சென்ற ஆனந்தம் மற்றும் சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கபூரணத்தின் அன்புக் கணவரும் புனிதவதி, பிரபாவதி(கனடா), பரஞ்சோதி காலஞ்சென்றவர்களான சிவசோதி, ஜெகசோதி, மற்றும் இரத்தினசோதி (கனடா), பத்மாவதி, கிருஷ்ணசோதி(நோர்வே), யோகவதி (ஜேர்மனி), சத்தியாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்மரூபன் (பிரான்ஸ்),கோமதி (ஜேர்மனி), ஜெயரூபன், காந்தரூபன்(ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும் அஜந்தா (பிரான்ஸ்), ரமேஷன்(ஜேர்மனி), புவனேஸ்வரி, சர்மினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ராசா காலஞ்சென்ற நல்லையா மற்றும் சாவித்திரி, லட்சுமி,ராஜராணி, புஷ்பநாதன், மீனாட்சிப்பிள்ளை, பங்கயச்செல்வி, சண்முகராசா, ஐயாத்துரை (ஜேர்மனி), விஸ்வலிங்கம், நல்லையா, தங்கரத்தினம், காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் பரமேஸ்வரி, சண்முகநாதன், தணிகாசலம், அமிர்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பிரியவர்ஷன் (பிரான்ஸ்), சதுர்ஷன்(பிரான்ஸ்), றக்ஷியா (பிரான்ஸ்), கிருத்திக் (பிரான்ஸ்), றக்ஷன் (ஜேர்மனி), றோஷன்(ஜேர்மனி),றோஷிகா (ஜேர்மனி) சுலக்ஷன், பிரவீன்,அக்ஷயா, கரீனா (ஜேர்மனி), சரூஷன்(ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற செல்லக்கண்டு மற்றும் சபாநாயகி, பூபதி, காலஞ்சென்றவர்களான நடராசா, செல்வராசா மற்றும் சிவகங்காதரன்,வனிதா, ஜெயமலர், ரஞ்சினி ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

போக்காலை வீதி,
இமையாணன்மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமதியின்றி மாடு வெட்டிய மூவருக்கு மறியல்

தென்மராட்சி, ஓக.2
அனுமதிப்பத்திரமின்றி காளை மாட்டை வெட்டிய மிருசுவில் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார்.
நேற்றுமுன்தினம் தவசிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள வீடொன்றில் மாட்டை இறைச்சியாக்கியபோது அங்கு சென்ற கொடிகாமம் பொலிஸார் மூவரைக்கைதுசெய்தனர். மாட்டு இறைச்சியையும் கைப்பற்றினர்.சந்தேகநபர்கள் மூவரும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். 12 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். (ற-9)


# பணத்தைச் சுருட்டிக்கொண்டு கம்பி நீட்டியவர் மாட்டினார்

### காணாமற்போனவரை மீட்டுத் தருவதாகக் கூறி மோசடி

யாழ்ப்பாணம், ஓக. 2
காணாமல் போனவரை மீட்டுத்தருவதாகக் கூறி பெருமளவு பணத்தைச் சுருட்டிய நபரை யாழ். நகரின் மத்தியில் நேற்றுத் தாம் மடக்கிப் பிடித்தனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ். நீர்வேலி பகுதியில் கடத்தப்பட்டு காணாமல் போன இளைஞர் ஒருவரை மீட்டுத் தருவதாக கூறி அந்த இளைஞனின் குடும்பத்தினரிடம் பெருமளவு பணத்தை பெற்ற சந்தேகநபர் தலைமறைவாகி விட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் நேற்று யாழ். நகரப் பகுதியில் நடமாடியபோது காணாமற்போன இளைஞனின் சகோதரனால் அடையாளம் காணப்பட்டார். பொலிஸாருக்கு அவர் தகவல் வழங்கினார்.
10 வருடங்களின் முன்னர் நீர்வேலியைச் சேர்ந்த அச்சுதன் வைகுந்தன் காணாமற்போனோர் அவரை மீட்டுத் தருவதாகக் கூறிய அதேயிடத்தில் உள்ள மரக்காலையில் வேலைக்கு நின்ற சந்தேகநபர், 2 லட்சத்து 84 ஆயிரம் ரூபாவை அச்சுதனின் குடும்பத்தவரிடம் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் அவர் தலைமறைவாகி விட்டார். அவர் பயன்படுத்திய தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு எடுத்தால் சம்பந்தமேயில்லாத நபர் ஒருவரே பேசினார்.
நீண்ட நாள்களின் பின்னர் சந்தேகநபரைக் கண்டதும் அச்சுதனின் சகோதரன் வழங்கிய தகவலை வைத்து பொலிஸார் அவரைக் கைது செய்தனர். (உ-4,101)

## 10,000 வருடங்களாக கஞ்சாவிற்கு அடிமை மனிதன்

கொழும்பு, ஓக. 2
சுமார் பத்தாயிரம் வருடங்களுக்கு முன்பே மனித இனம் கஞ்சா வினைபயன்படுத்தியுள்ளதாக ஜேர்மனி நாட்டின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
விஞ்ஞானிகள் குழுவினரால் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
சுமார் பத்தாயிரம் வருடங்களுக்கு முன்பே மனித இனம் கஞ்சாவினைப் பயன்படுத்தியுள்ளது, இதே காலப்பகுதியில்தான் ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் கஞ்சா பயன்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது, ஐரோப்பாவில் பனிஉறைவு உருக ஆரம்பித்ததும் இதேகாலப்பகுதியில் தான், அப்போது வாழ்ந்த மக்கள் தமது சுயதேவைக்காக கஞ்சாவை வளர்த்து வந்துள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, அத்துடன் கஞ்சா செடி மூலம் சத்துள்ள ஆகாரம் மற்றும் ஆடைகள், நிர்மாணிப்பிலும் முன்னோர்கள் ஈடுபட்டு வந்துள்ளார்கள்.
3000 வருடங்களுக்கு முதல் மதுசாரம் அறிமுகத்திற்கு முன்னர் மனிதன் கஞ்சாவிற்கே அடிமையாகியிருந்தார்கள் எனவும் ஜேர்மன் விஞ்ஞானிகளின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (21)



## எரிவாயு சிலிண்டர் வெடித்து களுதாவளையில் வீடு சேதம்

களுவாஞ்சிக்குடி வன்னியார் வீதியில் உள்ள வீடு ஒன்றில் எரிவாயு வெடித்ததில் அந்த வீடு முற்றாகச் சேதமடைந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளையில் நேற்று மாலை 3.45 மணியளவில் சம்பவம் இடம்பெற்றறுள்து, செல்லையா ஜீவரத்தினம் என்பவரின் வீட்டில் சமயலுக்குப் பயன்படுத்தப்படும் எரிவாயு சிலிண்டர் வெடித்தது வீடு எரிந்து முற்றாக சாம்பலாகியது. விபத்தில் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை, ஆனாலும் வீட்டிலுள்ள முக்கிய ஆவணங்கள், தொலைக்காட்சிப்பெட்டி, குளிரூட்டி உட்பட அனைத்தும் எரிந்து சாம்பலாகின. (உ-21)

# மண் சட்டி, பானை வியாபாரம் குடாநாட்டில் களைகட்டியது



யாழ்பாணம், ஓக. 2
இந்து மக்கள் ஆண்டு தோறும் கடைப்பிடிக்கும் ஆடி அமாவாசை விரத நாளான இன்றைய தினத்திற்காக நேற்று யாழ். குடாநாட்டில் மண் சட்டி வியாபாரம் சூடுபிடித்திருந்தது.
இன்றைய தினத்தில் மண்ணாலான சட்டி, பானைகளில், சமைத்து உண்பதே பாரம்பரியம். இதனால் திருநெல்வேலிப் பொதுச் சந்தை, யாழ். நகர், சுன்னாகம், மருதனார்மடம், இணுவில் உள்ளிட்ட பகுதிகளில் மண் சட்டி மற்றும் பானைகளின் வியாபாரம் சூடுபிடித்திருந்தது. விரதம் இருப்பவர்கள் மண் சட்டி மற்றும் பானைகளை ஆர்வத்துடன் கொள்வனவு செய்து சென்றனர்.
சந்தைகளில் சிறிய சட்டி ஒன்றின் விலை 50 ரூபாவாகவும் நடுத்தரச் சட்டி ஒரு சோடி 150 ரூபாவாகவும் பெரிய சட்டி ஒரு சோடி 200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது. பல வியாபாரிகள் முல்லைத்தீவு ஒட்டிசுட்டானிலிருந்து மண் கொள்வனவு செய்து, இதற்காகச் சட்டி பானைகளை உற்பத்தி செய்தனர் எனத் தெரிவித்தனர். வியாபாரம் களைகட்டியிருந்தது.
"கடந்த வருடத்தைவிட இந்த வருடம் எமக்கு வியாபாரத்தால் நல்ல இலாபம் கிடைத்தது. ஆடி அமாவாசை விரதம்காரணமாக வியாபாரம் சிறப்பாக இருக்கின்றது" என்று வியாபாரிகள் தெரிவித்தனர். (உ-21)

# கச்சதீவில் புதிய ஆலய கட்டுமானப் பணி தீவிரம்

### நவம்பருக்குள் முடிவடையும்

யாழ்ப்பாணம், ஓக.2
கச்சதீவில் புதிய ஆலயத்தை அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குள் பணிகளை நிறைவு செய்யும் நோக்கில் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.
இலங்கை - இந்தியா இடையிலான கடலில் உள்ளது கச்சதீவு. இந்தியாவில் அதன் உரிமை இலங்கைக்குக் கையளிக்கப்பட்டாலும், தமிழக மீனவர்களுக்கு பாரம்பரிய உரிமைகள் தீவில் உள்ளன. தீவில் அந்தோனியார் ஆலயம் ஒன்றுள்ளது. அது நீண்ட காலத்துக்கு முன்பு கட்டப்பட்டது. இதனால் அங்கு புதிய ஆலயம் ஒன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
சில மாதங்களுக்கு முன்னர் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோது, தமிழகத்தில் கடும் எதிர்ப்புக்கள் கிளம்பின. இதனால் இந்திய நடுவன் அரசு இது குறித்து கொழும்பு அரசிடம் ஆட்சேபம் கிளப்பியது. இதையடுத்து ஆலயக் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. மழை மற்றும் மோசமான கால நிலையால் பணிகள் இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
எனினும் கடந்த ஜூன் மாதம் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு தேவாலயத்தின் கணிசமான கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (உ-101)

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**சிவசம்பு மாணிக்கவாசகர்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் 31.07.2016 அன்று கீரிமலையில் நடைபெற்று வீட்டுக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (03.08.2016)புதன்கிழமை நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமா அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

# நாமலின் நடவடிக்கைக்கு கண்டனம்

கொழும்பு, ஓக. 2
கூட்டு எதிர்க்கட்சியினர் பாதயாத்திரையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் நடவடிக்கைகள் மிகவும் கவலையடைச் செய்தன என்று இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்ன தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு [illegible] தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:
இளம் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச இளைய சமூகத்திற்கு முன்னுதாரணமாக இருக்காமல் பாதயாத்திரையின் போது தறவான வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.
கடந்த ஆட்சியில் நாட்டின் பெரும்பாலான அபிவிருத்திகள் மற்றும் நிலங்கள் என்பன வெளிநாடுகளுக்குத் தாரைவார்த்து கொடுக்கப்பட்டன. நல்லாட்சி அரசு அந்த செயலை முன்னெடுக்காமல் சகல நாடுகளுடனும் கைகோர்த்து செயற்படுகின்றது.
பாதயாத்திரை மேற்கொள்வதன் மூலம் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. கடந்த காலங்களிலும் இதனைப் போன்று பல பாதயாத்திரைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் ஆட்சி மாற்றத்தை கொண்டுவர முடியவில்லை, என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்ன.
கூட்டு எதிர்க்கட்சியில் உள்ள தினேஷ் குணவர்தன உதய கம்மன்பில உள்ளிட்டவர்கள் சுதந்திரக்கட்சியை பிளவுபடுத்துவதையே இலக்காக கொண்டுள்ளார்கள் - என்றார். (உ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் நிலைபற்றி ராஜிதவின் கருத்து

கொழும்பு, ஓக. 2


நியாயத்திற்காகவும், மக்களின் உரிமைக்காகவும் அன்று பாதயாத்திரை சென்ற மகிந்த இன்று குற்றவாளிகளுடனும், பாதாள குழுவினருடனும் பாதயாத்திரை சென்றிருக்கின்றார், இது வேடிக்கையாக உள்ளது. இவ்வாறு சுகாதாரஅமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில்உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்தவின் அன்றைய பாத யாத்திரை ஜனநாயகத்திற்காகவும், மக்களின் உரிமைகளுக்காகவும் அமைந்திருந்தது. இன்று பாத யாத்திரையில் மகிந்தவின் முன்னால் செல்பவர்கள் குற்றவாளிகளாகவும், பாதாள குழுவினரை சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். மகிந்தவின் அரசியல் வாழ்க்கையானது ஆரம்பித்த இடத்திற்கே வந்துவிட்டது" என சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-2)

## மரண அறிவித்தல்கள்

### நல்லையாபிள்ளை செல்வநாயகம்
(நயினாதீவு-4ஆம் வட்டாரம்)




காலஞ்சென்றவர்களானவே.க.கு. நல்லையாபிள்ளை சகுந்தலாதேவி (குஞ்சுக்கிளி) தம்பதியின்மகன் செல்வநாயகம் (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர். முன்னாள் ஆசிரியர். முன்னாள் கிராம சேவையாளர்-கிளிநொச்சி. பிரிட்டன்-நயினாதீவு கல்வி அபிவிருத்தி சங்கஸ்தாபகர்) 30.07.2016 சனிக்கிழமை பிரிட்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா தருமலிங்கம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தருமலிங்கம் நேற்று (01.08.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தின பூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-நாகம்மா தம்பதிகளின் மருமகனும் ஜெகதீஸ்வரன் (கனடா), ஜெகதா, ஜங்கரன் (சுவிஸ்), ஜெகதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதராசா, பாலசிங்கம், கனகேஸ்வரி(கண்ணம்மா), தில்லைச்சிவம், தனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னலட்சுமி, நவரத்தினம், விஜயலட்சுமி, விஜயலட்சுமி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற தேவராசா மற்றும் வசந்தகுமாரி, ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் மைத்துனரும் பாலச்சந்திரன்(உரிமையாளர்-பாலன் சேவிஸ் ஸ்ரேசன்), நிசாந்தினி, றஜிதா, சதீஸ் வரன்(சதீஸ்) ஆகியோ ரின் அன்பு மாமனாரும் டிலக்சனா, பிரவின், லயந்தன், ஜானுசா,ஜனுயன், கிசாந், சஜிதன், கஸ்விகா, இசானிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் கோயிலடி,
புளியங்கூடல் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

# விபத்தில் பெண் காயம்

இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் குடும்பப் பெண் ஒருவர் கையில் காயமடைந்தார்.

சாவகச்சேரி பெருங்குளம் - சங்கத்தானை வீதியில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடந்தது.

வாகன திருத்தகம் முன்பாக வீதியின் கரையில் வைத்து வாகனம் ஒன்று திருத்தம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த பெண் ஒருவர், வீதியில் நிறுத்திவைக்கப்பட்டுத் திருத்தப்பட்டுக் கொண்டிருந்த வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டவேளையில் எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு தூக்கி வீசப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ரு-5-9)

## மரண அறிவித்தல்கள்

### மனோகரன் திவாகரன்



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பத்திர காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் திவாகரன் நேற்று (01.08.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மனோகரன்-ஈஸ்வரி தம்பதிகளின் இளைய புதல்வரும் கரம்பன் முத்தையா-பூபதி மற்றும் வண்ணார்பண்ணை ஐயாத்துரை-சரஸ்வதி ஆகியோரின் பேரனும் கண்ணன், ராதிகா, காலஞ்சென்ற வித்தியா மற்றும் மேனகா, சிந்துஜா ஆகியோரின் சகோதரரும் ராம்குமார்,சுரேந்திரன், சற்குணராஜா, பிரதீபா ஆகியோரின் மைத்துனரும் ராமானுஜா, ரோகித், அனனியா ஆகியோரின் மாமனும் பரணிகாவின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.08.2016) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 4 மணியளவில் தகனத்திற்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.3/7,
பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
மு.மனோகரன்
021 221 3248

குறிப்பு: இன்று பிற்பகல் ஒரு மணிவரை பூதவுடல் இன்பம் மலர்ச்சாலையில் (கோம்பயன் மணல் மயானத்திற்கு அருகில்) வைக்கப்பட்டு இறுதிக்கிரியைக் காக அன்னாரது இல்லத்திற்குக் கொண்டுவரப்படும்.

### சுப்பிரமணியம் தியாகராசா
(கணபதிப்பிள்ளை)



யாழ் தம்பக தம்பி வீதி பழை, வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மல்லாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தியாகராசா (கணபதிப்பிள்ளை) நேற்று (01.08.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம்-தேயுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-இராசம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சிவசோதியின் பாசமிகு கணவரும் மதிவதனி, காலஞ்சென்றவர்களான மதியழகன், மோகனதாஸ், கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீமுருகனின் அன்பு மாமனாரும் லக்ஷிகாவின் (மாணவி, யூனியன் கல்லூரி) பேரனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, அன்னமுத்து, பொன்னுத்துரை, இராசம்மா, இராசரட்ணம், சிவபாக்கியம், அன்னபூரணம், செல்வமணி மற்றும் நாகராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுருநாதன், சிதம்பரநாதன், கணேசன், மாணிக்கவாசகர், காலஞ்சென்ற திருமதி.வ.சுசீலா தேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(03.08.2016) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் மல்லாகம் வேதவுடையார் வளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக அளவெட்டி, மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீமுருகன் குடும்பத்தினர்.
(மருமகன்)

வேதவுடையார் வளவு,
மல்லாகம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாம்பிகை ஐயாத்துரை



தோற்றம் 12.08.1941
மறைவு 31.07.2016

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை ஐயாத்துரை கடந்த (31.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-கதிராசிப்பிள்ளை (முத்தம்மா) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-பொன்னம்மா தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஸ்ரீகணேசலிங்கம் மற்றும் ஈஸ்வரன்லதா ஆகியோரின் அன்புத் தாயாரும் தில்லைநாதன், நடேசபிள்ளை(சுவிஸ்), கமலாசினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லத்துரை (பிரான்ஸ்), அப்புத்துரை, பொன்னுத்துரை, மாணிக்கம், சறோஜினி(சுவிஸ்), கனகராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் தங்கரத்தினம்(பிரான்ஸ்), மீனாம்பிகை, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகலியும் அழகலிங்கத்தின் அன்பு மாமியாரும் றஞ்சித்குமார் (பிரான்ஸ்), லஸ்மியா, பிரசாந், டினேனன், நர்மதன்(சுவிஸ்), ஜெனனி(சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் தர்சி (ஜேர்மனி), தாமிரா(ஜேர்மனி), திவ்யா(ஜேர்மனி), தீபனா(ஜேர்மனி), துவாரகா(ஜேர்மனி), பாஸ்கரன்(பிரான்ஸ்), பவானி(ஜேர்மனி), சாந்தி(பிரான்ஸ்), சித்ரா(கொலன்ட்), சுஜிதரன்(கொலன்ட்), சர்வேசினி(கனடா), தயாபரன்(கொலன்ட்), அனுசன், கிரிசேன், நந்தசுதன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(03.08.2016) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதர்மட ஒழுங்கை,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வன் சுதாகரன் நிதிஷன்
(யாழ்/புனித பரியோவான் கல்லூரி தரம்-07 மாணவன், முன்னாள் வ/மகா வித்தியாலயம் வவுனியா மாணவன்)



வவுனியாவைப் பிறப்பிடமாகவும் 539/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சுதாகரன் நிதிஷன் கடந்த (31.07.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் எந்திரி சுதாகரன் (பிரதிப்பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் கிளிநொச்சி, திட்டப்பணிப்பாளர் இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம்)- ஸ்ரீசுபாஜு (படவரைஞர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்) தம்பதிகளின் அன்பு மகனும் நிஷானி(யாழ் இந்து மகளிர் கல்லூரி), நிதுஷிகா(யாழ்/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவரத்தினம், புவனேஸ்வரி காலஞ்சென்ற முத்துலிங்கம் (தேவி மில் உரிமையாளர், அச்சுவேலி) மற்றும் தேவமலர் ஆகியோரின் பாசமிகு பேரனும் ராஜிதன் (தொழிநுட்ப உத்தியோகத்தர், சுகாதார அமைச்சு கிழக்கு மாகாணம் திருகோணமலை), சரசசெல்வி, ஸ்ரீதேவராசலிங்கம் (உரிமையாளர் செல்வா தியேட்டர் யாழ்ப்பாணம்), ஸ்ரீ சுஜானி, மோகன தாஸ்-ஜெமிமா (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகனும் சுவிஸ்கரன்-சுகிர்தா (லண்டன்), சுகிர்தன்-ஜெகதா (லண்டன்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.539/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் நாளை(03.08.2016) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

539/6, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரசிகர்களுக்கு நன்றி; மத்தியூஸ் உருக்கம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல்டெஸ்ட் ஆட்டத்தில்கிடைத்த வெற்றியையடுத்து ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்தார் மத்தியூஸ்.

கடந்த வருடம் நவம்பர் மாதத்திலிருந்து இந்த ஆட்டம் ஆரம்பமாகும் வரையில் 32 ஆட்டங்களில் பங்குபற்றியிருந்த இலங்கை அணி, 6 ஆட்டங்களில் மட்டுமே வெற்றிபெற்றது. இலங்கை போர்ம் இழந்து தவித்த காரணத்தினாலும், ஆஸ்திரேலியா டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள காரணத்தினாலும் ஆட்டத்தின் முடிவு ஆஸிக்குச் சாதகமாக அமையும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் இலங்கை அணி தனது பழைய நிலைக்குத் திரும்புவதற்கான அறிகுறி தென்பட்டுள்ளதாக எண்ணப்படுகிறது. ஆட்டத்தின் முடிவில் உரையாற்றும் போதே மத்தியூஸ் ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

கடந்த எட்டு மாதங்களின் பின்னர் நெருக்கடியான நிலையில் கிடைத்த தேவையான வெற்றி இது. எமது தோல்விகளால் ரசிகர்கள் ஏமாற்றமடைவதை மிகையாகவே உணர்ந்தோம். இந்த வெற்றி ரசிகர்களுக்கு உரியது. அவர்களுக்கே இதைச் சமர்ப்பிக்கிறோம். ஏனெனில் எமது தோல்விகளிலும் எம்முடன் இருந்தவர்கள் அவர்கள் என மத்தியூஸ் மேலும் தெரிவித்தார். (ம)





# கன்னங்கரா கிண்ணக் கால்பந்தாட்டம் நெல்லியடி மத்தி. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 2

கன்னங்கரா கிண்ணத்துக்கான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்படும் கன்னங்கராவினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 21 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டமொன்றில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கண்டி கெமகெட்டிக் கல்லூரி அணி மோதியது. சாருஜனின் உதவியுடன் ஆட்டத்துடன் இணைந்து நெல்லியடி மத்தியின் ஆதிக்கமும் ஆரம்பமானது. வேறெந்தக் கோல்களும் பதிவாகாத நிலையில் மத்தியின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதற்பாதி.

இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் நெல்லியடி மத்தியின் ஆதிக்கம் மீண்டும் அதிகரித்தது. சிந்துஜன் 7ஆவது, சஜீவன் 12 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இறுதியாட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம-422)

## இந்தியா முன்னிலை

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸின் இரண்டாம் நாள் முடிவில் இந்தியா 162 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 196 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக பிளக்வூட் 62 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் அஸ்வின் ஐந்து இலக்குகளையும் இசாந் சர்மா, மொகமட் சமி இருவரும் தலா இரு இலக்குகளையும், மிஸ்ரா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா முதல் நாள் முடிவில் 126-1 என்றிருந்தது. ராகுல் 75 ஓட்டங்களுடனும், புஜாரா 18 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். 46 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் புஜாரா. மறுமுனையில் சதம் விளாசினார் லோகேஸ் ராகுல். கோக்லியும் சிறப்பான ஆட்டம். ஆனால் 6 ஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிடவும் செய்தார். 158 ஓட்டங்களுடன் லோகேஸ் ராகுலை வீழ்த்தினார் கபிரியேல். ரகானே, சகா இணைய இரண்டாம் நாள் முடிவில் இந்தியா 358-5 என்றுள்ளது. (ம)



ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருட பருவகாலம் விரைவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான ரொனால்டோ தனது அணியுடன் இணைந்தார். நடப்பு வருட யூரோக் கிண்ணத் தொடரை ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணியே வென்றது. (ம)

# கிண்ணத்தை தனதாக்கியது மன்னார் மாவட்டம்

மாவட்டங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் யாழ். மாவட்ட அணியை வீழ்த்தி சம்பியனானது மன்னார் மாவட்ட அணி. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதியது. நீண்ட போராட்டத்தின் மத்தியில் வாய்ப்பு கிடைப்பதும், கிடைத்த வாய்ப்பை வீணாக்குவதுமாக கோல் கணக்கு இல்லாமல் முடிந்தது முதல்பாதி. இரண்டாம்பாதியின் 15ஆவது நிமிடத்தில் மன்னார் மாவட்ட அணிக்கு மூலை உதையொன்று கிடைத்தது அதனை ரொபேட் உதைக்க ரஞ்சா கோலாக மாற்றினார். இறுதிவரை பதிலடி கொடுக்கப்படாதபாடுபட்டது யாழ். ஆனால் முயற்சி பலனளிக்காது போக 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது மன்னார் மாவட்ட அணி. (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயனார் அபாரம்

யாழ்ப்பாணம், ஓக. 2
மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் துறையூர் ஐயனார் அணி வெற்றிபெற்றது.

இருதயராஜாவின் மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. இதில் துறையூர் ஐயனார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## வென்றது வளர்மதி

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 2
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், புத்தூர் வளர்மதி அணி வென்றது.

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:16, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய புத்தூர் வளர்மதி அணி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## போராடி வென்றது நசரேத் வி.கழகம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 2
மெலிஞ்சிமுனை இருதயராஜா வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நசரேத் அணி வெற்றிபெற்றது.

இருதயராஜாவின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், புங்குடுதீவு நசரேத் அணியை எதிர்த்து நயினாதீவு அண்ணா அணி மோதியது. இதில் நசரேத் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# சம்பியனானது விநாயகர் கலைமகளை தோற்கடித்து

யாழ்ப்பாணம், ஓக. 2
சுன்னாகம் கிழக்கு அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் விநாயகர் அணி சம்பியனானது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமகள் அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் ஆரம்பம் கலைமகளுக்கு சாதகமாகவே அமைந்தது. முதல் செற்றை 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் அந்த அணி கைப்பற்றியிருந்தது.


ஆனால், சரிவிலிருந்து மீண்ட விநாயகர் அணி அடுத்த மூன்று செற்களையும் முறையே 25:22, 25:17, 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (422)

## சிவன் முன்னேற்றம்

கரணவாய், ஓக. 2
மல்லாகம் சிறிமுருகன் வி.கழகம் மாவட்ட ரீதியில் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம் முன்னேற்றம் கண்டது.

சிறிமுருகன் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், குப்பிளான் விக்னேஸ்வரா அணியை எதிர்த்து சாவகச்சேரி சிவன் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிவன் அணி நிர்ணயிக்கப்பட்ட 5.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது.

50 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வரா அணி, அபலினின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது திணறியது. அபல் ஹற்றிக் சாதனை படைக்க, விக்னேஸ்வராவின் ஆட்டம் வெறும் 6 ஓட்டங்களில் முடிவுகண்டது. ஆட்டநாயகனாக அபல் தெரிவானார். (ம-108)


ஆட்டநாயகனான அபல்

## ரியோ ஒலிம்பிக் தொடரில் வாய் திறக்கவும் தடையாம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்கள் அல்லாத அனுசரணையாளர்களுக்கும், வீரர்களுக்கும் பெரும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஓகஸ்ட் 5ஆம் திகதி ஒலிம்பிக் தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில், தொடரில் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்கள் அல்லாதவர்களுக்கும் வீரர்களும் ஒலிம்பிக் சம்பந்தப்பட்ட சொற்களைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. வெற்றி, தோல்வி, சாதிப்பு, சாதனை, பதக்கம், பிரேஸில், ரியோ டி ஜெனிரோ, வேகம், விவேகம், ஏமாற்றம் ஆகியன தடை செய்யப்பட்ட சொற்களில் உள்ளடங்கும் ஒரு சிலவாகும். (ம)

## தெல்லிப்பழை பனை தென்னை கூ.ச. கரப்பந்தாட்டத் தொடரில் சம்பியன்



யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பனைதென்னைகூட்டுறவுச்சபை அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சபை அணியை எதிர்த்து தெல்லிப்பழை பனை தென்னை கூட்டுறவுச்சபை அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:13, 25:01 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய தெல்லிப்பழை பனை தென்னை கூட்டுறவுச்சபை அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் சம்பியனானது. (ம-23)


வவுனியா மாவட்டத்துக்கான கிரிடா சக்தி நிகழ்ச்சித் திட்டம், வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ம-402)

## ஆவரங்கால் இந்து. அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 2
மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் இரு பிரிவுகளாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியன்.

மோகனதாஸ் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது. முதல் செற்றை 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது இந்து. இரண்டாவது செற்றை 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி, பதிலடி கொடுத்தது மத்தி. ஆனால், மூன்றாவது, நான்காவது செற்களை முறையே 25:20, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி முடிவில் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடி வென்றது பாடும்மீன்

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் வெற்றிபெற்றது பாடும்மீன் அணி.
மேரிஸின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் எந்தவொரு அணியும் கோல் எதையும் பெறாத காரணத்தினால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது குருநகர் பாடும்மீன் அணி. (ம-23)

**வீடு வாடகைக்குத் தேவை**
சிறிய வைத்தியக் குடும்பம் ஒன்றிற்கு யாழ் மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு.0776701453

**வேலையாள் தேவை**
புடைவை நிலையம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண் வேலையாள் தேவை.
தொடர்பு.0212228383

**அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை
V2 TRAVELS

# தேசியச் சம்பியனானது பற்றிக்ஸ் அனுராதபுரம் மத்தியை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஓக. 2
கொழும்பு சென். ஜோசெப் கல்லூரி அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கான தேசியமட்ட கால்பந்தாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வாகை சூடியது.
சென். ஜோசெப் கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து அனுராதபுரம் மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது சென். பற்றிக்ஸ் அணி. (ம-23)



**வேலையாள்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல உணவகம் ஒன்றிற்கு தங்கி நின்று பணிபுரியக்கூடிய வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.
- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண், முழுநேரம்/பகுதி நேரம்).
- முன்னனுபவம் உள்ள சமையல் உதவியாளர் (ஆண்/பெண்).
- காசாளர்(ஆண்கள்/பெண்கள்).
- தோசை, பூரி, சப்பாத்தி, பரோட்டா, வடை தயாரிப்பதில் முன்அனுபவம் வாய்ந்த சமையலாளர்.
- சுத்திகரிப்பு பணியாளர்.
- பகுதி நேரம் வேலை செய்வதாயினும் விரும்பத்தக்கது.
- பாதுகாப்பான வசதியான தங்குமிடம் மற்றும் சுத்தமான உணவு இலவசம்.


தொடர்பு.0777911219

# ஏகப்பட்ட சாதனைகள் படைக்கப்பட்ட இலங்கை, ஆஸி. முதலாவது டெஸ்ட்

இலங்கைக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி 106 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. மட்டுமல்லாமல் தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையிலும் பல சாதனைகள் படைக்கப்பட்ட ஆட்டமாக இந்த ஆட்டம் மாறியுள்ளது.



ஆட்டநாயகனுக்கான விருதை வென்ற குசல் மெண்டிஸ் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இலங்கையர் ஒருவர் பெற்ற இரண்டாவது அதிக ஓட்டங்கள் என்ற சாதனையைப் படைத்தார். அரவிந்த டி சில்வா பெற்ற 167 ஓட்டங்களையே அவர் முந்தினார். 192 ஓட்டங்களுடன் சங்கா முதலிடத்தில் உள்ளார். மட்டுமல்லாமல் 21 வயதேயான மெண்டிஸ் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 150 ஓட்டங்களைப் பெற்ற இரண்டாவது இளைய வீரராக மாறினார். முதலிடத்தில் தென்னாபிரிக்காவின் கிரேம் பொலக் உள்ளார். அவர் 19 வயதில் சதத்தை விளாசினார்.
இந்த ஆட்டத்தின் நான்காவது இன்னிங்ஸில், இலங்கையின் ரங்கன கேரத், 5 இலக்குகளைக் கைப்பற்றினார். இது, நான்காவது இன்னிங்ஸில் அவர் கைப்பற்றிய 7ஆவது 5 இலக்குப் பெறுதியாகும். முரளிதரன், ஆஸ்திரேலியாவின் வோர்ண் இருவரும் 7 தடவைகள் இவ்வாறு கைப்பற்றியுள்ளனர். அவர்களை கேரத் சமன் செய்தார்.
நான்காவது இன்னிங்ஸில் 9ஆவது இலக்குக்காக ஆஸ்திரேலியாவின் பீற்றர் நெவில், கெபி இருவரும் இணைந்து 178 பந்துகளைச் சந்தித்து நான்கு ஓட்டங்களை மாத்திரம் பகிர்ந்தனர். இதன் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பந்துகளைச் சந்தித்து, குறைந்த ஓட்ட வீதத்தில் (பந்துப்பரிமாற்றத்துக்கு) பெறப்பட்ட இணைப்பாட்டம் என்ற சாதனையை அவர்கள் படைத்தனர்.
இந்த ஆட்டத்தில் அறிமுகத்தை மேற்கொண்ட சன்டகன் 107 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளைக் கைப்பற்றினார். இடதுகை வெளித்திரும்பல் பந்துவீச்சாளர் ஒருவர், தனது டெஸ்ட் அறிமுகத்தில் பெற்ற சிறப்பான பெறுபேறு இதுவாகும். (ம)




# மீண்டும் வென்றார் ஹமில்டன்

நடப்பு வருட கார்பந்தயத் தொடரின் 12 ஆவது சுற்றான ஜேர்மனிய சுற்றில் வாகை சூடினார் மெர்சிடஸ் அணியின் ஹமில்டன்.
இந்த ஆண்டுக்கான கார்பந்தயத் தொடர் 21சுற்றுக்களாக நடத்தப்படுகிறது. இதன் 12 ஆவது சுற்று ஜேர்மனியில் உள்ள ஹாக்கென்ஹீம் ஓடுதளத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. 306 கிலோமீற்றர் தூரமுடைய பந்தயத்தை ஒரு மணித்தியாலயம் 30 நிமிடம் 44 செக்கன்கள் 20 மில்லி செக்கன்களில் அடைந்து சம்பியனரானார் ஹமில்டன். அவரைவிட 10 செக்கன்கள் பின்தங்கிய ஆஸ்திரேலிய வீரர் டானியல் ரிச்சியர்டோ இரண்டாவது இடத்தைப் பிடித்தார். முதலிடத்திலிருந்து பந்தயத்தை ஆரம்பித்த ரஸ்பேர்க் நான்காவது இடத்தைக் கைப்பற்றினார்.
முடிவடைந்த முதல் 12 சுற்றுக்களின் அடிப்படையில் 217 புள்ளிகளுடன் ஹமில்டன் முதலிடத்தில் உள்ளார். 198 புள்ளிகளுடன் ரஸ்பேர்க் இரண்டாவது இடத்திலும், 133 புள்ளிகளுடன் ரிச்சியர்டோ மூன்றாவது இடத்திலும் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.